கல்கி

KALKI 23.8.92 ரூ. 3.00



குஷ்பு

பேட்டி


BPL
புதிய பிபிஎல்-அஜித் 1404
ப்ளாக் & ஒயிட் போர்ட்பிள் டிவி
இந்தியாவிலேயே அதிக விற்பனை யாகும் ஒரே ப்ளாக் அண்டு ஒயிட் டிவி அஜித் 410. இதனை தயாரிப் பவர்கள் வழங்கும் மற்றுமொரு அரிய படைப்பு பிபிஎல் அஜித் 1404. சர்வதேச தரத்தோடு கூடிய 36 செ.மீ. டெலிவிஷனில் அற்புதத்தை கண்டு களியுங்கள். மோனிட்டர் ஸ்டைல் தோற்றம், டச்ட் ட்யூனர் ... போன்றவை விசேஷ அம்சங்கள்.
• SMPS - கலர் டிவியில் கிடைக்கும் முக்கிய அம்சம். - வோல்டேஜ் ஸ்டெபிலைசர் இதற்கு தேவையில் லாததால், பாதுகாப்போடு உங்களுக்கு கிடைப்பது சேமிப்பும் கூட. 110Vக்கு வோல்டேஜ் குறைந்த போது கூட, துல்லியமான படக் காட்சி கிடைக்கும். குறைந்த பட்ச 65Vவிலும் உங்களுக்கு தெளிவான ஆனால் சற்று அளவு குறைந்த படக்காட்சி கிடைக்கும். • 12V DC யில் செயல்புரிகிறது.
• வண்ணமான மெனல்டட் கேபினெட்.
• விசிஆர் இணைப்பு
• இணையற்ற படக்காட்சி.
மேற்கூறிய சிறப்பு அம்சங்களைக் கொண்டு கிடைக்கக் கூடிய பிபிஎல் அஜித். உங்களோடு இணைந்து வாழ் நாள் முழுவதும் உழைக்கக்கூடியது.
SMPS
ஏற்ற தாழ்வான மின்சாரத்திலிருந்து முழுமையான பாதுகாப்பு
மனதிற்கினிய ஒலி
பிபிஎல்-அஜீத்தின்
ஒளி
KAMERAD NEWS/BPL-186-92 TAM

முடுக்கிவிடப்பட்ட மூப்பனார்

ரயிலில் டிக்கெட் எடுக்காமல் ஏறிய ஓர் இளம் பெண்ணை, குடிபோதையில் இருந்த



★ கவரிமான் தர முடியாததால் அதற்குப் பதில் சாதா மான் பரிசை மூப்பனாருக்கு வழங்குகிறவர்கள் இளைஞர் காங்கிரஸ் தலைவர்கள், வெற்றிவேல், தியாகராஜன்.

போலீஸ்காரர் ஒருவர் தவறான நோக்கத்தில் ஸ்டேஷனில் இறங்கச் சொன்னாராம். பெண் உதவி கேட்டுக் குரல் கொடுக்க, பெட்டியில் யாரும், கண்டுகொள்ளவே இல்லையாம். இதைப் பார்த்து வெகுண்டெழுந்த ஒரு பெரியவர், ''என்னய்யா காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் போல் பேசாமல் இருக்கிறீர்கள்?'' என்று சப்தம் போட்டாராம். இந்தக் கதையைச் சொன்ன பீட்டர் அல்போன்ஸ், ''பார்த்தீர்களா, நமது நிலையை'' என்று பரிதாபமாகக் கேட்டார்.

மூப்பனார் கோஷ்டியினர் நடத்திய ஆகஸ்ட் புரட்சி பொன் விழா நிகழ்ச்சிக்கு நல்ல கூட்டம். தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து வேன், கார், பஸ் ஆகியவற்றில் பிரமுகர்கள் வந்திருந்தார்கள். கோடம்பாக்கம் பாலத்திலிருந்தே தோரணங்கள், வரவேற்பு தட்டிகள் என்று ஜமாய்த்து விட்டார்கள்.

காலை முதலே பேசிய அனைவரும் தமிழக காங்கிரஸ் தலைமையின் அடிமை புத்தியைக் கிண்டலடித்தும், குத்திக்காட்டியும் பேசினார்கள். 'இனி தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி யாருடனும் கூட்டுச் சேரக் கூடாது' என்றும், 'ராஜீவ் காந்தி தியாகத்தால் பெற்ற வெற்றியை இல்லையென மறுக்கும் ஜெ. ஆட்சியைக் கடுமையாக எதிர்க்க வேண்டும்' என்றும் ஒவ்வொரு பேச்சாளரும் பேசிக் கொண்டிருந்தனர். அனைத்தையும் மேடையின் ஓரத்தே அமர்ந்து மூப்பனார் கேட்டுக் கொண்டிருந்தார்.

தி. மு. க. வில் வை. கோபால்சாமிக்கு ஒரு கவர்ச்சி இருப்பது போல காங்கிரஸில் சட்டமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸுக்கு ஒரு செல்வாக்கு இருப்பது அன்று தெரிந்தது. ''காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களின் நிலை, மிகக் கேவலமாக இருக்கிறது'' என்ற பீட்டர், ''ஆளும் கட்சிக்காரர்களை மட்டும் ஆலயப் பாதுகாப்புக் குழுக்களில் போட்டிருக்கிறீர்கள்; ஆனால் எங்களைப் போன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களை ஏன் போடவில்லை?'' என்று சட்டமன்றத்தில் கேட்டால், அ. தி. மு. க. காரரை விட, எங்கள் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்தான் வேகமாக எழுந்து, எங்களை உட்காரச் சொல்கிறார்! இப்படியொரு நிலை இருந்தால், எங்கள் கட்சி ஒரே கருத்தை எப்படி பிரதிபலிக்க முடியும்?'' என்று கேட்டார். ''ஆக, முதலில் நமது வீட்டைச் சரிசெய்த பின்தான் காங்கிரஸ் சுயமாகச் செயல்படுவதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்'' என்றார் பீட்டர்.

எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பி. வழக்கமான அவரது பாட்டான 'எதிரிக்கட்சியாகச் செயல்பட மாட்டோம். ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம்' என்று பேசியதைத் தொண்டர்கள் ரசிக்கவில்லை என்பது அவர்களது கோஷத்திலிருந்து புரிந்தது. வெளிப்படையாக அ. தி. மு. க. அரசை எதிர்த்துப் பேசுவார் என்று எதிர்பார்த்து

வந்தவர்களுக்கு. அவர் வார்த்தைகளைப் பூசி மெழுகியது ஏமாற்றத்தை அளித்திருக்கும்.

கடைசியாகப் பேச வந்த மூப்பனாருக்கு 'மானத்தோடு வாழ்வோம்' என்று கோஷம் போட்டு, மான்குட்டி ஒன்றைப் பரிசளித்தார்கள் இளைஞர் காங்கிரஸ் தலைவர்களான வெற்றிவேலும், தியாகராஜனும்.


''காலையிலிருந்து எல்லோரும் எனக்கு நன்றாக Key கொடுத்து வைத்திருக்கிறீர்கள். இனிமேலும் Key கொடுத்தால் பிரச்னைதான்'' என்று நகைச்சுவையாக ஆரம்பித்தார் மூப்பனார்.

''தமிழ்நாட்டில் காங்கிரஸை வளர்ப்பதற்கு இன்னொருவர் அனுமதி தேவையில்லை. மானத்தோடு, மரியாதையோடு வாழ வேண்டும் என்றால், 'ஏன்?' என்று 'சிலர்' கேட்கிறார்கள். இதைச் சொல்லக் கூட நமக்கு உரிமையில்லையா? சுயமாகச் செயல்பட மேலிட அனுமதி வேண்டுமென்கிறார்கள். தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியை வளர்க்கும் முயற்சியை மேலிடம் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளும். கூட்டுறவு சங்கத்தில் போலி உறுப்பினர்கள் சேர்ப்பது போன்ற கோல்மாலில் ஆளும் கட்சியினர் சமீபத்தில் இறங்கிய போது, பிரதமரின் கவனத்துக்கு விஷயத்தைக் கொண்டு சென்றோம். அப்போது பிரதமர் 'எதிர்த்துப் போராடுங்கள்' என்றுதான் சொல்லியிருக்கிறார். ஆகையினால் அநியாயமான விஷயங்களைக் காங்கிரஸ் நண்பர்கள் தட்டிக் கேட்டால் மேலிடம் நிச்சயம் ஆதரவு கொடுக்கும்'' என்று சொன்ன மூப்பனார், கூட்டணி கட்சிகளிடையே, ''பெரிய அண்ணன் மனப்பான்மை'' (Big Brother attitude) வரக் கூடாது என்றார்.

அதே நாளன்று வாழப்பாடியார் தியாகராய நகரில் கூட்டம் போட்டு, ''தி.மு.க.வுக்கு இனி வாய்ப்பு இல்லை. அ. தி. மு. க. வுக்கு மாற்று காங்கிரஸ்தான்'' என்று முழங்கியிருக்கிறார். மூப்பனார், காங்கிரஸை வளர்க்க ஊருக்கு ஊர் ''தேசியப் பேரவை'' ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்று வெளியிட்ட அறிவிப்பு, வாழப்பாடி கோஷ்டிக்கு 'அவல்' கிடைத்தது போல ஒரு நிலைமையை உருவாக்கியிருக்கிறது. அந்த கோஷ்டி எம். எல். ஏக்கள் பிரதமருக்கு மந்திரிகள் பருக், அருணாசலம், ஆகியோரை நீக்க வேண்டும் என்று தந்தி அடித்து கோதாவில் இறங்கியிருக்கிறார்கள். விறுவிறுப்பான அடுத்த ரவுண்டுக்குக் காங்கிரஸ் களம் தயாராகி விட்டது.

– ப்ரியன்

படங்கள் : ராஜன்





* பகிரங்கக் குற்றச்சாட்டுகள்



* தோல்வியிலும் துவளவில்லை

வேலை செய்யாமலே ஐந்து வருடம் சம்பளம்!

சார்மினார் சானல்!

●● ஆந்திர அரசு 12 தனியார் மெடிக்கல் காலேஜ்களுக்கு அனுமதி தந்திருக்கிறது. இது பெரிய சர்ச்சையைக் கிளப்பி இருக்கிறது. 'இந்திய மருத்துவர் சங்க அனுமதி இல்லை, மத்திய அரசின் ஒப்புதல் இல்லை' என்ற குற்றச்சாட்டுகள் விசுவரூபமெடுத்துள்ளன. முதல்வர் ஜனார்த்தனன் ரெட்டியின் உட்கட்சி எதிர்ப்பாளர்கள் அவரை 'ஆந்திராவின் ஹர்ஷத் மேத்தா' என்று பொதுக் கூட்டங்களில் விமர்சிக்கிறார்கள். பிரதமரின் நெருங்கின நண்பர் ஜெகந்நாதராவ் நகரின் இடைத் தேர்தலில் தோற்றதற்கு ஜனார்த்தனன் ரெட்டியின் சூழ்ச்சிகள் காரணம் என்று பகிரங்கக் குற்றச்சாட்டுகள். பிரதமரும் நேரடியாகத் தாக்கிப் பேசினார். முதல்வரை மாற்றக் கோரி அதிருப்தியாளர்கள் டெல்லியில் முகாம்.

●● காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், ஹைதராபாத் சகோதரர்களை ஆஸ்தான பாடகர்களாக நியமித்திருக்கிறார். சேஷாச்சாரி தனியார் கம்பெனி உத்யோகம். ர்ாகவாச்சாரி ஆல் இந்தியா ரேடியோவில் மிருதங்க வித்வான்.

●● ''சாம்ராட் அசோகா'' தோல்வி என். டி. ஆரைச் சினிமா ரசிகர்களிடமிருந்து ரொம்ப தூரம் துரத்தி விட்டது. என்றாலும் ஓயப் போவதில்லை என்கிறார். ''இரண்டு படங்கள் இன்னும் கைவசம். ஒன்று சமூகப் படம். இன்னொன்று கவி சருவபூமஸ்ரீநாதாவைப் பற்றினது. இரண்டையும் டிசம்பருக்குள் முடித்து விட்டே, சினிமாவிலிருந்து விலகுவேன்'' என்கிறார்.




* ஆஸ்தான பாடகர்கள்

●● கரீம்நகர் ஸ்ரீராம்சாகர் புராஜக்ட் திட்டத்தில் சுமார் 1500 ஊழியர்கள் வேலை எதுவும் செய்யாமலேயே ஐந்து வருடங்களாகச் சம்பளம் பெற்று வருகிறார்கள். 20 கோடி ரூபாய் செலவாகி உள்ளது. அத்திட்டத்தின்படி கால்வாய்களை வெட்டுவது தொடங்கப்படாமலேயே ஐந்து வருஷங்கள் ஓடி விட்டன.

●● நக்சலைட்டுகள் பற்றின படங்கள் வருஷத்திற்கு இரண்டாவது வெளியாகும். வரவேற்பும் இருக்கும். சமீப படம் ''லால் சலாம்'' (செவ் வணக்கம்). ஏழு முறை சென்சார் செய்யப்பட்டது இது! சென்ற ஆண்டு கண்டூரில் நடந்த உயர்ஜாதி இந்துக்கள் - ஹரிஜனங்கள் மோதலை அப்பட்டமாகப் படம் பிடித்துள்ளது. படத்தில் வழக்கம் போல் நக்சலைட்டுகள் வன்முறைக்கு மூலகாரணமான உள்துறை அமைச்சர், எம்.எல்.ஏ. மற்ற முக்கியஸ்தர்களைச் கட்டுக் கொன்று, பழிவாங்குகிறார்கள். ''கம்யூனிசம் செத்துப் போச்சன்னு எவன்டா சொன்னது?'' என்ற முழு நீளப் பாட்டொன்றும் இருக்கிறது.

●● பள்ளிக் குழந்தைகள் அதிக பாரமான புத்தகங்கள், நோட்டுகளைச் சுமப்பதால் அவர்களின் உடல் வளர்ச்சி பாதிப்பு அடைவதைச் சுட்டிக்காட்டி, கல்வி அமைச்சர் பள்ளிகளுக்குக் குறைந்த புத்தகங்களுடன் குழந்தைகளை வரச் சொல்ல வேண்டும் என ஆணை பிறப்பித்தார். பள்ளிகள் அக்கறை காட்டவில்லை. கடுமையான நடவடிக்கை எடுக்கப் போவதாகப் பிரதமரின் மகன், கல்வி அமைச்சர் ரங்காராவ் எச்சரிக்கை செய்திருக்கிறார்.

– அப்பன்


அன்று
தலை
மேல்...
இப்போது...
வெளியேற்றப்
பட்ட
8 எம்.பி.
க்கள்
வெளியேறி
விட்ட
12 எம்.பி.
க்கள்
தமிழ்நாடு
காங்கிரஸ்
அய்யய்யோ...
இடிக்கிறானே,
இடிக்கிறானே...
தேசியப்
பேரவை
வீட்டை ரிப்பேர்
பார்த்து கட்டுவாங்க
ஆக்கிடுவோம்...
மூப்பனார்
வாழப்பாடி
ம்... என்னமோ
நடக்குது...
ராஜினாமா தான்!
அக்காரா சாமிக்கே
வாங்க மாட்டேன்.
கிராது...
ராமதாஸ்
என்னங்க,
இப்படித்
திடீர்னு...
ஒரு பூனைப்படை
இல்லாமே...
ஒரு முன்னறிவிப்பு
இல்லாமே...
சும்மாதான்
உங்களைப்
பார்த்துவிட்டுப்
போனாங்க...
கேசரி



கல்கி



1992
ஆகஸ்டு 23
மலர் : 51
இதழ் : 4
ஆங்கீரச
ஆவணி 7

புரட்சிக்குப் பொன் விழா!

ஆகஸ்டு புரட்சியின் பொன் விழாவைப் பிரதமரே முன்னின்று நடத்தி வைத்து விட்டார்!

தலைவர்கள் பலர் உணர்ச்சி பொங்கப் பேசித் தீர்த்தார்கள்!

70 – 80 வயதான பல சுதந்திரப் போராட்டத் தியாகிகளை அழைத்துப் பாராட்டி முடித்தாயிற்று!

அருணா அசப் அலிக்கு நேரு விருது கொடுத்து கௌரவித்தாகி விட்டது!

லதா மங்கேஷ்கர் தேசபக்திப் பாடல்களைப் பாட, எல்லாரும் கர்சீப்பை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டாயிற்று!

அப்புறமென்ன? கடமை முடிந்தது; ஜனகணமன பாடி விட்டுக் கலைய வேண்டியதுதான்!

''இன்று நிலைமை சரியில்லை'' என்று ஒப்புக் கொள்கிறார் பிரதமர். ''எதிர்காலத்தை நல்லபடியாக உருவாக்கக் கடந்த கால சரித்திரத்திலிருந்து பாடம் கற்றுக் கொள்ளுங்கள்'' என்கிறார் மக்களைப் பார்த்து.

'மக்கள் கற்றுக் கொண்டால் போதுமா? தலைவர்கள் ஏதும் கற்றுக் கொள்ள வேண்டாமா?' என்பதுதான் மக்கள் பதிலுக்கு எழுப்பும் கேள்வி!

வெள்ளையனே வெளியேறு காலத்திய தலைமை எப்படி இருந்தது? இன்று எப்படி இருக்கிறது? ஒரு காந்திஜி, ஒரு நேருஜி, ஒரு ராஜாஜி, ஒரு பட்டேல், ஒரு ஆஸாத், ஒரு பிரசாத் – இவர்களுடைய கால் தூசுக்குச் சமானமான ஒரு தலைவராவது இன்று காணப்படுகிறாரா? மக்களிடம் மதிப்பும் மரியாதையும் பெறக்கூடிய தலைவர்கள் எங்கே?

ஒருவர் மத்திய வர்த்தக அமைச்சராக இருந்து கொண்டே ஷேர் மார்க்கெட்டில் விளையாடுகிறார். ''ஒரு தப்பும் செய்யவில்லை'' என்று வாதாடுகிறார். ஒரு மாநில முதல்வர், அரசு நிலத்தைக் கொள்ளை மலிவாகச் சொந்த நிறுவனத்துக்கு வாங்கிக் கொண்டு, ''எல்லாம் சட்டப்படிதான் நடந்திருக்கிறது; ஒரு தவறும் இல்லை'' என்று எதிர்ப்பை அடக்குகிறார்... இப்படி ஒன்றா, இரண்டா? பக்கம் பக்கமாகப் பட்டியல் விட்டுக் கொண்டே போகலாம். செயின்ட் கிட்ஸ் விவகாரத்தில் தூதரக அதிகாரிகளைத் தவறு செய்யத் தூண்டிய ஒருவரால், இவர்களை எப்படி தட்டிக் கேட்க முடியும்?

மக்களிடம் ஒரு குறையுமில்லை. அவர்களுக்கு தேசபக்தி இருக்கிறது; உழைப்பார்வம் இருக்கிறது; நாடு, தொழில் – பொருளாதாரத்தில் சிறக்கா விட்டால் அவதிப்படப் போவது நாம்தான் என்று உணரும் புத்திசாலித்தனமும் இருக்கிறது. இல்லாதது ஒன்றுதான். அது வழிநடத்திச் செல்லத் தேவையான வணக்கத்துக்குரிய தலைமைதான். வெள்ளையனே வெளியேறு காலத்திய தலைமையை இன்று உருவாக்குவதில் நரசிம்மராவ் வெற்றி பெற்றால், மக்களும் ஆவேச வெறி கொண்டு இன்று ஏழ்மையை வெளியேற்றுவார்கள், பிரிவினை சக்திகளை வெளியேற்றுவார்கள், ஜாதிமத துவேஷங்களை வெளியேற்றுவார்கள், படிப்பறிவு என்ற பம்மாத்து வேலையை விரட்டி, மெய்யான கல்வி அறிவைப் பெற்றுச் சிறப்பார்கள். உண்மையான சுதந்திரத்தைப் பெறுவார்கள்.

ஆனால் இன்றோ மக்களை ஒரு மகத்தான சோர்வுதான் ஆட்கொண்டிருக்கிறது. 'நம் உழைப்பெல்லாம் வீண்; நாம் கட்டும் வரியெல்லாம் ஆடம்பரச் செலவுகளில் விரயமாகிறது; தலைவர்களிடம் நேர்மையில்லை; எங்கு பார்த்தாலும் மோசடி, லஞ்ச ஊழல்; நாம் எதற்காக உழைத்துப் பாடுபட வேண்டும்? பாடுபட்டுப் பயன்தான் என்ன?' என்பது போன்ற விரக்தி எண்ணங்கள் மக்களைப் பிடித்திருக்கின்றன. இதை நீக்கினாலன்றி தேசம் முன்னேறவே முடியாது.

ஆகஸ்டுப் புரட்சியின் பொன் விழா தினத்தில் பிரதமர் மக்களுக்கு அறிவுரை வழங்குவதற்குப் பதில், பல கட்சிகளைச் சேர்ந்த முக்கியமான மத்திய – மாநிலத் தலைவர்களை அழைத்திருக்க வேண்டும்; எல்லோருமாகச் சேர்ந்து, 'தன்னலத்தை அடியோடு ஒதுக்குவோம், அற்பமான வேற்றுமைகளை மறந்து எல்லோரும் சேர்ந்து தேச நலனுக்கே முழு மூச்சுடன் பாடுபட்டு, மக்களின் ஒத்துழைப்பையும் பெறுவோம்' என்று சத்தியப்பிரமாணம் எடுத்திருக்க வேண்டும். இதைச் செய்திருந்தால் மக்களுக்குக் கொஞ்சமாவது நம்பிக்கை பிறந்திருக்கும்; வழிகாட்டியாவது போலும் இருந்திருக்கும்.

இதை விட்டு விட்டு, 'மக்களே பாடம் கற்றுக் கொள்ளுங்கள்!' என்று பிரதமர் சொன்னால், 'நாங்கள் நிறையவே கற்றுக் கொண்டாயிற்று; முதல் பாடம், தலைவர்களை நம்ப முடியாது என்பதுதான்' என்றே மக்கள் பதிலுரைப்பார்கள்!

...மிழ்த்திரு
...டுதன்னைப் பெற்ற
...வென்று கும்பிடடி
...ப்பா. - பாரதியார்.



கல்கி பொன்விழா தொடக்க நிகழ்ச்சிக்குப் பின் நடைபெற்றது ஒரு பட்டி மன்றம். இந்திய நாட்டின் எதிர்காலம் - இருள்மயமா? அல்லது ஒளிமயமா? என்பது தலைப்பு. நடுவர் பொறுப்பில் சாலமன் பாப்பையா. நகைச்சுவை அருவியாய்ப் பொழிந்தது. கருத்துக்களின் மோதலில் ஆவேசம் பொங்கியது. கரங்களின் மோதலில் அரங்கமும் அதிர்ந்தது.

இருள்மயமே!

பேராசிரியர் தா.கு. சுப்பிரமணியன் :

நாட்டின் எதிர்காலம் இருள்மயமாகத் தோன்றுகிறது. தொழில் துறையில் தேக்கம்; ஏற்றுமதி குறைந்து விட்டது. பணவீக்கம் பெருகிவிட்டது. வேளாண் துறை உற்பத்தி அதிகரிப்பு மூன்று சதத்திலிருந்து பூஜ்யமாகிவிட்டது. இதையெல்லாம் நான் சொல்லவில்லை. மத்திய அரசின் நிதி அறிக்கை கூறுகிறது.

விலைவாசியை எடுத்துக் கொள்ளுங்கள். 'விலைவாசி' என்று ஏன் அதற்குப் பெயர்? விலையை வாசித்துவிட்டுப் போய்விட வேண்டும். அப்படித்தான் இருக்கிறது விலைவாசி.

வளர்ச்சி என்பது மக்கள் தொகையில் மட்டும்தான்! எண்பத்தியெட்டு கோடி! ஒரு காலத்தில் குழந்தை வேண்டும் என்று நாம் அரசைச் (மரத்தை) சுற்றினோம். இன்று அரசு நம்மைச் சுற்றி வருகிறது. நிறுத்துங்கள்! நிறுத்துங்கள் என்று!

லஞ்ச ஊழலைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அலுவலகக் கதவுகளில் ''தள்ளு'' ''இழு'' என்று எழுதியிருக்கிறார்கள். அதற்கு என்ன அர்த்தம்? தள்ளவேண்டியதைத் தள்ளினால், இழுக்க வேண்டியதை இழுப்போம். இல்லையென்றால் இழு, இழு என்று ஓரேயடியாக இழுத்தடிப்போம்.

* சுமதி





இந்த நாட்டின் எதிர்காலத்திற்கு உத்தரவாதமளிக்க வேண்டியவர்கள் இளைஞர்கள், ஆனால் அவர்களோ போதையில் தள்ளாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் எங்கே தெரிகிறது. ஒளிமயம்?

* காந்திமதி



* ஸ்ரீனிவாசன்



ஒளிமயமே!

புலவர் காந்திமதி :

நாட்டைச் சூழ்ந்திருக்கும் கூட்டத்தை 'இருள் மயம்' என்கின்றனர். இது வெறும் மேகக்கூட்டம். விரைவில் கலைந்து போய்விடும்.

சுற்றிலும் உள்ள அண்டை நாடுகளைப் பாருங்கள். எதேச்சாதிகாரப் போக்கு தென்படுகிறது. ஆனால் நாம் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறோம். எத்தனை இழப்புகள், எத்தனை எதிர்ப்புகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். ஆனாலும் ஜனநாயகப் பாதையில்தான் போய்க் கொண்டிருக்கிறோம்.

இங்கேயுள்ள ஜாதிப்பிரச்னையைப் பேசுகிறார்கள். யோசித்துப் பார்க்க வேண்டும். அமெரிக்காவிலும், தென்னாப்பிரிக்காவிலும் உள்ள நிறவெறிப் போராட்டங்கள் எத்தனை எத்தனை. ஆனால் நாம் இத்தனை வேறுபாட்டுக்கு நடுவிலும் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை நமது தேசம் என்ற உணர்வுடன் இருக்கிறோம்.

இங்கே பல மொழிகள்; பலமதங்கள். பல்வேறு கலாசாரம்தான். ஆனால் விடுதலை என்ற குறிக்கோளை அடைய அனைவரும் ஒன்றுபட்டுப் போராடியதுதானே வரலாறு?

பெண்கள் முன்னேற்றத்தை எடுத்துக் கொள்வோம். விமானம் ஓட்டும் பைலட் வேலைக்குக் கூட பெண்கள் புறப்பட்டு விட்டார்கள். எந்தத் துறையில் இன்று பெண்கள் இல்லை? இந்த மாற்றம் ஒளிமயம் இல்லையா?

முண்டாசுக் கவிஞன் பாரதி சொன்னது போல் ''எல்லோரும் அமர நிலையை எய்தும் நிலையை இந்தியா உலகுக்கு அளிக்கும்! அவன் வாக்கு பலிக்கும்.

கண்ணாடி ஜாடியுள் நண்டுகள் நாம்!

ஸ்ரீனிவாசன் :

அம்மையார் அவர்கள் அடுக்கி, அடுக்கிச் சொன்னார்கள். ஆவேசமாகப் பேசினார்கள். அவர்கள் சொன்ன வளர்ச்சியெல்லாம் உண்மையில் வளர்ச்சி அல்ல. அது வீக்கம்!

கண்ணாடி ஜாடிக்குள் நண்டுகளைப் போட்டுப் பாருங்கள். ஒன்று வெளியே வர முயற்சி செய்யும். இன்னொன்று அதன் காலைப் பிடித்து இழுக்கும். அதுதான் நமது மனப்பான்மை! பிறகு எங்கே இருந்து வரும் வளர்ச்சி?

கல்வி வளர்ச்சிதான் எல்லா வளர்ச்சிக்கும் ஆதாரம். ஆனால் அந்தக் கல்வித் திட்டம் எப்படி இருக்கிறது. எந்த அரசாங்கமாவது





* ராஜாராம்

அதில் கவனம் செலுத்துகிறதா?

நோட்டுப் புத்தகத்தின் விலை நூறு கடைகளில் கேட்டால் நூறு விதமாக இருக்கிறது.

"உங்க பெண்ணுக்குப் பாட்டு வராதுன்னு நினைக்கிறேன்."

"எப்படிச் சொல்றீங்க?"

" 'வா பாடு'ன்னு சொன்னேன். 'இல்லை சார், இது டிபன் டைம்'ங் கறா!"



"பழைய சினிமா டைரக்டர் வறுமையின் காரணமாகக் காசில்லாம சாப்பிட்டதுக்கு நீங்க மாவாட்டச் சொல்லி இருக்க வேணாம் சார்!"

"ஏன்...! என்ன ஆச்சு?"

"அரைச்ச மாவையே அரைச்சுக்கிட்டிருக்கார்!"

- வெ. ராஜாராமன்



இதயம் ரோஜா மலராக இருந்தால் பேச்சில் அதன் வாசனை தெரியும்.

- ரஷ்யா

◆ ◆ ◆

புலி இறந்தால் தன் தோலையும் நகங்களையும் மட்டும்தான் விட்டுச் செல்ல முடியும். மனிதன் நினைத்தால் அழியாத நற்பெயரை விட்டுச் செல்ல முடியும்.

- ஜப்பான்

தொகுப்பு :

நாமக்கல் க. இரமேஷ்குமார்

நான் கேட்கிறேன் - இந்த தேசம் முழு திற்கும் சாராயத்துக்கு ஒரே விலையை நிர்ணயம் செய்த அரசு, நோட்டுப் புத்த கங்களுக்கு ஒரே விலையை நிர்ணயிக்க முடிந்ததா?

இன்றைய இளைஞர்களின் ஆர்வமெல் லாம் சினிமாவில்தான், எந்த நடிகருக்குச் சங்கம் அமைக்கலாம் என்பதில்தான் போட்டி. தரமான கல்வி இல்லை, வேலை வாய்ப்புக்கு உத்தரவாதம் இல்லை. எங்கே தெரிகிறது ஒளிமயம்?

நாட்டைப் பற்றி நம்பிக்கை வேண்டும்!

மோகன் :

நானும் பார்த்துக் கிட்டே இருக்கேன். எதிர் அணியினர் புலம்பிக்கிட்டே இருக் காங்க. இந்த தேசத்துல வறுமை; வேலை யில்லாத் திண்டாட்டம். இது சரியில்லை. அது சரியில்லைன்னு, எல்லாமே 'நெகடிவ்' சிந்தனை.

பாசிட்டிவா யோசிக்கணும். அப்துல் ரகுமான் சொன்னார். வேலையில்லை என்று சொல்லாதே. நம்பிக்கை இருந்தால் 'வேலை இல்லை' என்ற விளம்பர போர்டு எழுதியே சம்பாதிக்கலாம்! அந்த நம்பிக்கை வேணுங்க!

சுதந்திரம் வாங்கின பிறகு எத்தனை விஞ்ஞான வளர்ச்சி - கால்குலேட்டர் முதல் கம்ப்யூட்டர் வரைக்கும்! வீட்டில் உட் கார்ந்து கொண்டு பார்சிலோனாவைப் பார்க்கிறோமே! அது எப்படி? எதனால்? இதெல்லாம் வளர்ச்சியில்லையா?

நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே. நீ நாட்டுக்கு என்ன செய்தாய்? இந்தக் கேள்வி பிறந்தால் ஒளிமயம் தன்னால் பிறக்கும்.

வழிநடத்த விவேகானந்தர் தேவை!

சுமதி :

சுகமான பொய்களைச் சொல்லி ஏமாற்ற விரும்பவில்லை. காரமான உண் மைகளைச் சொல்லி எச்சரிக்க வந்திருக் கிறேன்.

எதிர் அணியினர் சுதந்திரம் பெற்ற வர லாற்றைச் சொன்னார்கள். அதை நாங்கள் மறுக்கவில்லை. எங்கள் கேள்வி, சுதந்திரத் தைப் பெற்றோமே; கற்றோமா? என்பது தான். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை என்று எந்த தைரியத்தில் சொல்லுகிறீர்கள்? தேசத்துக்காக எந்த சட்டம் போட்டாலும் 'ஜம்மு-காஷ்மீர்' தவிர என்றுதான் போடு கிறார்கள். அதுதான் இன்றைய நிலைமை.

மணமக்களுக்குப் பரிசளிக்க மனசுக்குள் பட்டிமன்றம் !



பணமா? கலைப்பொருளா? ; படமா? பாத்திரங்களா? ; இவைதான் பரிசளிக்க விரும்புகின்றவரின் மனதிலுள்ள பட்டிமன்ற வினாக்கள்.

ஆனால் அழகையும், பயனையும் சேர்த்துப் பார்த்தால் நம்பகமான நடுவர் தீர்ப்பு 'ஸ்ரீபெட்' பக்கம்தான்.

திருமணம், புதுமனை புகுவிழா, பிறந்தநாள், பிரிவு உபசார விழா போன்ற எதற்கும் 'ஸ்ரீபெட்' அன்பளிப்புகள் மிகப் பொருத்தமானவை.



ஸ்ரீபெட் அன்பளிப்புகள்

கொடுத்தாலும் பெற்றாலும் குறையாத மனநிறைவு !

ஸ்ரீபெட்

பாட்டில்கள் ● ஜாருகள்

சுகாதாரமானது, உடையாதது, உணவுத்தரம் கொண்டது.

விலையும் மலிவு.

SHRIRAM GROUP COMPANIES MADRAS

ஸ்ரீபெட்

ஸ்ரீராம் நிறுவனத்தின் தரமான தயாரிப்பு

விநியோகஸ்தர்கள்:

ஸ்ரீராம் சேல்ஸ் இன்டர்நேஷனல்

AAA/SSI/9267(T)

இந்த நாடு எங்களுக்கு என்ன செய்தது? என்று நாங்களொன்றும் அழவில்லை. இந்த நாட்டுக்காக எங்களை என்ன செய்ய விட்டார்கள் என்றுதான் ஏங்குகிறோம். துடிப்பு மிக்க நூறு இளைஞர்களைக் கேட்டார் விவேகானந்தர். நூறு இல்லை. லட்சம் பேர் இன்றைக்கு இருக்கிறோம். வழிநடத்தக்கூடிய விவேகானந்தன் எங்கே?

இங்கே திட்டம் போட்டுத் திருடுகிற கூட்டமும், அதைச் சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டமும் ஒரே கூட்டமாக இருக்கிறது. ஒரு கவிஞன் எழுதினான், ''எங்களால் மனிதர்களை மந்திரிகளாய் மாற்ற முடிகிறது. ஆனால் மந்திரிகளைத்தான் மனிதர்களாய் மாற்ற முடியவில்லை.''

தேசம் முன்னேறியிருக்கிறது என்கிறார்கள். முன்னேற்றமே இல்லை என்பது எங்கள் வாதமல்ல. நாற்பத்தைந்து ஆண்டுகளில் முன்னேற்றத்தின் அளவு என்ன? நத்தை வேக முன்னேற்றம் போதுமென்றால் இருள்மயத்துக்கும் தயாராக வேண்டும் என்கிறோம்.

நாங்கள் ஏதோ நம்பிக்கை இல்லாமல் இப்படிப் பேசவில்லை. நம்பிக்கையை விட இப்போது எச்சரிக்கைதான் தேவை, அது இல்லாவிட்டால் உங்கள் நம்பிக்கை வெறும் 'கை'யாகிவிடும்.

மெள்ள மடியும் ஜாதிக் கொடுமை

ராஜாராம் :

சகோதரி குறிப்பிட்டார், மந்திரிகளை மனிதர்களாக்க முடியவில்லை என்று. ஆனால் நான் சொல்கிறேன் - மந்திரிகள் சரியில்லை என்றால் அவர்களை மாஜிகளாக்க முடியும்! ஓட்டுரிமை என்ற ஒன்று நம் கையில்தான் இருக்கிறது.

வழிகாட்ட விவேகானந்தன் எங்கே? என்று கேட்கிறார்கள். காந்தியும், வள்ளுவரும், விவேகானந்தரும் காலத்துக்குக் காலம் தோன்ற முடியுமா? இவர்களின் கையைப் பிடித்து அழைத்துத்தான் போக முடியுமா? அவர்களின் கருத்துக்கள்தான் எல்லா காலங்களுக்கும் வழிகாட்டி.

இந்தியா சுதந்திரமடைந்து 45 ஆண்டுகளாகியும் வளர்ச்சி இல்லை என்று சொல்லுகிறார்கள், 45 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா, அமெரிக்கனுக்குச் சொந்தமாக இருந்தது. ஜப்பான், ஜப்பானியர்களுக்குச் சொந்தமாக இருந்தது. ஆனால் இந்தியா இந்தியனுக்குச் சொந்தமாக இருந்ததா?

எனது தந்தை அடிமை நாட்டில் பிறந்தார். நான் சுதந்திர நாட்டில் வாழ்கிறேன். நாளை என் மகன் வல்லரசு நாட்டில்தான் வாழ்வான்.

மனிதனைப் பிடிக்கும் தொழு நோய்க்கு ஐந்து வருடம் மருந்து சாப்பிடச் சொல்லுகிறார்கள். நூற்றாண்டுகளாய் நமது சமூகத்தில் பரவியிருக்கிறது ஜாதி என்ற தொழு நோய். அது அவ்வளவு சீக்கிரம் மறைந்து விடுமா? ஆனால் மெள்ள மெள்ள அது தூக்கியெறியப்படும் என்று நம்புவோம்.

நடுவர் தீர்ப்பு

சாலமன் பாப்பையா :

இரண்டு அணியினரும் எடுப்பான வாதங்களை முன் வைத்திருக்கிறார்கள்.

இருள்மயம் என்று வாதிட்டவர்கள் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். அவர்கள் வாதத்தில் உண்மை இருக்கிறது.


அரசு முற்றத்திற்குப் போய் ''நீ செய்வது அநீதி'' என்று மக்கள் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்ல எப்போது மக்கள் பயப்பட்டுக் கொண்டிருக்கிறார்களோ அப்போது நாடு கெட்டுப் போய்க் கொண்டிருக்கிறது என்று அர்த்தம்.

இன்றைக்கு இருக்கும் இந்திய அரசியல், பலவீனப்பட்டுப்போய் உடைந்து கொண்டிருக்கிறது.

ஆனாலும் ஒன்று சொல்லுகிறேன். எங்கள் முப்பாட்டன் பிறந்த இந்த மண்ணை! எங்கள் பாரதி புலவன் பாடிய இந்த மண்ணை ''இருண்டு போகும்'' என்று சொல்ல மனம் துணியவில்லை. அது எத்தனைதான் கொடுமைகள் மலிந்ததாக இருந்தாலும் சரி! இந்த மண் விழும்! ஆனாலும் மீண்டும் எழும்! ஏனென்றால் 'அல்லவராயின் அவரை விழுங்கிப்பின் ஆனந்தக் கூத்திடுவாள்! எங்கள் காளி!' இந்தியக்காளி!!


இருள் மயமாகும் ஆபத்து இருந்தாலும் அதை ஒளிமயமாக்க நம்பிக்கை கொள்வோம்!

தொகுப்பு : **கே. பாரதி**
படங்கள் : **யோகா**



பயிர்களைக் காக்கும் பூச்சிகள்!





* டாக்டர் அம்ப்ரோஸ்   * கொலைகாரப் பூச்சி

பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் பூச்சிகளைப் பூச்சிகளைக் கொண்டே அழித்துவிட்டால்....?

கேட்க விசித்திரமாக இருக்கிறதா?

விவசாயிகளுக்குப் பல விதங்களிலும் நன்மை பயக்கும் இந்த எண்ணம் வெற்றி பெறும் எனும் நம்பிக்கையுடன் கடந்த பதினாறு ஆண்டுகளாக இத்துறையில் ஆய்வு செய்து வருகிறார் டாக்டர் டன்ஸ்டன் பி. அம்ப்ரோஸ்!

பாளையங்கோட்டை தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி விலங்கியல் துறை பேராசிரியரான டாக்டர் டன்ஸ்டன், இப்பூச்சி பற்றிக் கூறும் செய்திகள் புதுமையானவை :

''கற்களின் அடியிலும், மரங்களின் பட்டைகளுக்கு அடியிலும், சிறு இடுக்குகளிலும் மறைந்து வாழும் இந்தப் பூச்சிகளுக்குக் கொலைகாரப் பூச்சிகள் (Assasin bugs) என்றே பெயர்! இப் பூச்சிகளின் எச்சில், விரியன் பாம்பின் விஷத்திற்கு இணையான விஷத்தன்மை உடையது.

''சிவப்பு - கறுப்பு, மஞ்சள் - கறுப்பு, தவிட்டு நிறம் எனக் கவர்ச்சியான நிறங்களைக் கொண்ட இப் பூச்சிகளில் மூன்று வகைகள் இருக்கின்றன.

''ஒரு வகைப் பூச்சிகள் பாலூட்டிகள், மற்றும் பறவைகளின் இரத்தத்தைக் குடித்து உயிர் வாழ்பவை. இவ்வகைக் கொலைகாரப் பூச்சிகள் மனிதர்களையும் கடித்து இரத்தம் உறிஞ்சுபவை.

''இரண்டாவது வகைப் பூச்சிகள் பிற பூச்சிகளை உறிஞ்சிக் குடிக்கும் பூச்சிகள்.

''மூன்றாவது வகை, மரப்பட்டைகளை உறிஞ்சிக் குடிக்கும் பூச்சிகள்.

''இதில் இரண்டாவது வகைப் பூச்சிகள் ஐம்பது வகை இதர பூச்சிகளை (insect pests) உறிஞ்சிக் குடிப்பதாக எங்கள் ஆராய்ச்சியில் கண்டறிந்திருக்கிறோம்.

''இரைகளைப் பிடித்தவுடன் தங்கள் உமிழ் நீரைப் பூச்சிகளின் உடல் மீது செலுத்தி, அவற்றைச் செயலிழக்கச் செய்கின்றன. பின் மற்றொரு வகை உமிழ் நீரைச் செலுத்தி இரையின் உடல் முழுவதையும் கூழ் போல மாறச் செய்கின்றன. பின், நாம் குளிர் பானங்களை அருந்துவது போல குழல் போன்ற தங்கள் வாயினால் உறிஞ்சிக் குடிக்கின்றன!

''இதில் குறிப்பிட்ட சில பூச்சிகள் எறும்புகளோடு உறவு வைத்திருக்கின்றன. இப்பூச்சிகள் இரை சாப்பிடும்போதும் சாப்பிடச் செல்லும் போதும் எறும்புகள் இவற்றுக்குத் துணை புரிகின்றன. இவை எறும்புக் கூட்டிலேயே தங்கவும் செய்கின்றன. அதற்குப் பிரதிபலனாக இப்பூச்சிகளின் கழிவுப் பொருட்களை எறும்புகள் உணவாக உண்கின்றன.

''இப்பூச்சிகள் மனிதர்களைக் கடித்தால் மிகுந்த வேதனையும், வீக்கம், உடல் மரத்துப் போதல், காய்ச்சல் போன்ற தொடர் விளைவுகளும் ஏற்படும்.

''மத்திய அரசின் நிதி உதவியுடன் (CSIR, U.G.C. & DOE) இப் பூச்சி பற்றிய ஆய்வை நடத்துகிறோம்.

''மனிதர்களைக் கடிக்கும் இவ்வகைப் பூச்சிகளால் ஏதாவது நோய்கள் பரப் பப்படுகின்றனவா எனவும், பிற பூச்சிகளை உறிஞ்சிக் குடிக்கும் பூச்சிகளைப் பல்கிப் பெருகச் செய்து அதன் மூலம் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் பிற பூச்சிகளைக் கட்டுப்படுத்த முடியுமா என்றும் ஆராய்ந்து வருகிறோம். இது வெற்றி பெற்றால் பூச்சிகளைக் கொல்ல இரசாயன மருந்துகளை உபயோகிப்பதைக் கட்டுப்படுத்தலாம். அல்லது ஒரேயடியாகத் தவிர்க்கலாம். இது மனிதர்களுக்குப் பல விதங்களிலும் பயனுள்ளதாக இருக்கும்'' என்கிறார் டாக்டர் டன்ஸ்டன்.

– எம். ஜியோ பிரகாஷ்

“ப”த்மினி

காலத்திய நடிப்பாற்றல் வாய்ப்பு குஷ்பு காலத்தில் இல்லையே!”

‘கொ. ப. செ. ஆகிறார் குஷ்பு’ - அரசியல் பரபரப்பு பத்திரிகை ஒன்றில் இப்படியொரு அட்டைப்படச் செய்தி வந்தது. பத்திரிகையின் உள்ளே எழுதப் பட்ட செய்தி என்ன தெரியுமா?

‘ஜனதா தளத்தின் தமிழ்நாட்டுத் தலைவர் சிவாஜி கணேசனுக்கு வயதாகி விட்டதால், முன்பு போல ‘ஆக்டிவ்’ ஆக அரசியலில் ஈடுபட முடியவில்லை. அதனால், தமக்குப் பின் தம் மகன் பிரபுவை, தலைமைப் பதவிக்குக் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளார். அந்தத் திட்டம் செயல் வடிவம் பெற்று, பிரபு ஜனதா தளத்தின் தலைவர் ஆனால், நிச்சயம் ஜனதா தளத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளர் குஷ்புதான் - காரணம், பிரபுவுக்கு மிகவும் நெருக்கமானவர் குஷ்புதானே?’

- இச் செய்தியைப் படிக்கும்போதே இது எத்தகைய கற்பனை என்பதை நம்மால் அறிய முடிகிறது! இதுதான் குஷ்புவுக்கும் வருத்தம். பத்திரிகைகள் தம்மைப் பற்றி அதீதமாய்க் கற்பனை செய்து, கிசுகிசுக்களையும், தவறான தகவல்களையும் எழுதி விடுகின்றன என்பது குஷ்புவின் மனத்தை மிகவும் காயப்படுத்தி விட்டதன் விளைவுதான் ‘‘பத்திரிகை பேட்டியா? ஸாரி வேண்டாமே!’’ என்று அவரை ஒதுங்க வைத்து விட்டது.


பாரதிராஜாவின் கேப்டன் மகள் படப்பிடிப்பு. சென்னை மியூஸியம் வளாகத்தில் உள்ள காடு போன்ற மரங்கள் அடர்ந்த பகுதியில், ஒரு மர வீடு

குஷ்புவைப் பற்றி



இயக்குனர் பி. வாசு :

குஷ்புவுக்கு நல்ல பெர்ஸனாலிடியோட க்ளாமரும் இருக்கிறதாலதான் முன்னணி கதா நாயகிகளில் ஒருவரா வரமுடிஞ்சது. ரசிகர்களின் கனவுக் கன்னியான இவரை நம்பர் ஒன் நாயகி என்றே கூறலாம். அதோடு, அவரோட சிறந்த பெர்ஃபார்மன்ஸ் தொடர்ந்து அவரை அதே நிலையிலே நீடிக்க வைக்கிறது. எல்லாவற்றுக்கும் மேல் நாம் சொல்லிக் கொடுப்பதை உடனே புரிஞ்சுக்கிட்டு அதிக டேக் வாங்காம அப்படியே நடிக்கும் அவரது ஆற்றல் பாராட்டத்தக்கது.





இயக்குனர் ஆர். வி. உதயகுமார் :

'கிழக்கு வாசல்', 'சிங்கார வேலன்' ஆகிய இரண்டு படங்களில் மட்டும்தான் குஷ்புவை நான் இயக்கியிருக்கிறேன். இரு படங்களிலுமே அவரது நடிப்புத் திறமைக்குச் சான்றுகள் தெரிந்தன...



நடிகர் பிரபு ஒரு விழாவில் பேசுகையில்....

''குஷ்புவுக்கு இருக்கிற டேலண்டுக்கும், பெர்ஸனாலிட்டிக்கும் இன்னும் ரொம்ப நாள் பிக் ஹீரோயினா இருப்பாங்க...!' என்று ரசிகர்களே அவரைப் பற்றிச் சொல்கிறார்கள்... மற்றபடி அவரைப் பற்றி எதையாவது கூறி எசகுபிசகாகச் சிக்கலில் மாட்டிக் கொள்ள நான் தயாராக இல்லை.''

- கலைத்தூதன்

அமைத்து, அங்கே படம்பிடித்துக் கொண்டிருந்தார்கள். பாரதிராஜா காட்சிக்கு 'கட்' சொன்னவுடன் கம்பீரமான வெள்ளைக் குதிரையிலிருந்து குதித்து இறங்கி, மரத்தடியில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து கொண்டார் குஷ்பு.

'கல்கி'யின் அணுகுமுறையை விளக்கியதன் பேரில் பேட்டிக்கு ஒப்புதல் அளித்திருந்தார் குஷ்பு.

''நீங்கள், பத்திரிகையாளர்களிடம் பேசாமல் இருப்பதால் மட்டும் உங்களைப் பற்றிய பொய்யான தகவல்களை வெளியிடாமலா இருக்கப் போகிறார்கள்?'' என்ற நமது கேள்விக்கு, சிறிது நேர மௌனத்துக்குப் பின் பதில் கூறினார். ''எஸ்! அது சாத்தியமில்லை என்பது எனக்கும் தெரிகிறது. ஆனாலும் என்னைப் பற்றி எப்படி எழுதினாலும் பேசாமல் 'இக்னோர்' பண்ணுவது என்று நான் முடிவெடுத்ததற்குக் காரணம், அவர்களுக்கு எல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருப்பதை நான் காலவிரயம் என்று கருதுவதுதான்.''

''சிறு வயதிலேயே நீங்கள் நடிக்க வந்து விட்டீர்களே அப்போது சினிமா உலகம் பற்றிய உங்களது எண்ணத்துக்கும், இப்போதுள்ள உங்களது எண்ணத்துக்கும் ஏதாவது மாற்றம் இருக்கிறதா?''

''ஓ! எஸ்! நான் சினிமா உலகிலேயே வளர்ந்தவள் என்று கூறலாம். நான் நடிக்க ஆரம்பித்த போது எனக்கு ஆறு வயது. அப்போது சினிமா என்பது ஜாலியான ஒரு விஷயம். ஒரு விளையாட்டான சமாசாரம். தட்ஸ் ஆல்! ஆனால் இப்போது சினிமா என்பது சீரியஸான விஷயம். பார்க்கிறவர்களுக்குத்தான் பொழுதுபோக்கே யொழிய, நடிக்கிறவர்களுக்கு இல்லை. சினிமாவைத் தவிர இப்போது எனக்கு வேறு ஒன்றும் தெரியாது. சினிமாதான் என் பிரட், பட்டர், ஜாம் எல்லாமே!''

''திரையுலகில் நீங்கள் அடைந்துள்ள வெற்றிக்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?''

''பல விஷயங்கள். என்னிடமுள்ள திறமை, டைரக்டர்களின் வழிகாட்டல், படங்களில் எனக்கு அமைந்த கதாபாத்திரங்கள், நான் செய்த பல தவறுகளை உணர்ந்து அவற்றை எனக்குப் பாடம் கற்றுத் தரும் ஆசான்களாய் நான் கருதியது... எல்லாவற்றுக்கும் மேலாக... இன்னொரு விஷயம். அது என்னவென்று நீங்கள் சொல்லுங்கள் பார்க்கலாம்!''

''அதிர்ஷ்டம்! சரியா?''

''ரொம்ப கரெக்ட்!''

''அது சரி! நீங்கள் செய்த தவறுகள் என்று சொன்னீர்களே...?''

''ஒரு படம் வெற்றி பெற்றவுடன், பல தயாரிப்பாளர்களும், டைரக்டர்களும் தங்கள் படங்களுக்கு ஒப்பந்தம் செய்ய வருவார்கள். அத்தனை வாய்ப்புக்களையும் சகட்டுமேனிக்கு ஒப்புக் கொண்டது; அந்தப் படங்களின் கதை என்ன? எனக்குள்ள கதாபாத்திரம் எத்தகையது என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமலிருந்தது. விளைவு? படங்களில் முழுமையாய் என்னை இன்வால்வ் செய்து கொள்ள முடியாது போயிற்று. இப்போது ஜாக்கிரதையாக இருக்கிறேன்.''

''இதுதான் ஆண்களால் ஆளப்படும் உலகமாயிற்றே! ஒரு படத்தின் தோல்விக்கு ஹீரோயின் கூடவா காரணமாக முடியும்?''

''சினிமா உலகம் ஆணாதிக்கம் நிறைந்ததுதான். ஆனால் தோல்வி என்று வரும் போது பல விஷயங்களையும் பார்க்கத்தான் செய்வார்கள். பெண்களை, அழகுப் பதுமைகளாகக் காட்டுவதுதான் வழக்கமாய் உள்ளது. ரஜினி சார் படத்திலேயோ, கமல் சார் படத்திலேயோ அவர்களுக்கு இணையான பாத்திரமாய் எனக்கும் தரப்பட வேண்டும் என்று நான் கேட்க முடியுமா? காதல் டூயட்கள், சண்டைகள், உணர்ச்சிமயமான காட்சிகள் என்று அந்தக் கலவையில் ஹீரோயினுக்குக் குறைந்த அளவு முக்கியத்துவம்தானே கிடைக்கும்? இந்த நிஜ நிலைமையைப் புரிந்து கொள்ளாமல், நான் படங்களை ஒதுக்குவதும் புத்திசாலித்தனமாகாது. ஒப்புக் கொள்ளும் படங்களில், வாய்ப்புக் கிடைக்கும் அளவில் என்னாலும் உணர்ச்சிகளைக் காட்டித் திறம்பட நடிக்க முடியும் என்று நிரூபிக்கலாமே! அதைத்தான் நான் செய்து கொண்டிருக்கிறேன்.

ஆனால் சாவித்திரி அம்மா, கே. ஆர். விஜயா அம்மா, பத்மினி அம்மா இவர்கள் இருந்த காலகட்டத்துக்கும், இன்றைய காலகட்டத்துக்கும் நிறைய வேறுபாடு உண்டு. அப்போதெல்லாம் உணர்ச்சி பொங்க நடித்து, திறமையை வெளிப்படுத்த பெண் காரெக்டர்களுக்கும் படத்தில் நிறைய வாய்ப்பு இருக்கும். இப்போது, நிலைமை மாறி விட்டதே!''

''இந்தி, தெலுங்கு, கன்னடம் இவற்றையெல்லாம் விட்டு விட்டு, தமிழில் அதிக ஆர்வம் காட்டக் காரணமென்ன?''

''இந்தியில் தவறான மனிதர்களை நம்பியது, யோசிக்காமல் படங்களை ஒப்புக் கொண்டது, இஷ்டப்படி ஊதியம் கேட்டது என்று பல்வேறு காரணங்களாலும் என்னால் வெற்றி பெற முடியாமல் போய் விட்டது. அடுத்து தெலுங்கில் நுழைந்தேன். டாப் ஹீரோக்கள், சிறந்த டைரக்டர்கள், பெரிய கம்பெனிகள் என்று வாய்த்தும் கூட, தொடர்ந்து படங்கள் தோல்வி கண்டன. அதிர்ஷ்டம் இல்லை! அடுத்து கன்னடத்தில் முயற்சி செய்தேன். அடுத்தடுத்து ஐந்தாறு படங்கள் வெற்றி பெற்றன. அதே நேரத்தில்தான் தமிழில் 'வருஷம் பதினாறு' படம் ரிலீஸ் ஆகியது. அதன் வெற்றிக்குப் பிறகு நிறையத் தமிழ்ப்பட வாய்ப்புகள் கிடைத்தன. கன்னடத்தை விட, தமிழில் என் எதிர்காலம் பிரகாசமாய் இருக்கும் என்று தோன்றவே, தமிழ்ப் படங்களை மட்டும் ஒப்புக் கொள்வது என்று முடிவெடுத்தேன். தமிழ்தான் நமக்கு என்று ஆனவுடன், தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டத் தொடங்கினேன். அதே சமயம், நான் பழைய பாடங்களை மறந்து விட்டு, மீண்டும் நிறையப் படங்களை ஒப்புக் கொள்வது, கதையைக் கேட்காமலேயே ஒப்புக் கொள்வது போன்ற பழைய தவறுகளையே செய்தேன். விளைவு? மறுபடி தோல்வி. சீக்கிரமே என் தவறுகளைத் திருத்திக் கொண்டு விட்டேன். ஒரே சமயத்தில் இரண்டு அல்லது மூன்று படங்களுக்கு மேல் ஒப்புக் கொள்ளுவதில்லை. அவற்றை முடித்துக் கொடுத்து விட்டு, அதன் பின்தான் புதிய படங்களை ஒப்புக் கொள்ளுவது என்ற கொள்கையை நான் இப்போது கடைப்பிடிக்கிறேன்.''

''ஒரு படத்தின் கதையைக் கேட்டுத் திருப்தியடைந்து ஒப்புக் கொண்ட பிறகு, கதாபாத்திரத்தில் மாறுதல் செய்தால் உங்களால் என்ன செய்ய முடியும்?''

''டைரக்டர்களிடம் முழு நம்பிக்கை வைத்துத்தான் ஒப்பந்தம் செய்து கொள்கிறேன். அப்படி நம்பிக்கை வைக்கும் டைரக்டர்கள் என்னுடைய கதாபாத்திரத்தைச் சிறிது மாற்றி அமைக்கிறபோதோ, நான் நடித்த காட்சிகளை வெட்டிக் குறைத்து விடும்போதோ, அது என் கேரக்டரை மேம்படுத்துவதற்கு என்றுதான் நம்புகிறேன். நம்பிக்கை பெரும்பாலும் வீண் போவதில்லை.''

''இதுவரை நடித்த படங்களிலேயே உங்களுக்கு மிகவும் பிடித்தது எது?''

''சின்னத்தம்பி. நந்தினி என்ற பெண்ணாகவே மாறி, சூழ்நிலைக்கு ஏற்றபடி நான் நடித்தேன்.''

''கமர்ஷியல் சினிமாவில் உள்ள உங்களுக்குத் தேசிய விருது, ஆர்ட் படம் இதில் எல்லாம் ஆர்வம், ஆசை உண்டா?''

''தனிப்பட்ட முறையில் எனக்கு ஆர்ட் படங்கள் என்றால் பிடிக்கும். ஷியாம் பெனகல், மீரா நாயர் போன்றவர்களின் ரசிகை நான். ஆனால் ஜனரஞ்சக சினிமா தான் பொது மக்களிடம் எடுபடுகிறது. ஆர்ட் படங்கள் மேல்தட்டு மக்களோடு சரி. தேசிய விருதைப் பொறுத்தவரை, கமர்ஷியல் சினிமாக்காரர்களுக்கே சான்ஸ் குறைவு தான். அமிதாப்பச்சனுக்குக் கிடைத்தது விதி விலக்கு எனலாம். ஆனாலும், கலைஞர்களுக்கு, அவார்டு என்பது ஒரு டானிக் போல தெம்பு அளிக்கும் விஷயம்.''

''அப்படியென்றால் உங்களுக்கு டானிக் சாப்பிடும் ஆசை இருக்கிறதா?''

''ஒய் நாட்?''

சந்திப்பு : எஸ். சந்திரமௌலி

அட்டை வண்ணப்படம்,

படம் : யோகா

தூங்காதே தம்பி

''அப்படியா... கடையில அவன் புத்தியைக் காமிச்சுட்டான் பாரு. நேத்தி வரைக்கும் அட்ரஸே இல்லாத பய.. ஒரு எலக்‌ஷன்ல ஜெயிச்சான் - இத்தினிக்கும் ஜெயிக்க வச்சதே நம்ம அண்ணந்தான். அவரையே... சே!''

''அது பளய விரோதம்டா...''

''விரோதம் என்ன பெரிய விரோதம்.. நம்ம குப்பத்து ஜனங்களுக்குப் பட்டா போட்டுத் தரணும்னு அண்ணன் கேட்டா ராம். ஆனு. அதுக்கே லஞ்சம் கேட்டுருக் கான். வளத்த கடான்னு அண்ணன் ரொம்ப வருத்தப்பட்டாரு..''

''நம்ம அண்ணன் குடிபோதையில யார் மேலேயோ காரை மோதிட்டதால கைதுன்னு பேப்பர்ல போட்டுருக்கே...''

''பேப்பர்ல நாளும் போடுவான்.. உண்மைய நாமதான் சிந்திச்சுப் பாக்க ணும்.. தண்ணியா... நம்ம அண்ணனா...? இதுவே பொய்யினு தெரியலே? அவங்க கட்சிப் பேப்பருடா அது. அதுல அப்படித் தான் போடுவான்...''

''அண்ணன் அறிக்கை உடலியா?''

''நம்ம கட்சிப் பேப்பர் பாத்தா தெரி யும்.''

''தோ இருக்கே. 'நான் காந்தி பாதைக்காரன். என் மீது குடிபோதை வழக்கு..! ஆட்சிக் கட்டிலின் அராஜகத் திற்கு எடுத்துக்காட்டு இது.. தொண்டர் களே, அறவழியே நல்லது. சிறைச்சாலை, சிரச்சேதம், இவற்றிற்கு நான் தயார். என் தொண்டர்களுக்காக எதையும் தாங்கிக் கொள்வேன்...''


''பாத்தியா... நான் சொல்லலே? ஏதாவது செய்யணும்டா.''

''நாம என்னடா செய்ய முடியும்?''

''அவரு அறிக்கையைப் பாத்தியில்ல... தொண்டனுக்காக அவர் இருக்கச்சே அவருக்காக நாம இருக்கோம்னு காட்டி னாத்தான் அந்தப் பயலுக கொட்டம் அடங்கும்...''

''அதுக்காக...?''

''நீ ஒரு விளங்காத பயடா! கடை அடைப்பு, மறியல்னு தூள் கௌப்பணும்.



ரத்தம் கொதிக்குது எனக்கு... ஒனக்கு உணர்ச்சியே இல்லியா?''

''அண்ணே, எத்தத்தைப் பாத்தீ களா... அவனுக பந்த் பண்ணப் போறானு களாமே.''

சுப்ரமணியன் ரவிச்சந்திரன்


''அலிவு காலம்டா... ஆடறானுங்க.. பவர்ல இல்லாதப்பவே இப்பிடின்னா இன்னும் பவருக்கு வந்துட்டா நாசக்காடு தான்.''

''ஏன்னே... கைதுன்னு போட்ருக்கான். யாரையோ ஏத்திட்டானாமே...''

''ஏ த் தி ட் ட ா ன ா வ ா ? ஆனே க்னோல்டா...! அத அமுக்கத்தான் காந்தி பூந்தின்னு ஸ்டேட்மெண்ட் உடறான்.. இத் தினிக்கும் தலைவரு கேஸ் வேண்டாம்னு பெருந்தன்மையா விடச் சொல்லிட் டாரு...''

''அப்ப பேப்பர்ல கைதுன்னு...?''

''லேய்... அவுங்க பேப்பர்ல அப்பிடித்



தான் வரும்.. எப்பிடியெல்லாம் அரசியல் பண்றானுக பாரு...''

''அப்ப ஆளு ஜெயில்ல இல்லியா?''

''நாசமாப் போக.. தோப்புல ஜல்சா பண்ண அடைஞ்சவந்தான். பந்த் முடிஞ்சு தான் வெளியில வருவான். இதுல விஷய மிருக்கு...''

''என்னண்னே அது?''

''நம்ம குப்பத்துல சாராய ஃபாக்டரி கட்டணும்னு 'அய்யா' நம்ம தலைவர்

கிட்ட தலையச் சொறிஞ்சுகிட்டே வந் தாரு.. அது ஜனங்க எடம். அவுங்களுக்குப் பட்டா போட்டுக் குடுக்கறதா ஒரு ப்ளான் இருக்குன்னு செருப்பால அடிச்ச மாரி நம்ப தலைவரு சொல்லிட்டாரு. அந்தக் கடுப்பு, எதிர்க்கட்சிக்குப் போனான்... ஆ னங்க நான்..: வெறி... பதவி வெறி...!

''சரி.. இப்ப மறியல், பந்த்?''

''நிறுத்தணும்டா... அராஜகத்துக்கு எதிரானதுதான் நம்ம கொள்கையே. கடைக்காரங்க பயப்படாம இருக்க நாம் பாதுகாப்பா நிக்கணும்..''

''பந்த் நடக்கட்டும்.. அவங்க உணர்ச்சி களை நாம மதிக்கணும்னு தலைவரு

சொல்லியிருக்காரே?''

''அவரு அப்படித்தான் சொல்வாரு.. நாமதான் பாத்து நடந்துக்கணும்.''

''அய்யா... ஏன் கடையைச் சாத் தறீங்க...? திறங்க!''

''அய்யா... நீங்க நாட்டு நடப்பு தெரிஞ்சவங்க. ஒரு அக்கிரமம் நடந்தா அதுக்கு எதிர்ப்பு காட்ட வேண்டியது ஒங்க

பொறுப்புங்கறதையும், லாபம் முக்கியம் இல்லேன்னும் புரிய வையுங்க.''

''கடைக்காரரே நீங்களே சொல் லுங்க... எது அக்கிரமம்? குடியில காரோட்டி ஆளைக் கொல்றதா? இல்ல. அத நீங்க தட்டிக் கேக்கறதா..?

'' அய்யா. அக்கறுத்தலுக்குப் பயப் டாதீங்க. நாங்க என்ன கேணப் பயலுகளா, பூச்சாண்டிக்கெல்லாம் பயப்பட. பனங் காட்டு நரி. இந்தச் சலசலப்பெல்லாம் இங்க வேணாம்.''

''அது சரி.. மனுஷனா இருந்தா நல்லது கெட்டதுக்குப் பயப்படணும்... நரி தானே, அதான் தந்திரம், குறுக்கு புத்தி எல்லாம்...''

''வார்த்தை வளருது. நாக்கை அடக் கினா நல்லது.''

''நாங்க ஒன்னும் நாக்கு கொளுத்து அலையலே.''

''அவங்கிட்ட என்னடா பேசிக் கிட்டு... நாலு போட்டா தன்னால வழிக்கு வருவான்.''

''டாய்...! எவன்டாவன் கை வைக் கிறது. தயாராத்தான்டா வந்திருக்கோம்.''

''போடுறா அவன... இன்னிக்கு நாமளா அவனா பாத்துடுவம்.''

''வெட்டுறா அவனை... கூப்புடறா ஆளுங்கள.. ரெண்டுல ஒன்னு..''

''என் சொத்தே போனாலும் சரி. ஒன்னு அவங்க, இல்ல நாம...''

''அதோ ஒத்தன் ஓடறான் பாரு.. மடக்கு...''

''டேய்.. பின்னால ஒத்தன் நிக்கறான் பாரு... நொறுக்கு.''

''ஓடுங்கடா.. போலீஸ்!''

''ஒத்தனும் மாட்டாதீங்கடா.. குட்டை சந்து வழியா கவந்தைத் தாண்டி ஓடுங் கடா...''

''டேய்... இவன் தலையத் தூக்கறான் பாரு. கண்ணு முழிச்ச ஸ்டேட்மெண்ட் குடுத்தா அவ்ளோதான்... தலையில நச்சுனு போடு.''

''அம்...மா...''

''காசி, சிவம் ரெண்டு பேரையும் ஸ்டேஷனுக்குக் கொண்டு போயிட்டாங் களாம்.''

''அடி தாங்காம நம்மளக் காமிச்சுக் குடுத்துருவாங்களே.. பேசாம குருவிக் கரம் பைல இருக்கற எம் மச்சான் வீட்டுக்குப் போயிற வேண்டியதுதான்!

''நாங்கூட திருவாரூர் சித்தப்பா வீட்டுக்குப் போலாம்னு பாக்கறேன்.''

''ஆமாம்... அவுங்க ஆளுங்க யாரை யும் அரெஸ்ட் பண்ணலியா...?''

''எப்பிடிப் பண்ணுவாங்க.. ஆளுங் கட்சி... செத்தது அவன் ஆளு வேற...''

''இன்னும் எத்தினி நாளுதான் இப்பிடி வயக்காட்டுலயும், தோப்புலயும் காலங்கழிக்கறதாம்.''

''அதான் புரியலே... யாரை அரெஸ்ட் பண்ணாங்களாம்?''

''எல்லாம் நம்ம ஆளு சம்முவம், மாரியப்பன் ரெண்டு பேரையுந்தான்.''

''காசியையும் சிவத்தையும் புடிச்சுக் கிட்டுப் போனாங்களாமே?''

''எங்க...? வேன் வீட்டு வாசல்ல நின்னதும், தோட்டத்து வேலியைப் பிரிச் சுக்கிட்டு ஓடிட்டானுங்க.. ஆ ப் ட து நம்மாளுதான்!''

''பேருதான் பெத்த பேரு, ஆளுங்கட் சின்னு... போலீஸ்காரன் நம்மளத்தான் கஷ்டப்படுத்துறான்...''

''செத்தது அவன் ஆளாப் போயிட் டான்.. நியாயம் நம்ம பக்கம் இருந்தாலும் நாம கஷ்டப்பட வேண்டியிருக்கு...''

''சம்முவம் நோஞ்சான் பய.. கக்கிடு வான். கரூர் தங்கச்சி வீடாப் பாத்து ஓடிற வேண்டியதுதான்.''

''நம்ம கூட்டாளி சேடப்பாளையத்துல பால் யாவாரம் பண்றான்... அங்க போயிற லாம்னு பார்க்கறேன்.''

''வணக்கம் திரு கதிரவன்... நலமா?''

''ஆ... வருக திரு நிலவன்... நெடுநாள் கழித்து சந்திப்பு... அண்ணியார் நலமா?''

''நலந்தான்... நம் ஊரில் ஏதோ அசம்பாவிதமாமே... நீங்கள் போனீர் களா?''

''அதுவா... நான் கைது என்ற செய்தியின் விளைவு அது..''

''ஆபீஸ் நேரத்துல ஏன் இப்படித் தூங்கிட் டிருக்கீங்க...?''

''எனக்குத் திடீர்னு அமெரிக்காவிலே இருக் கற மாதிரி நினைப்பு வந்திடுச்சு!''

''நீங்க நினைச்சிட்டிருக்க... வேண்டாங் களே... அதுக்குத் தூங்கணுமா என்ன...?''

''அமெரிக்காவிலே இப்ப ராத்திரிதானே...!''

- லட்சுமி ஆவுடைநாயகம்



''நீங்கள் கைதா... அதுவும் எனக்குத் தெரியாமல்?''

''அஃதா... எனக்கு நெருங்கிய காவல் அதிகாரி மாற்றலில் இங்கு வந்திருக்கிறார். சம்பிரதாய நிமித்தம் அவரைப் பார்க்கப் போனேன். புரியாமல் கைது என்று செய்தியாகி விட்டது. உங்களுக்குக் கூடத் தெரிந்திருக்கலாம்... சந்தானம் என்று!''

''தெரியாமல் என்ன... எழுபத்தேழில் ஒரு கொலை வழக்கில் நம்மிருவரையும் உள்ளே வைத்து, பின் அவரே விடுவித்தாரே - நமக்கு அனுகூலமாய்.. அந்தக் கனவான்தானே.''

''நல்ல நினைவு சக்தி... மெச்சுகிறேன். நீங்கள் கூட ஏதோ அறிக்கை விட்டதாகச் செய்தி பார்த்தேனே.''

''அதற்கெல்லாம் நேரம் ஏது. பதவியே நிலையில்லாத ஒன்றாகப் போய் விட்டது. இருக்கும் காலத்தில் பிழைப்பைப் பார்ப்பதே உத்தமம்... என் காரியதரிசி கொடுத்திருப்பான் அறிக்கையெல்லாம்... அது சரி... நீங்கள் ஒன்றும் கொடுக்கவில்லையா?''

''எனக்கும் ஒரு காரியதரிசி இருக்கிறான்... அவன் பார்த்துக் கொள்வான். நான் பத்து நாட்களாகச் சிகிச்சையில் இருக்கிறேன்... என்ன ஆயிற்றாம் ஊரில்?''

''யாருக்குச் சரியாய்த் தெரியும்...'' ஏதோ சாவு போலிருக்கிறது. நீங்கள் ஆறுதல் சொல்லப் போகவில்லையா?''

''சரியாய்ப் போயிற்று. இப்போது போனால் அவனவனைக் காவல் நிலையத்திலிருந்து மீட்கவே அலைய நேரம் சரியாய் இருக்கும்... அதிகம் அலட்டிக் கொள்ளாதே என்கிறார் என் மருத்துவர்..''

''ஹூம்... நீங்களாவது எதிர்க்கட்சி. காவல் துறையின் கொடுங்கோன்மை, ஆளுங்கட்சியின் அவலம், அதனால் தொண்டர்களைச் சிறை மீட்க முடியவில்லை என்று குளிர்ச்சியாக ஒப்பேற்றி விடலாம். நான் மீட்டாலும், மீட்காவிட்டாலும் கெட்ட பெயர்தான்... அப்புறம் ஒரு தகவல் - பெரியவர் உங்களை என்னோடு சேரச் சொல்கிறார். உங்களை மாதிரி கொள்கை வீரர் இருப்பது கட்சிக்குப் பலம் என்பது அவரது நம்பிக்கை.''

''ம்... எனக்கும் அந்த எண்ணம் உண்டு. இப்படி ஏதாவது செய்தால்தான் மக்கள் நினைவிலும் இருக்க முடியும்.. நான் வந்தது!''

''புரிகிறது... சாராய ஆலைதானே. நம் இருவருடைய மைத்துனர்கள் எதற்கு இருக்கிறார்கள்... அவர்களைப் பாகஸ்தாகளாக்கி நல்லதொரு சுபதினத்தில் ஆரம்பித்து விடுவோம்.. பெரியவர் ஒப்புதல் அளித்து விட்டார்...''



''டாக்டர்! எனக்கு எக்ஸ்ரே, ஈ.ஸி.ஜி. என்டோஸ்கோபி, யு.எஸ். ஸ்கேனிங், பயாப்ஸி இதெல்லாம் எடுத்துப் பார்த்ததில் என்ன தெரியுது?''

''நீங்க வசதியானவர்னு!''

- ஆர். ரகோத்தமன்

''என்னண்ணே, நம்ப தலைவரு இப்படிப் பண்ணிட்டாரு...''

''எப்படிப் பண்ணாராம்.. பைத்தியக்காரா.. எல்லாரும் கெஞ்சிக் கேட்டதால போனாரு... அப்படியும் சும்மாப் போகலே. ஊருக்கு ஆலை வச்சு எல்லாருக்கும் வேலை வாய்ப்புன்னா சேருவேன்னு கறாராப் பேசியிருக்காரு... நம்ம அண்ணனை மொறச்சிக்கிட்டு வாழ முடியாதுன்னு அவங்க வழிக்கு வந்தானுங்க.''

''ஆலை அவங்க மச்சான் பேருலேன்னு...''

''டேய்... அது சும்மா எவனோ கொளுத்திப் போட்டதுடா... இதெல்லாமா நம்பறது. விழிப்பா இருக்கணும்டா... கோர்ட்டுல ஈரங்கி இருக்கு மறந்துட்டியா... பொறப்படு...''

அண்ணாச்சி, என்னது... அந்தாளக் கொண்டு போய்க் கட்சியில சேத்துருக்காங்க!''

''நாம எங்கடா சேத்தோம்... அந்தாளே நம்ம காலுல விழுந்து கட்சி மாறிட்டான்... நம்ப தலைவருதான் பழிவைவனாச்சேன்னு, போனாப் போவுதுன்னு சேத்துக்கிட்டாரு... மறப்போம் மன்னிப்போம்கறதுதான் அவரோட குணமாச்சே.. கண்டிஷன் போட்டாரே. கவனிக்கலியா நீ...? 'சொந்த லாபத்துக்கு வராதே... ஆலை வைச்சா அது ஊரு ஜனங்களுக்கு வேலை போட்டுக் குடுக்கத்தான்'னுட்டாரு... நம்மாளுகிட்ட நடக்குமா...?''

''நமக்குப் பட்டா போட்டுத் தரேன்னு...?''

''லேய்... எவனோ கௌப்பி விட்ட புருடாடா அது... அப்படிச் சொன்னா தலைவரு விட்டுருப்பாரா...? சீ்டா...!''

''ஆலையில தலைவர் மச்சானுக்கு...''

''இப்பத்தானே சொன்னேன் - வதந்திய நம்பாதேன்னு... நீயே இப்படி இருந்தா பாமர ஜனங்க என்னடா பண்ணும்...! எப்பவும் சுதாரிப்பா இருக்கணும்... கோர்ட்டுக்கு நாழியாச்சில்ல.. மசமசன்னு வெட்டிக் கதை பேசிக்கிட்டு!''

4

தெற்காக நீள்கிற அகலமான தேசிய நெடுஞ்சாலையின் இடது விளிம்பில் சொர்ணம். மெதுநடையாக நடக்கிறாள்.

கொஞ்சம் தள்ளி சிரிப்பும் கும்மாளமுமாய் அந்த மூவர். அதிலும் ராசாத்தியின் குதியும் கும்மாளமும்தான் ஜாஸ்தி.

யார் என்ன சொல்லி விட்டாலும், ராசாத்திக்குச் சிரிப்புத்தான். எதற்குத்தான் சிரிப்பது என்கிற விவஸ்தையும் கிடையாது. இன்னதுதான் பேசுவது என்கிற தாரதம்மியமும் கிடையாது. எல்லாமே பேச்சுதான். எல்லாத்துக்கும் சிரிப்புதான்.

'ஏண்டி இப்படி' என்றால்... அலட்சியமாய் எடுத்து வீச அவள் வாயில் பதில் ரெடியாக இருக்கும்.

''அறிவோட பேசினா... அந்த நிமிஷம் பேசுறதுக்குத்தான் விஷயம் இருக்கும். நெதம் ஒன்னரையும் ஒன்னரையும் மூணு மைல் நடந்து சாகணும். நடை தோணாம இருக்கணும். அலுப்பு தெரியக் கூடாது. நேரம் போறது தெரியாம இருக்கணும். அதுக்கு என்ன செய்ய? என்னத்தையாச்சும் பேசிக் கழிச்சு, எப்படியாச்சும் சிரிச்சு, நாம நம்ம மனசை ஏமாத்திக்கிட வேண்டியிருக்கு. இல்லே?''

யோசித்துப் பார்த்தால்... ராசாத்தி சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. ஒரு வாழ்க்கை நிஜம் இருக்கிறது.

வெட்டிப் பேச்சுகளிலும், வீண் அரட்டைகளிலும், குழாயடிக் கசகசப்புகளிலும், விருதா வம்பு தும்புக் கச்சேரிகளிலும் காலத்தையும் காற்றையும் மனுஷ மக்கள் விரையப்படுத்துகிறார்களே... ஏன்?

உள்ளுறைந்து அழுத்துகிற வாழ்க்கை நிஜங்களையும், துன்ப அவலங்களையும் மனசால் மறந்து, தற்காலிக விடுதலை பெறுகிற செயற்கையான முயற்சிகள் தானா?

சொர்ணத்தின் இடதுகையில் தூக்குச் சட்டி. அதே உள்ளங்கையில் டப்பாவும், சிட்டையும். காற்றைச் சீவிக் கொண்டு சன்னமாய் வீசுகிற வலது கை. ஒரே சீரான நடை. மனசுக்குள் நுட்பமாய் ஓடுகிற நினைவுகள்.

முன்னால் செல்கிறவர்களை எடை போடுவதைப் போலப் பார்க்கிறாள், சொர்ணம்.

கெங்கம்மாவின் பின்னங்கழுத்து தெரிகிறது. அவள் சடைப் பின்னலுக்கும் கழுத்துக்கும் அவ்வளவாக வித்தியாசமில்லை. ஒரே கறுப்பு.

ராமலட்சுமிக்குக் குச்சி போல உடம்பு.

ராசாத்தி, 'குட்டைக் கத்தரிக்காய்' குள்ளம். சற்றுக் குண்டு போலத் தோன்றும்.

ஆனால், அம்சமான - லட்சணமான முகம்.

சொர்ணம் தன்னைப் பற்றியும் நினைத்துக் கொள்வாள். இவர்களோடு இணைத்து ஒப்பிடுவதே தப்பு. இவள் அழகு அப்படி. பத்தோடு பதினொன்று என்பதைப் போலல்ல, இவள்.

தனியானவள். தனித்துவம் நிறைந்தவள். எண்ணற்று பூத்து ஜொலிக்கும் நட்சத்திரங்களில் ஒன்றல்ல. ஆகாயத்தின் நிலவு. ஒற்றையாய்த் தனித்து ஜொலிக்கும் நிலவு. மேகத்தால் கூட மூடி விட முடியாத ஒளித் தகதகப்பு.

''ஏய் ராசு, சொர்ணம் பின்னாலேயே வாராளே, என்னவாம்?''

''அவ என்னிக்குத்தான் நம்ம கூட வந்தா?''

''அதாண்டி கேக்கேன், அவா மட்டும் தனிச்சு வாராளே, அது என்ன சங்கதி?''



மேலாண்மை பொன்னுச்சாமி

''நம்ம கூட ஒட்டி வந்தா... பேயடிச்சிருமாம்.''

''பேயடிச்சாலும் அவளை மட்டும் தவிர்க்கத்தான் அடிக்கும்.''

''எதுக்கு?''

''பேய் கூட தராதரம் பாத்துத்தானே வந்து அடிக்கும்? அவதானே சினிமா ஸ்டார் கணக்கா இருக்கா?''

''கெங்கு, நீ ஆயிரம்தான் சொல்லு... சொர்ணம், நெசமாவே.. ரேவதி கணக்கா இருக்காடி..''

''சினிமாக்காரங்க கண்ணுலே பட்டாள்னா... இவளை ஒரே கொத்தா கொத்திக்கிட்டுப் போயிருவாக.''

பேச்சும் சிரிப்பும் அமளி துமளிப் பட்டது. ராசாத்தி குதித்துக் குதித்துச் சிரித்தாள். எல்லாம் சொர்ணம் காதில் விழத்தான் செய்தது.

உள்ளுக்குள், பூக்களை அள்ளிச் சொரிகிற சுகம். பனி படர்ந்த பூவிதழ்களால் மென்மையாய் வருடி விட்ட மாதிரி... ஒரு புல்லரிப்பு. பூரிப்பு. பெருமிதத் ததும்பல்.

ஆனால், வெளிப் பகட்டுக்காகக் கோபிப்பது போல கண்டித்தாள். கண்களை வெறுப்புடன் இடுக்கினாள்.

''ஏய் கொரங்குகளா... என்னைப் பத்தி என்னடி பொரணி?''

''எங்க ஊரு ராணி நீ. ஒன்னைப் பத்தி பொரணி பேசிர முடியுமா? கழுத்தைச் சீவிட மாட்டே?''

ராசாத்தி பயப்படுவதைப் போல நடித்துச் சிரிக்க, ராமலட்சுமி உண்மையை உடைத்தாள்.

''நீ ரேவதி கணக்கா இருக்கியாம். ஒன்னைப் பார்த்தால், சினிமாவுலே நடிக்கக் கூட்டிட்டு போயிருவாகளாம்.''

''நா சம்மதிச்சாத்தானே?''

''ஒனக்குக் கசக்குமாக்கும்?''



"போங்கடி, தலைநிறைய தங்கத்தைக் குமிச்சிட்டு, கால்லே வுழுந்து கூப்பிட்டா லும்... நா நடிக்கப் போக மாட்டேண்டி."

"நாள் பூராவும் பசை இழுவி பெட்டி ஒட்டினாலும், குறுக்கு வலிதான் மிச்சம். பானைஞ்சு ரூவா சம்பளம் கூட கைக்கு எட்ட மாட்டேங்குது. சினிமாவுலே நடிச்சா... லட்சம் லட்சமா பணம் குமியுமே. கட்டில்லே பணத்தை விரிச்சு, படுத்துப் புரளலாமே."

"வாயைப் பொளக்காதேடி. பணத்துக் காக மானத்தை உதுத்திட்டா... உசுர் வாழ ணும்?"

"நடிக்கிறவுக எல்லாம் மானங்கெட்ட வுகளா?"

"அதெல்லாம் யாருக்குத் தெரியும்? கூச்சம் வெக்கத்தை உதுத்துனால்தானே அப்படியெல்லாம் நடிக்க முடியும்? நம் மாலே அப்படி உதுத்திட்டு இருக்க முடியா தம்மா."

"லட்சம் லட்சமாப் பணத்தை அள்ளிக் குடுத்தா?"

"ஏண்டி, நூறு பேரு பாத்துக்கிட்டிருக் கிற கூட்டத்துலே, ஒருத்தன் ஒங்கையைப் பிடிச்சு இழுத்து, கட்டியணைச்சு முத்தம் குடுத்துட்டு, நூறு ரூவா குடுத்தா... சரிம் பியா?"

"அதெப்படி? வெளக்கமாத்தை எடுத்து சாத்திருவேன், சாந்தி."

"அப்படித்தாண்டி நானும்."

இத்தனைக்கும் பிறகு ராசாத்தி கிண்டிக் கிளறினாள். "எட்டாப்பழம் புளிக்கத் தானே செய்யும்?"

வெடுக்கென்று அவளைப் பார்த்தாள். கண்களில் உஷ்ணச் சிதறல். எதுவும் பேச விருப்பமற்று, உதடுகள் துடிக்க மௌன மாகி விட்டாள்.

இதற்கு மேல் இவளுடன் பேசுவது கூட தகுதிக் குறைவு என்கிற கோப மௌனத்தில் உறைந்து போனாள், சொர்ணம்.

நொறுங்கிப் போன கிராமங்களிலிருந்து வேலை தேடி வியர்வை கொட்டி, பிழைப்பிற்காகப் புற்றீசல்களாகப் படையெடுத்து வருகிற ஜனத்தையெல்லாம்... பிரம்மாண்டமான ராட்சஸனாக வாய் பிளந்து விழுங்கி ஏப்பமிடத் தயாராக இருக்கிற அந்தச் சிறிய தொழில் நகரம்.

நெட்டி முறித்து உறக்கத்தை உதறி விட்டு, பெருத்த கொட்டாவியோடு மலையாகப் புரண்டு எழுகிற அசுரமாய்... நகரம்.

நடந்து வருகிற இளஞ்சிட்டுக்களை, தாவணி மொட்டுக்களை கண்ணால் நுகர்வதற்காகவே நோட்டும் கையுமாக ரோட்டோரக் கடைகளில் நிற்கிற கல்லூரி மாணவர்கள். அவர்கள் கண்களில் வெட்கமற்ற விடலைத் தாகம்.

பஞ்சாயத்து யூனியன் கட்டடம், பி. ஆர். சி. பணிமனை, சினிமா தியேட்டர். இன்னும் கொஞ்ச தூரம்தான், பஸ் நிலையம்.

அதையும் தாண்டிச் சென்றால்... 'ரத்னம்' தீப்பெட்டியாபீஸ் வந்து விடும்.

பஸ் நிலையத்துக்கு எதிர்ப்புறத்தில், வரிசையாகச் சேவுக் கடைகள். பார்க்கப் பார்க்க எச்சில் ஊறும். இப்போதே கடையைத் திறந்து வைத்து, பத்தி பொருத்தி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சாயங்காலம் ஆகி விட்டால்.. இந்த இடத்தில் விலக முடியாது. ஒருத்தர் தோளை ஒருத்தர் உரசிக் கொண்டு, 'ஜேஜே' என்று மனிதக் கூட்டம்.

இப்போது -

ரோடு வெறிச்சென்று கிடக்கிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாய் ஆட்கள். கழுதைகள். வாலைச் சுழற்றிக் கொண்டு பன்றிகள்.

இடதுபுறத்தில் வரிசையாக ரிக்ஷாக்கள். அதற்குள் முடங்கிக் கொண்டு கைலியை இழுத்து மூடிக் கொண்டு கிடக்கிற ரிக்ஷாக்காரர்கள்.

"அந்தாளு சரியான மெண்டல் பேர்வழியா இருப்பார்னு தோணுது சார்."

" 'மானேஜர் பிஸி'யா இருக்கார், அவரை இப்ப பார்க்க முடியாதுன்னு சொன்னதுக்கு, 'எத்தனை மணிக்கு முழிக்கக்குவார்'னு கேக்கறாரே!"

– சீர்காழி வி. ரேவதி




"ஒரே இளநீர்ல, ரெண்டு 'ஸ்ட்ரா' போட்டு ரெண்டு பேருமா சாப்பிடலாமா டியர்...?"

"ஆசையைப் பாரு...! ஒரே மூச்சுல எல்லா இளநீரையும் உறிஞ்சிட்டுப் போயிடலாம்னு பாக்கறீங்களா...?"



இப்போது

ஃபாரெக்ஸ் ஊட்டச்சத்து தெவிடாத புதிய சுவையிலே!




புதிய
எக்ஸ்ட்ரூஷன்
முறை

உங்கள் வளரும் குழந்தைக்கு.

குழந்தை உணவு தயாரிப்பில் எக்ஸ்ட்ரூஷன் ஒரு அதி நவீன முறையாகும். இது, உங்கள் குழந்தைக்கான ஃபாரெக்ஸை மேலும் சிறப்புடன் தயாரிக்கிறது.

■ இம்முறையில் ஃபாரெக்ஸ் முன்பே-பக்குவப் படுத்தப்படுவதால், அது சுவைமிக்கதாக இருக்கிறது; உங்கள் குழந்தைக்கு எளிதாக ஜீரணிக்க உதவுகிறது.

■ இப்போது, வைட்டமின்கள் செறிந்துள்ள ஃபாரெக்ஸ், உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு உதவுகிறது.



ஃபாரெக்ஸ் சுவையுடன் வளரும் வழி.

முக்கிய அறிவிப்பு: தாய்ப்பால் உங்கள் குழந்தைக்கு சிறந்தது. நான்கு மாதங்கள் முதல் உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் மட்டுமின்றி தானிய உணவையும் கொடுங்கள். Gx.678.92 Tm.

அவர்கள் தலைக்கு மேல் உயரத்தில் சினிமாத் தட்டிப் போர்டுகள்.

''ஏய் ராசாத்தி இங்க பாரடி, படம் மாத்திட்டாக.''

''ஆமாண்டி. அய்ய்ய்! ரஜினி படம்டி. இதென்னடி, நம்ம பட்டிக்காட்டுக் கிழவன் கணக்கா... ரஜினி இருக்காருடி. இது என்ன படம்?''

''எங்கேயோ கேட்ட குரல்'' என்றாள் சொர்ணம்.

''ரஜினி ஸ்டண்டுக்கும், ஸ்டைலுக்கும் தான் நல்லாருக்கும். கிழவனா வந்தா... படம் நல்லாருக்காது.''

''இது பெரிய வெற்றிப் படம். வெள்ளி விழா கொண்டாடுன படம்டி.''

''அப்படியா! அப்படீன்னா... இதைப் பாக்கணுமே.''

சொர்ணம் இப்போதும் ராசாத்தியைக் கண்டித்தாள்.

''ஏண்டி, வெறும் பேச்சா பேசிக்கிட்டு வாரே? வாயை மூடிக்கிட்டு வாயேன். நம்மாலே சினிமா பாக்க முடியுமா?''

''நாம ஆம்பளையா பொறந்துருக்கணும்.''

''பொறந்துருந்தா...?''

''வேலைக்கு வந்துட்டு, இஷ்டம் போல சினிமா கினிமா பாத்துட்டு, ராத் தங்கி, ராசா போல வீடு போகலாம். பொட்டச்சியா பொறந்து தொலைச்சதாலே... நாம நம்ம ரெக்கைகளை ஒடிச்சுட்டு, ஒடுங்கிக்கிட வேண்டியிருக்கு.''

விளையாட்டு வேடிக்கையாக ராசாத்தி பேசிச் சிரிக்கிறாள். அதற்குள் எத்தனை கொடிய வேதனை உள்ரணமாகத் துடிக்கிறது! உறைந்து கிடக்கிற சோகம்.

பெண் ஜன்மமாய்ப் பிறந்து விட்டதால் நேர்கிற இயற்கையான இடர்பாடுகளும் உபாதைகளும் போதாதென்று, சமூகத்தில் செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளும் ஒடுக்குமுறைகளுமாய்....

ஒரு விடலைப் பையனுக்குரிய உரிமையையும், சலுகையையும், உழைக்கிற ஒரு விடலைப் பெண் எடுத்துக் கொள்ள முடியவில்லையே! நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லையே...

அடக்க ஒடுக்கமாய்ப் பண்போடு இருத்தல் என்கிற பெண் லட்சணத்திற்காகச் சொந்தச் சிறகுகளைச் சுயமாகவே நறுக்கிக் கொண்டு, நத்தைகளாய்க் கூட்டுக்குள் உள்வாங்கிக் கொண்டு... ச்சே!

சொர்ணத்திற்குள் ஆழமாய் அலை அலையாய் நினைவுகள். உலுக்கப்பட்ட மனசின் ஆழத்திலிருந்து பீறிடுகிற நினைவுகள். கிளறிக் கிளறி வாழ்வின் நிஜங்களை உணர்த்துகிற அவல நினைவுகள்.

'ச்சே! ஆம்பளைக்கு என்ன தனியாகக் கொம்பா முளைச்சிருக்கு? இல்லே, பன்னெண்டு மாசம் கர்ப்பத்துலே இருக்காகளா?'

''ஏய் சொர்ணம், நடந்துக்கிட்டே கனா காண்றீயா? ஆபீஸ் வந்துருச்சு.''

ராசாத்திதான் தோளைத் தட்டினாள். அவளும் விழித்துக் கொண்டாள். வினாடி நேரத் திகைப்பு. அதற்குள் சமாளித்துக் கொண்டாள்.

''எனக்குக் கண்ணு இருக்குல்லே? நீ சொல்லணுமாக்கும்? வாயைப் பொத்துடி.''

''சரி சரி யாத்தா, கோவிச்சுக்கிடாதே ஆத்தா.''

சிரித்துக் கொண்டே ராசாத்தி ஆபீஸுக் குள் ஓட, பின்னால் இருவரும் நடையில் தொடர, இவள் தனித்துவமாய் - ஒற்றை யாய் - உள்ளே நுழைந்தாள்.

வாசலில் நின்ற வாட்ச்மேனைப் பார்க்காமல், கர்வமாய் வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள்.

நடு வட்டத்தில் பெரிய்ய்ய வெளி. அதில் குவியல் குவியலாய்க் காயப் போட்டிருக்கிற 'கற்றுப் பெட்டி'கள். சூச்சியடுக்கி, மருந்து முக்கி, வரிசை வரிசையாகக் காய வைத்திருக்கிற கட்டைகள்.

எல்லாவற்றையும் கடந்து... இவள் இவளுக்குரிய இடத்தை நோக்கி நடந்தாள்.

(தொடரும்)

- எம். சந்திரசேகர்



சூரியன்



கதாநாயகனின் பெயர்தான் படத்தின் தலைப்பும். கதை - பிரதமரைக் கொலை செய்யச் சதிசெய்த கூட்டத்தில் ஓர் அமைச்சரும் இருப்பதைத் தெரிந்து கொண்டு விடும் பாதுகாப்பு அதிகாரி சூரியன், அவரைக் கொன்று விட, பின்னணி வெளியே தெரியாத சூழ்நிலையில், சந்தர்ப்ப சாட்சியத்தின் ஆதாரத்தில் அவனை போலீஸ் கைது செய்ய முயல, தப்பியோடும் சூரியன் சதித்திட்டத்தைத் தீட்டிச் செயல்படுத்த முனைந்தவர்களைக் கண்டுபிடித்து உண்மையை வெளிப்படுத்தி, தன் குற்றமற்ற தன்மையை நிரூபிக்கிறான். இடையில் காதல், கல்யாணம், ஆடல், பாடல் எல்லாமும்.

சரத்குமார்தான் சூரியன். கம்பீரத் தோற்றமும் வலுவான உடற்கட்டும் வெகுவாகக் கைகொடுத்து உதவுகின்றன. எத்தனை பேரை ஒரே நேரத்தில் அடித்து வீழ்த்தினாலும் நம்பும் வகையில் அமைந்திருப்பதற்கு இது ஒரு காரணம். கஷ்டப்பட்டு நடிப்பதோடு, எதிரிகளைக் கஷ்டப்படுத்துவதிலும் இவர் காண்பது வெற்றி.

கதாநாயகி ரோஜா... பாந்தமான தோற்றம், பளிச்சென்ற சிரிப்பு, பேச்சில் அழகு, பாத்திரப் படைப்பில் சிறிது ரசனைக் குறைவு தென்படுகிறது என்றால் அது அவர் குற்றமல்ல.

மனோரமா என்று சொன்னாலே போதும். நடிப்பில் அனுபவம் அப்படியே பளிச்சிடுகிறது எனத் தனியாகச் சொல்லத் தேவையில்லை.

அப்பாடா! செந்திலின் துணையின்றி, விரசத்தின் வாடை கூட இல்லாமல் கவுண்டமணி! அலட்டல் அரசியல்வாதியாக வந்து வெறும் பேச்சிலேயே அனைவரையும் அசத்தி விடுகிறாரே!

கதை, வசனம், இயக்கம் பவித்ரன். வித்தியாசப்பட முயன்றிருப்பது பளிச். வெற்றியில் இவரது பங்கு பாதி என்றால் காமெராவுக்குப் பொறுப்பேற்றுள்ள அசோக்குமாரின் பங்கு மீதி. அதுவும் பெங்களூர் தெருக்களில் சரத்குமார் தப்பியோட, போலீஸ் துரத்த... இணையாகக் காமெராவும் துரத்திச் சென்று படமாக்கி, பரபரப்பு ஏற்படுத்தி இருப்பதற்கு ஒரு தனி ஷொட்டு.

– சி. ஆர். கே.


இனி ஒரு சதி
4
கதை:
பத்மா ரவிசங்கர்
படம்: ஜெயராஜ்..
தொழிலதிபர் சந்திரசேகரின் நிலையை விவரித்தார் டாக்டர்...
அவர் உயிரைத்தான் என்னால் காப்பாற்ற முடிஞ்சுது. ஆனா விஷம் வேகமா பரவி...
அவர் மூளையின் முக்கால்வாசி நரம்புகளைப் பாதிச்சுடுச்சு. இனி அவர் ஒரு வெஜிடபிள்தான்!
மைகாட்!
ஐயோ!
மூச்சு விட்டுக் கிட்டிருப்பார். ஆனா எந்த விதத்திலும் இயக்க சக்தி எதிர் பார்க்க முடியாது.. நாளைக்கு டிஸ்சார்ஜ் பண்ணிடறேன்...
..அவரைக் கவனிக்க ஆள் போட்டுடுங்க.
பாலாஜி இருக்கானே, என் தம்பி மகன்.
வேலைக்குச் சேர்ந்த முதல் நாளே பெரியவரின் பாராட்டைப் பெற்றவன்.
கார்த்திகேயன் சப் இன்ஸ்பெக் டருடன் புறப்பட்டார்...
ஆராவமுது! சந்திரசேகருக்கு ஏராள சொத்து!



சொத்துதான் கொலைக்குக் காரணமாயிருக்குமோ? உயில் ஏதாவது...?
அவர் குடும்ப வக்கீல் விக்ரம்மைப் பார்ப்போம்.
ஆனால் ஏமாற்றம்...
அவர் டில்லியிலிருந்து திரும்ப இன்னும் ரெண்டு மூணு நாள் ஆகுமே. போய் பத்து நாளாச்சு.
இரண்டு நாட்கள் சென்று...
சிங்கம் மாதிரி இருந்தார், மாமா! இப்ப காணச் சகிக்கலை...
தில்வம்! உனக்கு யார் மீதாவது சந்தேகமா?
வேற யாரு? அந்த ஃபிராடு பய யுவராஜ் மேலதான். வறுமை வேஷம் போட்டு வேலைக்குச் சேர்ந்தான். மாமாவுக்கு வெள்ளை மனசு. பணத்தை ஏராளமாச் சுருட்டி யிருப்பான்...
மாமாவுக்கு விஷயம் தெரிய வந்திருக்கும்... அதனால் அவரையே சுருள வைச்சுட்டான்! அவன் நடிப்பை நம்பாதீங்க...
ஐ ஸீ!
தொடரும்

புதுப்புது உறவுகள்

அந்தப் பெண்ணின் முகம் பரிச்சயமில்லாததாயிருந்தது.

விஸ்வநாதன் நெற்றிச் சுருக்கி யோசித்தான்.

''நான் விஸ்வநாதன்... உங்களுக்கு என்ன வேண்டும்?'' தயக்கமாய்க் கேட்டான்.

''நான் தமயந்தி... உங்ககிட்டே கொஞ்சம் பர்சனலாப் பேசணும்!''

விஸ்வநாதன் தயங்கினான்.

''ஸாரி... எனக்கு உங்களைத் தெரியலையே!''

''கொஞ்சம் விளக்கமாப் பேசணும். அப்பத்தான் புரியும். ஒரு பத்து நிமிஷம் பர்மிஷன் சொல்லிட்டு வாங்க... இங்க கூட்டமாயிருக்கு...!''

விஸ்வநாதனுக்குச் சற்று ஆச்சர்யமாயிருந்தது.

அந்தப் பெண்ணின் முகத்தில் மெலிதான சோகம் தெரிந்தது.

காண்டீனில் அவ்வளவாகக் கூட்டமில்லை.

''இப்பச் சொல்லுங்க...!''

தமயந்தி சற்றுத் தயங்கினாள்.

''ஏன் தயங்குறீங்க? தைரியமாச் சொல்லுங்க!''

''நான் உங்களை அண்ணான்னு கூப்பிடலாமா?'' தமயந்தி சற்றுக் கூச்சத்துடன் கேட்டாள்.

விஸ்வநாதனுக்குள் ஒரு திரை விலகியது.

''அப்ப நீங்க...?'' என்றான்.

''ஆ ம ா ம். நான் வடிவுதேவியின் பெண். உங்கள் தந்தையின் இரண்டாவது மனைவியின் பெண்...!''

இப்போது நன்றாக அடையாளம் தெரிந்தது.

அந்தக் கூர்மையான நாசி, அடர்த்தியான புருவம். அப்பாவின் சாயல் தென்பட்டது.

விஸ்வநாதன் முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டான்.

அம்மா இவர்களைப் பற்றி விளக்கமாய்ச் சொல்லியிருக்கிறாள்.

வடிவுதேவி அப்பாவுடன் ஒன்றாக வேலை பார்த்தவள்.

மதுமிதா



அப்பா சங்கீதப் பித்து.

அம்மாவுக்கும், சங்கீதத்துக்கும் ஜன்மப் பகை.

வடிவுதேவி சங்கீதத்தால் அப்பாவை வளைத்தாள்.

அம்மாவின் எதிர்ப்பு அம்புகள் வடிவுதேவியின் முன்னால் முனை மழுங்கிப் போயின.

அப்பா வடிவுதேவியைப் பக்கத்து ஊரில் குடிவைத்தார்.

அம்மாவுக்கும், இவனுக்கும் எந்தக் குறையும் வைக்கவில்லை.

ஆனால் ஒருமுறை கூட அந்தக் குடும்பத்தைச் சந்தித்ததேயில்லை.

இப்போது ஏன் இந்தப் பெண் இங்கு வந்து புதிர் போடுகிறது?

''அப்பா செத்ததுக்குச் சொல்லி அனுப்பிச்சோமே... ஏன் வரலை? ரொம்ப நாழி வச்சிருந்தோம்...!''

தமயந்தியின் கண்களில் நீர் திரை விட்டது.

''அப்பா முன்னாடியே சொல்லிட்டார்...!''

''என்னன்னு?''

''அவர் செத்தா, நாங்க அங்க வரக் கூடாதுன்னு...!''

விஸ்வநாதன் பதறிப் போனான்.

''ஏன் தமயந்தி?''

''நாங்க வந்தா உங்க அம்மாவுக்குக் கஷ்டமாயிருக்கும்னு சொல்லிட்டார். எங்கிட்ட சத்தியம் வாங்கிட்டார்...!''

அப்பா! நீயா இப்படிச் செய்தே?

''இல்லே... என் அப்பா அப்படி சொல்லியிருக்க மாட்டார்... நான் நம்ப மாட்டேன்... அப்பா உயிரோட இருந்தப்ப பாபம்... செத்த பிறகு விட்டுட்டீங்க...!''

தமயந்தி விசும்பினாள்.

''இல்லேண்ணா... அப்படி கேவல மாப் பேசாதீங்க... ராமநாதன் சாருக்கு எல்லா விஷயமும் தெரியும். அவரைக் கேளுங்க...!''

தமயந்தியின் முகத்தில் வேதனை தெரிந்தது.

விஸ்வநாதன் சற்று இளகினான்.

''சரி... விடுங்க... இப்ப என்ன விஷயம்?''

''அம்மாவுக்கு உடம்பு சரியில்லே...!''

''என்ன பண்றது?''

''எல்லாக் கோளாறும் இருக்கு... டாக்டருங்க கை விரிச்சுட்டாங்க...!''



''இப்ப எங்க டிரீட்மெண்ட் எடுத்துக்கறாங்க?''

''இங்கதான்... கவர்மெண்ட் ஹாஸ்பிட்டல்ல வச்சிருக்கேன்.. வந்து ஒரு வாரமாச்சு.. இப்பத்தான் டாக்டர் சொன்னாங்க.. இன்னும் சில மணி நேரம்தான்.. வீட்டுக்கு எடுத்துட்டுப் போகச் சொல்லிட்டாங்க...!''

விஸ்வநாதன் மௌனமாயிருந்தான்.

''எனக்குன்னு யாருமில்லே... அம்மா மட்டும்தான். எனக்குப் பயமாயிருக்கு அண்ணா!''

விஸ்வநாதன் உள்ளுக்குள் வாடிட்டான்.

'விஸ்வநாதா. பழசை மறந்திடு.'

'எப்படி மறக்கறது?'

'அம்மா எப்படித் துடிச்சிருப்பா?'

'வேண்டாம். சாகக் கிடப்பது உன் தந்தையின் பிரியத்துக்குரியவள்.'

'எதிரில் தவிக்கும் இந்தப் பெண் உன் தங்கை.'

'தந்தையுமின்றி, தாயுமின்றி தவித்து நிற்கும் பெண்ணின் நி லை மிகவும் ஹிம்சை.'

விஸ்வநாதன் தெளிந்தான்.

''ஏன் தமயந்தி இவ்வளவு லேட்டா என்கிட்ட வர்றே?''

''அம்மா பிடிவாதமாய் மறுத்துட்டா. கடைசி முறையா அப்பாவையே பாக்கப் போகலை. அங்க உதவிக்காகப் போகக்கூடாதுன்னுட்டா. இப்ப கண்முழிச்சுப் பாத்தா திட்டுவா.. ஆனா.. கண்முழிப்பாளா?''

''இப்ப அம்மாவுக்குத் துணை யாரு இருக்கா?''

''யாருமில்லே. பக்கத்து பெட்ல ஒரு பாட்டி இருக்கு. அதப் பாத்துக்கச் சொல்லிட்டு வந்தேன். சீக்கிரம் போகணும்.. எனக்கு ரொம்ப பயமாயிருக்கு அண்ணா... உங்களால என்னோட வர முடியுமா?''

கைகளை நீட்டி அவன் கையைப் பற்றினாள்.

அம்மாவுக்குத் தெரிந்தால் திட்டுவாள்.

பரவாயில்லை.

ஒற்றை நிமிஷத்தில் தீர்மானித்தான்.

''சரி... கிளம்பு தமயந்தி...!''

ஆஸ்பத்திரி வாசலிலேயே அந்தப் பாட்டி காத்துக் கொண்டிருந்தாள்.

இவனைப் பார்த்ததும் கையை நீட்டி அழுதாள்.

விஸ்வநாதன் புரிந்து கொண்டான்.

தமயந்தி உடைந்து போய் இ வ ன் தோளில் புதைந்தாள்.

சிவகாமியின் சபதம்

இருபத்தோராம் அத்தியாயம்
புலிகேசியின் கலைமோகம்

புலிகேசிச் சக்கரவர்த்தி வாதாபியில் இல்லை, - அஜந்தாவுக்குப் போயிருக்கிறான் என்று குண்டோதரன் கூறிய செய்தி அங்கிருந்த நால்வருக்கும் வியப்பையும் குதூகலத்தையும், அளித்தது என்பது அவர் கள் வாயிலிருந்து வந்த விநோதமான சப்தங் களிலிருந்து தெரியவந்தது.

''ஆஹாஹோஹோ!''

''ஓஹ்ஹோ!''

''ஹோஹோஹோ!''

''சே சே சே!''

என்றெல்லாம் அர்த்தமில்லாத ஓசைகளை வெளியிட்ட பிறகு, ஏக காலத்தில் நால்வரும் குண்டோதரனைப் பார்த்து, ''நிஜந்தானா?'' ''உண்மையா?'' ''அஜந்தாவுக்கா போயிருக்கிறான்?'' ''புலிகேசிக்கு அஜந்தாவில் என்ன வேலை?'' என்று சரமாரியாகக் கேள்விகளைப் பொழிந்தார்கள்.

அப்போது மாமல்லர், ''இப்படி எல்லாருமாகக் குண்டோதரனைத் துளைத்தால், அவன் எப்படி மறுமொழி சொல்லுவான்? கொஞ்சம் சும்மா இருங்கள். குண்டோதரா! உன் பிரயாணத்தைப் பற்றிய விவரங்களை ஆதியோடந்தமாகச் சொல்லு!'' என்றார்.

குண்டோதரன் சக்கரவர்த்தியைப் பணிந்து விட்டுக் கூறினான் : ''பல்லவேந்திரா! இந்த ஏழை சந்தேகமறத் தெரிந்து கொண்டு, வந்த உண்மையைத்தான் கூறினேன். புலிகேசிச் சக்கரவர்த்தி அஜந்தாவுக்குத்தான் போயிருக்கிறார். யாரோ சீனாவிலிருந்து ஒரு யாத்திரிகன் வந்திருக்கிறானாம். அவன் பெயர் என் வாயில் நுழையவில்லை. 'ஹியூன் சங்' என்று சொன்னார்கள். அவன் உத்தர தேசத்தில் கன்யாகுப்ஜம், காசி, கயா முதலிய க்ஷேத்திரங்களையெல்லாம் பார்த்துவிட்டு வந்தானாம். கன்யாகுப்ஜத்தில் ஹர்ஷ சக்கரவர்த்தியின் ஆட்சி மகிமையைப் பற்றி அவன் வர்ணித்தானாம், ஹர்ஷ சக்கரவர்த்திக்குத் தான் குறைந்து போய் விடவில்லையென்று வாதாபிச் சக்கரவர்த்தி அந்த யாத்திரிகனைத் தானே நேரில் அழைத்துக் கொண்டு அஜந்தாவின் சிற்ப சித்திர அதிசயங்களைக் காட்டுவதற்காகப் போயிருக்கிறாராம்! பிரபு! இப்போதெல்லாம் புலிகேசிச் சக்கரவர்த்திக்குக் கலைகளிலே ரொம்ப மோகமாம்! வாதாபியிலுள்ள பாறைகளையெல்லாம் குடைந்து மாமல்லபுரத்துச் சிற்பங்களைப் போல் அமைத்துக் கொண்டிருக்கிறாராம்! நமது தொண்டை மண்டலத்திலிருந்து கைகால்களை வெட்டாமல் சிறைப்பிடித்துக் கொண்டு போன சிற்பிகள் சிலர் அந்தப் பாறைகளில் வேலை செய்வதை நானே பார்த்தேன். ஆனால், ஒரு வேடிக்கையைக் கேளுங்கள். அந்தச் சீன யாத்திரிகன் ஹியூன் சங்கைப் புலிகேசி மேற்படி சிற்பப் பாறைகளுக்கு அழைத்துச் சென்று காட்டிய போது, 'இந்தப் பாறைச் சிற்பங்களைப் பார்த்து விட்டுத்தான் காஞ்சி மகேந்திர பல்லவன் மாமல்லபுரத்தில் இதே மாதிரி செய்யப் பிரயத்தனப்பட்டான்! அவனுக்கு நல்ல புத்தி கற்பித்து விட்டு வந்

அமரர் கல்கி

தேன்!' என்றானாம். இதைப் பற்றிக் கேட்ட போது எனக்கு என்னமாயிருந்தது, தெரியுமா? இரத்தம் கொதித்தது! வாதாபி நாற்சந்தியில் உள்ள ஜயஸ்தம்பத்தில் காஞ்சி மகேந்திர பல்லவரை வாதாபிப் புலிகேசி புறங்கண்டதாக எழுதியிருக்கும் பொய்யும் இன்னும் அப்படியேதான் இருக்கிறது. பிரபு! இதற்கெல்லாம் காலம் இன்னும் மூன்று மாதந்தானே என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு திரும்பி வந்தேன். வாதாபியில் யுத்த ஏற்பாடுகள் ஒன்றுமே நடக்கவில்லை. இந்த வருஷம் நம்முடைய படையெடுப்பை அவர்கள் எதிர்பார்க்கவே இல்லையாம்! வாதாபிச் சைனியம் வடக்கே நர்மதைக் கரையிலும் கிழக்கே வேங்கியிலுமாகச் சிதறிக் கிடக்கிறது!''

இவ்விதம் குண்டோதரன் சொல்லிச் சற்று நிறுத்தியதும், மாமல்லர் பரஞ்சோதியைப் பார்த்து, ''சேனாதிபதி! பார்த்தீரா? நம் சத்ருக்னனுடைய யுக்தி இவ்வளவு நன்றாகப் பலிக்கும், என்று நாம்



கூட எதிர்பார்க்கவில்லையல்லவா?'' என்றார்!

சத்ருக்னன் அப்போது பணிவான குரலில், ''பல்லவேந்திரா அடியேனுடைய யுக்தி என்று ஏன் சொல்லுகிறீர்கள்? தாங்களும் சேனாதிபதியும் சேர்ந்து தீர்மானித்ததைத்தானே நான் நிறைவேற்றினேன்!'' என்றான்.

அதற்குச் சேனாதிபதி பரஞ்சோதி, ''சத்ருக்னர் சொல்வது உண்மைதான்! எல்லாம் மகேந்திர பல்லவரிடம் நாம் மூவரும் கற்றுக் கொண்டதுதானே? இந்த யுத்தத்திலே நாம் ஜயம் பெற்றோமானால் அதனுடைய பெருமை முழுவதும் விசித்திர சித்தருக்கே சேர வேண்டியது!'' என்றார்.

''சேனாதிபதி! 'யுத்தத்தில் ஜயம் பெற்றோமானால்... என்று நீங்கள் சொல்வதை நான் ஆட்சேபிக்கிறேன். ஜயத்தைப் பற்றி என்ன சந்தேகம் இருக்கிறது? ஆனால், எந்த 'யுக்தி'யைப் பற்றி நீங்கள் எல்லோரும் பேசுகிறீர்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. தயவுசெய்து சொன்னால் தேவலை!'' என்றான் ஆதித்தவர்மன்.

''அப்படிக் கேள், தம்பி! அதைச் சொன்னால் மகேந்திர பல்லவர் எங்களுக்கு அளித்த பயிற்சி இப்போது எவ்வளவு தூரம் பயன்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்வாய். சென்ற ஒன்பது வருஷமாக நானும் சேனாதிபதியும் இந்தப் படையெடுப்புக்காக ஆயத்தம் செய்து வந்த போது, சத்ருக்னனுடைய ஒற்றர் படையும் மிகத் திறமையாக வேலை செய்து வந்தது. நம் ஒற்றர் படையிலே சிலர் சத்ருக்னனுடைய தூண்டுதலின் பேரில் நம் யுத்த ரகசியங்களை வாதாபிச் சக்கரவர்த்திக்கு விற்பனை செய்யத் தொடங்கினார்கள். முதலில் சில காலம் உண்மையான தகவல்களையே அனுப்பிக் கொண்டிருந்தபடியால் புலிகேசிக்கு நம்பிக்கை ஏற்பட்டது. மூன்று வருஷத்துக்கு முன்னால், 'இந்த வருஷம் பல்லவ சைனியம் வாதாபியின் மேல் படையெடுத்து வரப் போகிறது' என்று செய்தி போயிற்று. புலிகேசி அதை நம்பிப் பெரிய ஆயத்தங்கள் செய்திருந்தான். ஆனால், பல்லவ சைனியம் வராமல் ஏமாந்தான். இப்படியே மூன்று வருஷம் ஏமாந்த பிறகு புலிகேசி கோபங்கொண்டு பழைய ஒற்றர்களையெல்லாம் தள்ளி விடச் செய்தான். புதிய ஒற்றர்கள் இந்த வருஷத்தில், வாதாபி மேல் படையெடுக்கும் உத்தேசமே இங்கு இல்லை என்றும், மானவன்மனுக்கு இலங்கையைப் பிடித்துக் கொடுப்பதற்காகவே பல்லவ சைனியம் சேகரிக்கப்படுகின்றதென்றும் செய்தி அனுப்பினார்கள். புலிகேசி மேற்படி செய்தியைப் பூரணமாய் நம்பி விட்டான் என்று முன்னமே தெரிந்து கொண்டோம். துங்கபத்திரை நதிக்கரையி

விருந்த சளுக்க சைனியத்தை நர்மதைக்கும் வேங்கிக்கும் பகிர்ந்து அனுப்பி விட்டதாக வும் அறிந்தோம். இப்போது குண்டோதரன் சொல்வதிலிருந்து, புலிகேசியே அஜந் தாவுக்குப் போயிருக்கிறான் என்று தெரி கிறது. சத்ருக்னனின் யுக்தி பலித்திருக்கிறது அல்லவா?''

இப்படி மாமல்லர் கூறி முடித்ததும், ''பல்லவேந்திரா! இலங்கை இளவரசர் இந்த வகையிலும் நமக்குப் பேருதவி செய் திருப்பதாகத் தெரிகிறதே! மானவன்மர் காஞ்சியில் வந்து இருந்ததனால்தானே புலி கேசியின் கண்ணில் சத்ருக்னன் இவ்வளவு நன்றாக மண்ணைத் தூவ முடிந்தது!'' என் றான் ஆதித்தவர்மன்.

சமணர்களால் மனம் குழம்பிப் போயிருந்த குமார பாண்டியனை மதுரைக் குத் திருப்பி அனுப்பி விட்டுப் பாண்டிய சைனியத்தைப் போருக்கு அழைத்துக் கொண்டு வருகிறாரே, அந்த உதவிதான் சாமான்யப்பட்டதா?'' என்றான் சத் ருக்னன்.

அப்போது மாமல்லர் கடுமையான குரலில், ''மானவன்மன் என்னதான் நமக்கு உதவி செய்திருக்கட்டும்; அவன் என்னை ஏமாற்றிய காரியத்தை என்னால் மறக்கவே முடியாது; மன்னிக்கவும் முடியாது!'' என் றார்.

''பல்லவேந்திரா! இது என்ன? தங் களை இலங்கை இளவரசர் எந்த விஷயத் தில் ஏமாற்றினார்?'' என்று சேனாதிபதி கேட்டார்.

''மானவன்மன் நம்மோடு வாதாபிக்கு வரக் கூடாது என்பதற்கு, ஒரு முக்கியமான காரணம் அவனுக்கு நான் சொன்னேன். போர்க்களத்தில் அவன் ஒருவேளை வீர சொர்க்கம் போகும்படி நேர்ந்து விட்டால், இலங்கை இராஜ வம்சம் சந்ததி அற்றுப் போய் விடும்; ஆகையால் அவன் வரக் கூடாது என்று சொல்லியிருந்தேன். இந்த விஷயத்திலேதான் மானவன்மன் என்னை ஏமாற்றி விட்டான்!'' என்றார் சக்கரவர்த்தி.

''இதில் ஏமாற்றுவதற்கு என்ன இருக் கிறது?'' என்றான் ஆதித்தவர்மன்.

''நாம் புறப்பட்டு வந்த ஒரு வாரத்துக் குள் இலங்கை இராஜ வம்சத்துக்குச் சந்ததி ஏற்பட்டு விட்டது! மானவன்மனுடைய மனைவி நாம் புறப்படும் போது பத்து மாதக் கர்ப்பிணியாம். நாம் புறப்பட்ட ஐந் தாம் நாள் அவளுக்கு ஆண் குழந்தை பிறந்ததாம்! இந்த விஷயத்தில் சத்ருக்னன் கூட எனக்கு உண்மையைத் தெரியப் படுத்தாமல் இருந்து விட்டான்!'' என்று மாமல்லர் கூறுவதற்குள்ளே சேனாதிபதி உள்பட எல்லோரும் 'கொல்' என்று சிரித் தார்கள்.

இதற்கிடையில் ''ஓஹோ! இப்போது தெரிந்தது!'' என்றான் குண்டோதரன்.

''உனக்கு என்ன தெரிந்தது இப்போது புதிதாக?'' என்று மாமல்லர் கேட்டார்.

''பிரபு! அதோ அந்த அரச மரத்தில் நான் ஏறி இருந்த போது தெற்கே ஒரு பெரிய புழுதிப்படலம் தெரிந்தது. ஏதோ படை திரண்டு வருவது போல் தோன்றியது. 'எந்த சைனியம் இப்படிச் சக்கரவர்த்திக்குப் பின் னால் வருகிறது?' என்று யோசித்தேன். தாங்கள் பேசிக் கொள்வதிலிருந்து இலங்கை இளவரசர் தான் பாண்டிய சைனி யத்துடன் அவசரமாக வருகிறார் என்று தெரிந்தது'' என்றான் குண்டோதரன்.

''ஓஹோ! அதற்குள் வந்து விட் டாளா?'' என்று மாமல்லர் கூறிய போது நிலா வெளிச்சத்தில் அவருடைய முக மலர்ச்சி நன்றாகத் தெரிந்தது. பிறகு அவர் பரஞ்சோதியைப் பார்த்து, ''சேனாதிபதி! ஆகக்கூடி, நீங்கள் எல்லாரும் என்னதான் சொல்கிறீர்கள்! மானவன்மனுடைய தவறை மன்னித்து அவனையும் நம்மோடு அழைத்துப் போக வேண்டும் என்று சொல் கிறீர்களா?'' என்று கேட்டார்.

''ஆம், பிரபு! அழைத்துப் போக



வேண்டியதுதான்!'' என்று சேனாதிபதி கூறிய குரலில் ஓரளவு தயக்கம் இருக்கத் தான் செய்தது.

''அப்படியானால் ஒன்று செய்யுங்கள். நீங்கள் மூவரும் கொஞ்சம் முன்னால் நதியைக் கடந்து சென்று இன்றிரவு சைனியம் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனியுங்கள். நானும் குண்டோதரனும் இங்கேயே இருந்து மானவன்மனை அழைத்து வருகிறோம். குண்டோதரனிடம் நான் கேட்க வேண்டிய சில விஷயங்களும் இருக்கின்றன'' என்று மாமல்லர் கூறவும், குறிப்பறியும் ஆற்றல் வாய்ந்த அறிவாளிகளாகிய மற்ற மூவரும் உடனே கிளம்பிச் சென்று, நதியில் அவர்களுக்காகக் காத்திருந்த படகில் ஏறிக் கொண்டார்கள்.

அவர்கள் சென்றதும் மாமல்லர் குண்டோதரனை ஏறிட்டுப் பார்த்தார்.

மெல்லிய குரலில் குண்டோதரன், ''பல்லவேந்திரா! வாதாபியில் ஆயனரின் குமாரியைப் பார்த்தேன். சௌக்கியமாயிருக்கிறார். நம்முடைய வரவை இரவும் பகலும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்'' என்றான்.

''அந்தப் பாதகியின் சௌக்கியத்துக்கு என்ன குறைவு? சௌக்கியத்தையும் சாந்தத்தையும் இ ழ ந் து தவிப்பவன் நான் அல்லவா?'' என்று நரசிம்மவர்மர் முணுமுணுத்தார்.

இருபத்திரண்டாம் அத்தியாயம்
பவளமல்லி மலர்ந்தது

வாதாபி மாளிகையில் சிவகாமி சௌக்கியமாகத்தான் இருந்தாள்.

அதாவது அவளுடைய தேகம் சௌக்கியமாக இருந்தது.

ஆனால், அவளுடைய உள்ளமோ ஒரு கணமேனும் சாந்தி காணாமல் அமைதி இன்றி அலைந்து கொண்டிருந்தது.

வருஷங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்து போய்க் கொண்டிருந்தன.

ஒவ்வொரு வருஷமும் வசந்தம், வேனில் முதலிய பருவ காலங்கள் வந்து போய்க் கொண்டிருந்தன.

வருஷங்களையும், பருவ காலங்களையும் கணக்கிடுவதற்குச் சிவகாமி ஒரு வழி கண்டுபிடித்திருந்தாள்.

அவள் வசித்த மாளிகையின் பின் முற்றத்தில் கிணற்றின் அருகில் ஒரு பவளமல்லி மரம் இருந்தது.

சிவகாமி வாதாபிக்கு வந்த வருஷத்திலே அந்தப் பவளமல்லிச் செடியை அவள் தன் கையாலேயே கிணற்றின் அருகில் நட்டாள்.

நாகநந்தி அடிகள் அஜந்தா மலைப் பிராந்தியத்தைப் பற்றி வர்ணனை செய்த போது, அந்தப் பிரதேசத்தில் ஆவணி, புரட்டாசி மாதங்களில் கணக்கில்லாத பாரிஜாத மரங்கள் புஷ்பித்துக் குலுங்கும் என்றும், அந்த நறுமலர்களின் இனிய மணம் நெடுந்தூரம் காற்றிலே பரவி அந்தப் பக்கம் வருவோர்க்கெல்லாம் இன்ப போதையை உண்டாக்கும் என்றும் சொன்னார். அதைக் கேட்ட சிவகாமி அந்தச் செடிகளில் ஒன்றைத் தனக்காகக் கொண்டு தர வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள்.

அவளுடைய வேண்டுகோளைக் கட்டளையாக மதித்த புத்த பிக்ஷு சீக்கிரத்தில் அஜந்தா மலைப் பிராந்தியத்திலிருந்து பவள மல்லிச் செடி ஒன்று தருவித்துக் கொடுத்தார்.

அந்தச் செடியை சிவகாமி நட்டுக் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாத்து வந்தாள். கண்ணீருடன் த ண் ணீ ரு ம் விட்டு வளர்த்து வந்தாள்.

அந்தப் பவளமல்லிச் செடியில் முதன் முதலில் இளந்தளிர் விட்ட போது சிவகாமியின் உள்ளம் துள்ளிக் குதித்தது. புதிய

"நேற்று டவுன் பஸ்ஸில் பிக்பாக்கெட் அடிச்சப்போ ஒரு போலீஸ்காரர் பார்த்துத் தொலைச்சுட்டார்!"

"ஐயையோ... அப்புறம்?"

"பாதிப் பணம்தான் என் கைக்குக் கிடைச்சது!"

– ஞா. ஞானமுத்து



கிளை ஒன்று கிளம்பிய போது, துயரத்தால் வெதும்பிய அவள் உள்ளம் குதூகலத்தினால் பொங்கியது. முதன்முதலில் அந்தச் செடியிலே மொட்டு அரும்பிய போதும் அது பூவாக மலர்ந்த போதும் சிவகாமி சிறிது நேரம் தன் துயரங்களையெல்லாம் மறந்து ஆனந்தக் கடலில் மிதந்தாள். கிளி மூக்கின் வடிவமான அதன் அழகிய இதழ்களையும், செம்பவள நிறம் கொண்ட காம்பையும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தாள்.

நேரம் ஆக ஆக, சூரியன் வான மார்க்கத்தில் ஏற ஏற, அந்த மெல்லிதழ் மலர் வர வர வாடிச் சுருங்கிக் கடைசியில் கருகி உதிர்ந்த போது, தற்காலிகமாகக் குளிர்ந்து தளிர்த்திருந்த அவளுடைய இருதயமும் வாடிக் கருகித் தீய்ந்தது.

செடி நன்றாக வேரூன்றிக் கிளைத்துத் தழைத்த பிறகு அதைக் கவலையுடன் பராமரிக்கும் வேலை சிவகாமிக்கு இல்லாமல் போயிற்று. அந்தச் செடியைக் கொண்டு பருவங்களையும் வருஷங்களையும் சிவகாமி கணக்கிட்டு வரத் தொடங்கினாள்.

மனிதர்களின் எலும்பு வரை குளிரச் செய்த பனிக் காலத்தில் அந்தப் பவள மல்லிகை மரத்தின் இலைகள் எல்லாம் காய்ந்து உலரத் தொடங்கும். இளவேனிற் காலத்தில் புதிய இளந்தளிர்கள் துளிர்க்கத் தொடங்கும், முதுவேனிற் காலத்தில் இலைகள் முற்றுவதோடு மொட்டுகளும் அரும்ப ஆரம்பிக்கும். உக்கிரமான மேல் காற்றோடு மழையும் கொட்டும். ஆனி, ஆடி மாதங்களில் அந்தப் பவளமல்லிச் செடி பேயாட்டம் ஆடிப் படாத பாடுபடும். அதைப் பார்க்கவும் சகிக்காமல் சிவகாமி வீட்டுக்குள்ளேயே பித்துப் பிடித்தவள் போல் உட்கார்ந்திருப்பாள். ஆவணி, புரட்டாசி மாதங்களில் அந்தப் பவளமல்லிகைச் செடி, பச்சைப் பசேல் என்ற இலைகளை அடியோடு மறைத்து விடுவதற்குப் போட்டி போடும் மலர்கள் குலுங்கப் பெற்று விளங்கும். அந்தக் காலங்களில் சிவகாமி முற்றத்தின் படிக்கட்டின் மீது உட்கார்ந்து அந்தச் செடியை வெகுநேரம் பார்த்துக் கொண்டிருப்பாள். நவராத்திரியின் போதும் விஜயதசமி அன்றைக்கும் தமிழகத்தின் ஆலயங்களில் விக்கிரகத்துக்குப் பவளமல்லி மலர்களைக் கொண்டு புஷ்பப் பாவாடை அலங்காரம் செய்வார்கள் என்பதை நினைவுகூர்வாள். அதோடு தான் வாதாபிக்கு வந்து ஒரு விஜயதசமி ஆயிற்று என்றும் கணக்கிடுவாள்.

இவ்வாறு கணக்கிட்டு வந்ததில், சிவகாமி வாதாபி நகரத்துக்கு வந்து, இப்போது ஒன்பது வருஷங்கள் ஆகி விட்டன!

(தொடரும்)

அருள்வாக்கு

பிரபஞ்சத்தில் ஒவ்வொன்றுக்கும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற நியதி இருக்கிறது. அப்படி அவை நியதிப்படி நடப்பதால்தான் உலக வாழ்க்கை நடக்க முடிகிறது. இல்லாவிட்டால் எல்லாம் நெறிகெட்டுப் போய்விடும். அதாவது லோகத்திலுள்ள சமஸ்த ஜீவராசிகளும் சௌக்கியமாக வாழ வேண்டும் என்கிற அன்பான எண்ணத்திலேயே அவை ஒன்றோடொன்று ஒத்துப் போவதற்காக இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒரு தர்மம், நியதி (law) ஈசுவரனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தன் குழந்தைகளை வெயில் படாமல் மழை படாமல் காப்பாற்ற வேண்டும், அவர்களுக்கு இளவெயிலின் வெப்பம் தேவையாக இருக்கிற போது அதைத் தந்து அரவணைக்க வேண்டும் என்கிற அன்பு ஈசுவரனுக்கு இருப்பதால் அதற்கு அநுசரணையாக இயற்கையை நடத்தி வைத்து மரங்களுக்கு ஒரு நியதியை - தர்மத்தைத் தந்திருக்கிறார்.

இந்த அன்பைப் பெற நமக்கு யோக்யதாம்சம் வேண்டாமா? வேண்டும். மரத்துக்கும் மட்டைக்கும் இருக்கிற நியதி நமக்கும் உண்டு. லோக க்ஷேமத்துக்காக அதை நாம் நடத்திக் காட்டுகிற போதுதான் ஈசுவரனின் அன்பைப் பெற பாத்தியதை கேட்கலாம். மனிதனுக்காக உள்ள இந்த நியதிக்கே தர்மம் என்று பெயர். இந்த நியதியை மீறவும் மனிதனுக்கு மூளையைத் தந்து ஸ்வாமி விளையாட்டுப் பார்க்கிறார். அந்த மூளையை வைத்துக் கொண்டு இவனும் எதை எதையோ சௌக்கியமாக நினைத்துக் கொண்டு, அவற்றுக்காக அலைகிறான்; இதில் தனக்கான தர்மத்தையும் மீறுகிறான். ஆனால் இறுதியில் சௌக்யத்தைத் தருவது தர்மமே.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.



நாவல் போட்டி நாயகர்கள்!



* மேலாண்மை பொன்னுச்சாமி

சமூக நாவலுக்கான பரிசு

ரூ. 10,000/-

மேலாண்மை பொன்னுச்சாமி :

சிந்தகபூமி காமராசர் மாவட்டத்தின் கடைக்கோடி குக்கிராமம் மேலாண்மறை நாடு இவருடைய சொந்த ஊர். சிறு வயதில் பெற்றோரை இழந்து வறுமையுடன் மல்லுக்கட்டி வளர்ந்தவர். இன்று சிறிய பலசரக்குக் கடையையும், சிறிய அளவில் விவசாயத்தையும் சம்பாத்தியத்துக்காக நடத்தி வருகிறார். 'எழுத்து ஆத்ம திருப்திக்கு மட்டுமே' என்று நம்புபவர்.

கடலை மிட்டாய் வியாபாரம் செய்த போது (1972 இல்) முதல் சிறுகதை எழுதி செம்மலர் மாத இதழில் பிரசுரிக்கப் பெற்றார் பொன்னுச்சாமி. அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் அவர் இருமுறை பரிசு பெற்றது கல்கி வாசகர்களுக்கு நினைவிருக்கும். அன்று கல்கியில் ''அரும்பு'' விட்டவர், இன்று நாவல் போட்டியிலும் ''முற்றுகை''யிட்டு முதல் நாவலையே பரிசுக்குரிய நாவலாக வெற்றிகரமாகப் படைத்து விட்டார்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மாநிலத் துணைச் செயலாளராகவும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினராகவும் பொதுப் பணியிலும் ஈடுபட்டுள்ளார் பொன்னுச்சாமி. போராட்டங்களில் குதித்துச் சிறை சென்ற அனுபவமும் உண்டு.

தற்போது காமராசர் மாவட்ட அறிவொளி இயக்கத்தில் ஆழ்ந்த ஈடுபாடு காட்டி வருகிறார்.



* ஜோதிர்லதா கிரிஜா

பொன்னுச்சாமியின் படைப்புக்கள் பல்கலைக் கழகப் பாட நூலாகவும் எம்.ஃபில் ஆராய்ச்சிக்குரியவையாகவும் கூட அங்கீகாரம் பெற்றுள்ளன.

சரித்திர நாவலுக்கான பரிசு ரூ. 20,000/-

சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட பரிசுகள் பெறுவோர் :

விஷ்வக்ஸேனன்,

ஜோதிர்லதா கிரிஜா.

தஞ்சை மாவட்டத்து நன்னிலத்துக்காரர் விஷ்வக்ஸேனன். சென்னையில் கருவூலக் கணக்குத் துறையில் பணியாற்றியபடியே அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கதைகள் எழுதினார். இந்த



* பெனிட்டோ குமார் - விழா மேடையில்



* விஷ்வக்ஸேனன் - பொன்னாடை பெறுகிறார்.

பி.எஸ்ஸி (கணிதம்) பட்டதாரி. நாவலில் முதல் முயற்சி 'பாண்டியன் மகள்'. இதனை எழுதுவதற்கு ஏராளமான நூல்களைப் படித்து ஆராய்ச்சி செய்துள்ளார் இரா. ஷண்முகநாதன் - இதுவே விஷ்வக்ஸேனவின் இயற்பெயர்.

கல்கியின் கதைகளும் சாண்டில்யனின் நாவல்களும் தம்மைப் பெரிதும் பாதித்தன என்று கூறுகிறார் விஷ்வக்ஸேனன். அந்த பாதிப்பைப் 'பாண்டியன் மகள்' படிக்கும் போது உணர்வோம்.

ஜோதிர்லதா கிரிஜா ஏற்கெனவே எழுத்துலகில் தடம்பதித்து விட்ட படைப்பாளர். பதின்மூன்றாவது வயதிலேயே குழந்தை எழுத்தாளராக அறிமுகமாகி 400 சிறுகதைகள், மூன்று நெடிய நாடகங்கள் ஐந்து குறுநாவல்கள், ஏழு தொடர்கதைகள் என்று படைப்புப் பட்டியலை வளர்த்துக் கொண்டிருக்கிறார்.

விடுதலைப் போராட்ட நாட்களை நிலைக்களனாகக் கொண்டு 'மணிக் கொடி' நாவலை எழுதியிருக்கிறார். இந்த நாவல் ஜோதிர்லதா கிரிஜாவுடைய ஆற்றலின் ஒரு புதிய கோணத்தை வெளிப்படுத்தும்.

மர்ம நாவலுக்கான பரிசு ரூ. 5000/-

பெறுபவர் பெனிட்டோ குமார்.

மர்ம நாவலில் இலக்கியத் தரம் கொண்டு வர வேண்டும் என்று முனைப்புடன் செயல்பட்டிருக்கிறார் பெனிட்டோ குமார். நெல்லை மாவட்டம் அச்சம்பாடு கிராமத்தில் எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். தற்போது பம்பாயில் ஓர் எஃகு ஆலையில் பணிபுரிகிறார். நாவலில் முதல் முயற்சி 'நரகமான நகரம்'. சிறுகதைகளிலிருந்து நாவலுக்கு வெற்றிகரமாகப் படியேறியிருக்கிறார் இந்த எம்.காம் பட்டதாரி. நவீனமான நகைச்சுவை, நாவலுக்கு மெருகேற்றுகிறது.

விஞ்ஞான நாவலுக்கான பரிசு

ரூ. 5000/-

பெறுபவர் நளினி சாஸ்திரி :

விகடன் மாணவர் பக்கத்தில் அறிமுகமாகி அதன் பொன் விழாவில் சிறப்புப் பரிசு பெற்று, பின்னர் கல்கி சிறுகதைப் போட்டியிலும் பரிசு பெற்றார் நளினி சாஸ்திரி என்கிற சேகர். நெய்வேலியில் இன்ஜினீயராகப் பணியாற்றும் இவர் கல்கியில் சில காலம் விஞ்ஞானக் கட்டுரைகள், சினிமா விமர்சனங்கள் எழுதினார். 'திசைகள்' இதழின் ஆசிரியர் குழுவில் பணியாற்றிய அனுபவம் உண்டு. சுஜாதாவை எழுத்துலக குருவாக ஏற்றவர்.

'ஆத்மாவுக்கு ஆபத்து' என்று இவரது பரிசு பெறும் நாவலுக்குத் தலைப்புச் சூட்டிய இவர் தந்தை, 'நாவலைக் கல்கியில் வரும்போது படித்துக் கொள்கிறேன்' என்று நம்பிக்கையோடு கூறிவிட்டார் - அன்று.

இன்று அப்பாவின் நினைவுக்கு அஞ்சலியாகத் தமது நாவலைச் சமர்ப்பணம் செய்கிறார் நளினி சாஸ்திரி.



* குடும்பத்துடன் நளினி சாஸ்திரி

பெரிய தம்பி



காட்சி - 6

(மேடையில் ஒரு மூலையில் மட்டும் ஒளி விழ, அங்கு சின்னப் பண்ணையும் பெரிய தம்பியும்)

சி. பண்ணை : மாப்பிள்ளை, என்ன சேதி! சுருக்கா சொல்லிடுங்க.

பெரிய : ஒரு பயங்கரமான சேதி எங்க குடும்பத்தச் சேந்தவங்க யாரோ எப்பவோ உங்க குடும்பத்தச் சேந்தவங்களை வெட்டிக் கொன்னுட்டாங்களாம்!... இத மறச்சிட்டாங்க.. இப்பச் சொல்லுங்க ஒரு கொலை காரன் குடும்பத்ல நீங்க மாப்பிள்ளை எடுக்கலாமா? கேவலம் இல்ல...?

சி. பண்ணை : இந்த விஷயம் பல வருஷமா எனக்கும் தெரியும் மருமகப் பிள்ளை.

பெரிய : தெரியுமா? காலைலதானே யோசிச்சேன்?

சி. பண்ணை : கொலையுண்டது என் அப்பன். கொலை பண்ணது ஒன் பெரியப் பன்தான்!

பெரிய : என் பெரியப்பா ஒங்கப் பாவைக் கொன்னாரா? கேள்விப்பட்ருக் கேன்.. என் பெரியப்பன் ஊர்ல பெரிய ரௌடியாம்..

சி. பண்ணை : இல்லப்பா! கடைசி வரைக்கும் என் அப்பன் என் ஆத்தா கழுத்துல ஒரு கயித்த கட்டல! எங்களைத் தோப்பு வீட்லயே குடி வைச்சிருந்தான். அவனை நானே ஒரு நா கொல்லணும்னு இருந்தேன். நல்லவேளை அத ஒன் பெரியப்பன் நிறை வேத்திட்டான்! என்னைக் கொலைகாரப் பட்டத்துல இருந்து தப்பிக்க வச்சிட்டு அவன் ஜெயிலுக்குப் போய், தூக்குல தொங்கிட்டான் தம்பி! என்னால முடிஞ்ச நன்றிக் கடன் திருகாணியையும் என் சொத்துக் களையும் ஒனக்குத் தர்றதுதான்!...

பெரிய : எனக்கு நெஞ்சே வெடிக்கடும் போல இருக்கே.

சி. பண்ணை : அதுக்கு முன்னாடி மேளத்தக் கொட்டிட மாட்டேன்!

காட்சி - 7

(ஊர் எல்லை)

மாடசாமி : நீங்களும் கலியாணத்த நிறுத்த என்னென்னமோ செஞ்சிப் பாத் திட்டீக... ஒண்ணும் நடக்கலை.

பெரிய : திருகாணி மேல களங்கம் கற்பிச்சுட்டா?...

மாடசாமி : திருகாணியையும் எவனோ ஒருத்தனையும் சோளக் கொல்லையில பார்த்ததாப் புரளி கட்டிடலாம்!

பெரிய : புரியாம பேசாத!.. திருகாணிய ஜவங்களே சோளக் கொல்லைக்கு அனுப் பற வழக்கமுண்டு!

மாடசாமி : எதுக்கு?

பெரிய : அவ அங்க போய் நின்னா அவளைச் சோளக் கொல்லை திருஷ்டி பொம்மைனு நினைச்சுப் ப ய ந் து, பறவைங்க வர்றதே இல்லியாம்..

மாடசாமி : வேற என்ன செய்யலாம்? ம்...

(தெருப்புழுதி உள்ளே வருகிறான்)

பெரிய : எலேய் தெருப்புழுதி... என்னய்யா இவன் பகல்லயே தூங்கிட்டு தூக்கத்துல நடக்கறான்?... பேசாம கூர்க்கா உத்தியோகம் தரலாம்!...

மாடசாமி : தூக்கத்துல பேசுவான்!

தெருப்புழுதி : மாடு முட்ட வருது!... மாடு முட்ட வருது!

பெரிய : ஐயய்யோ! கனவு காண்றான்! டேய் முழிச்சிக்க! முழிச்சிக்கடா!

தெருப்புழுதி : எப்ப வந்தீக... என் வூட்டுக்கு?

பெரிய : நீ தூக்கத்துல எழுந்து தெருத் தெருவா சுத்திட்டு... ஒரு நாள் இல்லன்னா ஒரு நாள் தண்ணியில்லா கிணத்துலதான் விழப் போற.

தெருப்புழுதி : ஐயய்யோ! மறிய மாச்சே!... கோயிலுக்குப் போவணும்!

பெரிய : எதுக்கு?

தெருப்புழுதி : மழையே இல்ல.. பஞ்சாயத்துப் பேசினாங்க... ஊர்ல பதினெட்டு வயதுக்குக் கீள இருக்கற கன்னிப் பொண்ணு கைல நீவட்டியைக் குடுத்து... ராத்ரி ஊரச் சுத்தி வரச் சொல்லப் போறாக! ஊர்ல இருக்கற பொண்ணுங்க பேர காகி

எஸ்.வி.சேகர்

வசனம்: வெங்கட்

தந்துல எளுதிக் குலுக்கி எ டு க் க ப் பேறாங்க... சீட்டுல பொட்டச்சிங்க பேர எளுதற வேலைய எனக்குத் தந்திருக் கிறாங்க!...

பெரிய : நிஜமாவா! தெருப்புழுதி!... காத்து நம்ம பக்கம் வீசுதா? புழுதிக் காத்து!... எனக்கு ஒரு உதவி செய்வியா! எல்லா சீட்லயும் திருகாணி பேர எழுதி ரணும்!...

தெருப்புழுதி : எதுக்கு அப்படி எளுதச் சொல்றீக?

பெரிய : இப்ப எல்லா சீட்லயும் திருகாணி பேர எளுதுக! அதுல இருந்து ஒரு சீட்டை எடுக்கறாங்க... அதுல யார் பேரு வரும்?

தெருப்புழுதி : அந்த சீட்டப் பிரிக்கப் பாத்தம்னாதானே யாரு க ன க ம ா, லட்சுமியா, மீனம்மாவான்னு தெரியும்?...

பெரிய : எவ்வளவு எழுதப் படிக்கத் தெரிஞ்சும் என்ன பிரயோசனம்! அப்பாவியா இருக்கானே. கிராமத்துலே இது மாதிரி யாராவது அப்பாவிங்க இருந்துதான் ஆவாங்க போல இருக்கு. இந்தா கமர்கட்டு, கடிகார மிட்டாயி எல்லாம் வாங்கிக்க... எல்லா சீட்லயும் என்ன எளுதுவ?

* ''மாடு முட்ட வருது...''



தெருப்புழுதி : திருகாணி திருகாணி திருகாணின்னு எளுதுவேன்!

மாடசாமி : தம்பீ... விஷயம் தெரிய வந்துச்சுன்னா பஞ்சாயத்திலே நிக்க வச்சி தோலை உரிச்சிடுவாங்க!

பெரிய : உடம்புல இவ்வளவு பயம் இருக்கு இல்ல? அப்புறம் ஏன்யா இந்த மாதிரி ஐடியா குடுக்கற?

மாடசாமி : கடைசில என் தலைல போடாதீங்க!

பெரிய : திருகாணி பேரைத் தெருப் புழுதி எழுதுவான் இப்படிப்பட்ட ஆதி வாசிப் பொண்ணு எனக்கு வேண்டாம்னு கொடி புடிச்சுடலாம்... திருகாணி நீ காலி.

*காட்சி – 8

பெரிய : இத்தனை நேரம் சீட்டுக் குலுக்கி எடுத்திருப்பாங்க!

மாடசாமி (ஓடி வந்தபடி) : பெரிய தம்பீ! பெரியதம்பீ!

பெரிய : ஏன்யா ஓடி வர? திருகாணி தீவட்டியோட வர்றதப் பார்த்துப் பயந்துட் டியா? காலைல பூசாரிட்ட கூட் டி ட் டு ப் போய் மந்திரிக்கறேன்!

மாடசாமி : அதில்ல தம்பி! ஒரு தப்பு நடந்துடிச்சி!

பெரிய : தப்பா?

மாடசாமி : அட ஆமாம் தம்பீ! அந்த கிறுக்கன் தெருப்புழுதி தூக்கக் கலக்கத்துல எல்லா சீட்லயும் திருகாணி பேர எழுதறதுக் குப் பதிலா வேற பேர எழுதித் தொலைச் சிட்டான்.

பெரிய : காரியத்தையே கெடுத்துட் டானே! சரி விடு!

மாடசாமி : என்னத்த விடறது தம்பீ... ஊரே திரண்டு ஒன்னைப் பாக்க வந்துட்டு இருக்குது!

பெரிய : என்ன விஷயம்?

மாடசாமி : தெருப்புழுதி பூரா சீட்லயும் ஒன் பேரை இல்ல எழுதித் தொலைச் சிருக்கான்!

பெரிய : அடப்பாவி!

மாடசாமி : இன்னும் கொஞ்ச நேரத் துல... கைல தீப்பந்தத்தோட...

(சிறு கூட்டம் வருகிறது)

பண்ணை : பெரியதம்பீ! ஆத்தா ஒரு அதிசயம் பண்ணிப்புட்டா!

சி. பண்ணை : ஆமாங்கேன்! சீட்டுல பொட்டச்சிங்க பேர எழுதிப் போட்டுக் குலுக்கினோம்!

எல்லைச்சாமி : அதுல ஒன் பேரு இருந் திச்சி!

கருப்பாயி : மத்த சீட்டுகளையும் பிரிச் சோம்

எல்லைச்சாமி : அதுலயும் ஒன் பேருதான் இருந்திச்சி!... பொம்பளைங்க

பேர மாயமா மறச்சி... ஆத்தா ஒன் பேர எல்லா சீட்லயும் திரிசூலத்தால எழுதிட்டா!... இதைப் பாக்க நீ இல்லையே குட்டித்தாயி...

பெரிய : யோவ் சும்மா இருய்யா. அப்பா, என்னப்பா இதெல்லாம்?

பண்ணை : எல்லாம் அவன் செயல்...!

பெரிய : இல்ல.. அவன் செயல்! நெருப்புழுதி உன்னை...!

பண்ணை : ஊர்ல எத்தனையோ பயலுவ இருக்கான்... இருந்தும் ஆத்தா ஏன்டா ஒன் பேர திரிசூலத்தால எழுதினா?... நீ தீவட்டியோட ஊரச் சுத்த றதும் அதனால வானம் பொத்துக்கிட்டு

பழ வியாபாரியைப் பாடகராக்கிய ஏ.வி.ரமணன்!



* ரமணன் (படம் : யோகா)

●● ''பனங்காத் தலையா... பரோட்டாத் தலையான்னு செந்திலைத் திட்டி... திட்டிச் சலிச்சுப் போச்சு! நல்லவேளையா இப்ப எனக்கு வித்தியாசமான வேஷமெல்லாம் தர்றாங்க...'' எனச் சந்தோஷப்படுபவர்... வேறு யார்...? கவுண்டமணிதான்...!

''டைரக்டர் விஜயசிங்கத்தோட 'கலி ஜோசியம்' படத்துல நான் பைலட்டா நடிக்கிறேன். பைலட்னா, சாதாரண பைலட் இல்ல... பைத்தியக்காரப் பைலட்...! என்னை நம்பி ஏகப்பட்ட உயிர்கள் அந்தரத்துல ஊசலாடுற மாதிரி சுவாரஸ்யமான, திகிலூட்டும், நகைச் சுவைக் கதை... இதே மாதிரி 'எங்க ராஜா' படத்துலயும் எனக்கு நல்ல கேரக்டர்'' என்று மெய்யாக மகிழ்ந்தார் கவுண்டமணி.

●● ''தொடர்ந்து வெற்றிப் படமாக எடுத்து வருவதற்கு நீங்கள் சில சென்டிமெண்ட்களில நம்பிக்கை வைச்சுக் கடைபிடிக்கிறீர்களாமே...?'' - என்ற நம் கேள்விக்கு இயக்குனர் பி. வாசு கூறிய பதில் : ''ஆமாம்... அது உண்மைதான்... பெரும்பாலான என் படங்களில் அம்மா சென்டிமெண்ட் இருக்கும்... அது தொடர்பான ஒரு பாட்டு இருக்கும்... அதே போல், உதய பிரகாஷை என் படத்தில் நடிக்க வைத்து, முதல் காட்சியிலேயே அவரைக் காட்டுவது என் சென்டிமெண்ட்டுகளில் ஒன்று. அதிலும் அவரின் முதல் ஷாட்டை முடிந்த வரை ஒரே டேக்கில் ஓ.கே. செய் வேன். எல்லா சென்டிமெண்ட்டையும் விட, ஒரு கமர்ஷியல் படத்தை எப்படி எடுக்க வேண்டும் என்பதை நான் கற்றுக் கொண்டதே என் வெற்றிக்கு முழுக் காரணம்!''

* கவுண்டமணி



●● எஸ். பி. பாலசுப்ரமணியத்திற்குச் சமீப காலமாக ஒரு பிரச்னை... ''என் படத்துக்குப் பாடுங்கள்... எனக்கு இசையமைத்துக் கொடுங்கள்... என் படத்தில் நடியுங்கள்...'' எனத் தினமும் ஏகப்பட்ட பேர் கால்ஷீட் கேட்கிறார்கள். யாருக்கு எதைச் செய்வதென்றே எனக்குப் புரியவில்லை. இப்பொழுதே கால்ஷீட் கேட்ட பலரைத் தவிர்த்து விட்டேன். இதே நிலை தொடர்ந்தால் 'பந்தா பண்ணுகிறான்' என்ற கெட்ட பெயர் வந்து விடுமே எனப் பயமாக இருக்கிறது...!'' - என்கிறார் எஸ். பி. பி.

கொட்டணும்னு அவ ஆசைப்படறா! குடுங்க தீவட்டியை!...

ஓரமாக் கூட்டிட்டுப் போய், செய்ய வேண்டியதைச் செஞ்சு, பையனை அனுப் புங்க!...

பெ. தம்பி : என்னை விட்டுடுங்க...

(ஓடுகிறான்)

(தொடரும்)

புகைப்படங்கள் : யோகா



* வினோதினி

●● ''அன்னை வயல்'' படத்தின் இயக்குனர் பொன்வண்ணன் துணிச்சல் மிக்கவர். அப்படத்தில் புதுமையான பாத்திரத்தை எனக்கு அளித்துள்ளார். அதில் இவர் கையாண்டிருக்கும் கதைக் கருவைப் படமாக்க, பெரிய இயக்குனர்களே யோசிப்பார்கள். அறிமுகத்திலேயே இப்படி அசாத்தியத் துணிச்சலுடன் இவர் செயல்படக் காரணம்... இவரின் குருநாதர் பாரதிராஜா என்பதுதான்...'' - என்கிறார் ''அன்னை வயல்'' நாயகி வினோதினி.

புகைப்படத்தைப் பார்த்தால் பளிச் சென்று வித்தியாசமாய்த்தான் இருக்கிறது.



* உதயபிரகாஷ்

திரைப்படம் எப்படியோ...? பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

●● ''கலைப் படங்களில் நடிக்கும் போது இருக்கும் திருப்தி, கமர்ஷியல் படங்களில் நடிக்கும் போது இருப்பதில்லை. அதற்காக... என்னை முற்றிலும் அவார்டு நடிகை என முடிவு செய்து விடக் கூடாதென்று சில கமர்ஷியல் படங்களிலும் நடித்து வருகிறேன். இருப்பினும்... எனக்கு அதிகப் படங்களில் நடிக்கும் வாய்ப்பு வருவதில்லையே. அது ஏன்...?'' எனக் கேட்பவர் ''அவார்டு'' அர்ச்சனா.

●● சமீபத்தில் மியூசிக் அகாடமியில் தாம் நடத்திய மெல்லிசை நிகழ்ச்சியில், புதுப் பாடகர் ஒருவரை அறிமுகப் படுத்தினார் ஏ. வி. ரமணன். இதில் சிறப்பு என்னவென்றால் அந்தப் பாடகர் தள்ளு வண்டியில் பழம் விற்கும் ஒரு பழ வியாபாரி!



* அர்ச்சனா

''என் வீட்டுக்கு எதிரே தள்ளுவண்டியில் பழம் விற்பவர் டில்லி. ஒருநாள் இவர் பாடிக் கொண்டிருந்ததைத் தற்செயலாகக் கேட்ட நான் வியப்பில் ஆழ்ந்து விட்டேன். குரலில் அந்த அளவிற்கு ஜீவன் இருந்தது. இவரது திறமையை அனைவரும் உணரவே, இவரை இங்கே அறிமுகப்படுத்துகிறேன். வளமான இவரின் எதிர்காலத்திற்காக வாழ்த்துங்கள்...!'' என்றார் இருபது ஆண்டு காலமாகத் திரையுலகில் பின்னணி பாடி, இசையமைத்து, மெல்லிசை நிகழ்ச்சிகளை நடத்திவரும் ஏ. வி. ரமணன்.

– கலைத்தூதன்

25 பேரைக் கடித்த குதிரை!

சுஜாதாவின் சிறுகதையொன்று 'குதிரை கடித்தது என்று எங்காவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா?' என்று துவங்கும். குதிரைக் கடிப்ப தென்பது வெகு அபூர்வம். ஆனால் சமீபத்தில் பெங்களூர் பெரியார் நகர், டேனரி ரோடு பகுதிகளில் வெறிபிடித்த குதிரையொன்று தெருவில் போவோர் வருவோரையெல்லாம் துரத்தித் துரத்திக் கடிக்க ஆரம்பித்தது. சைக்கிளில் சென்றவர்கள், துப்புரவுத் தொழிலாளி, பள்ளிக்குப் போய்க் கொண்டிருந்த சிறுவன் என்று பல பேரும் குதிரையின் கடிக்கு ஆளானார்கள். கார்ப்பரேஷனுக்கும் போலீசுக்கும் புகார்கள் பறந்தன. 'குதிரை கடித்தால் நாங்களென்ன செய்ய முடியும்?' - என்று அலட்சியமாக இருந்து விட்டனர் அதிகாரிகள். விளைவு - இரண்டாவது நாளும் குதிரைக் கடிக்கு ஆளானவர்களின் தொகை கூடிக் கொண்டே போனது. ஒரு வயதான அம்மாள் உயிருக்கு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். குதிரையின் கொட்டத்தை அடக்கச் சில இளைஞர்கள் தீர்மானித்தனர். நான்கைந்து பேர் சேர்ந்து ஒரு ஆட்டோவில் ஏறிக் கொண்டனர். கையில் கத்திகளுடன் வெறிபிடித்த குதிரையைக் குறிவைத்துத் துரத்திப் போய் ஆட்டோவில் இருந்தபடியே குதிரையின் பின்னங்கால்களை வெட்டினர். கால்கள் துண்டிக்கப்பட்டுக் கீழே விழுந்தது குதிரை. அவ்வளவுதான் ஆளாளுக்குப் போடு போடென்று போட்டு அந்த வெறிபிடித்த குதிரையைக் கண்டந் துண்டமாய் வெட்டிப் போட்டனர்.

எவ்வளவு குரூரம்! இப்படியொரு மிருகத்தனமான செயலைச் செய்தவர்களையும், தங்கள் அலட்சியத்தால் அதற்கு இடமளித்த அரசுத் துறைகளையும் எப்படி மன்னிக்க முடியும்!?

● லால்பாக்





● பங்காரப்பா

பெங்களூர் லால்பாக் பூங்காவில் மேலும் ஒரு சிறப்பம்சம் வரப் போகிறது. இனிமையான இசை புறப்பட்டவுடன் அதற்கேற்ப நீங்கள் நடனமாடப் போகிறீர்களோ இல்லையோ, நீரூற்று ஆடப் போகிறது. இசைக்கேற்ப நடனமாடும் Dancing Fountain அமைக்கப்

போகிறார்கள். கூடவே பாறைகளின் மீது அமைக் கப்படும் பாறைத் தோட்டம். பம்பாய் மலபார்ஹில்ஸ் பாணியில் இதுவும் ஒரு hanging garden (ஆனால் சின்னதாக) ஆக இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

சில நாட்களாக அடங்கியிருந்த காவேரிப் பிரச்னை மறுபடியும் தலை தூக்குகிறது. இதற்கென அமைக்கப்பட்ட போராட்டக் குழு மண்டியாவிலும் மைசூரி லும் மிகப் பிரம்மாண்டமான பேரணிகளை யும் பொதுக் கூட்டங்களையும் நடத்தி முடித்திருக்கிறது. பொதுக் கூட்டங்களில் இன்றைய தலைவர்கள் உட்பட முன்னாள் முதல்வர்கள் நிஜலிங்கப்பா, குண்டுராவ் ஆகியோரும் கலந்து கொண்டு உரத்த குரலில் முழங்கியிருக்கிறார்கள். சர்வ கட்சித் தலைவர்களும் ஆவேசமாகப் பேசி யிருக்கிறார்கள். பேச்சின் சாராம்சம் :

1. தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் கிடை யாது


2. டிரிப்யூனலை ஒப்புக் கொள்ள மாட் டோம்; மதிக்க மாட்டோம்.

நரசிம்மராவ் எதுவும் செய்யப் போகி றாரா? அல்லது நாம் ஏன் தலையிட வேண்டும் என்று இருக்கப் போகிறாரா... பார்க்க வேண்டும்.

பங்காரப்பாவுக்கு எ தி ர ா ன கோஷ்டிகள் ஆளுக்கொரு பக்கமாக முதலமைச்சர் நாற்காலிக்கு முயற்சி செய்து கொண்டிருக்க டெல்லி மேலிடம் தனது 'பாரம்பர்ய வ ழ க் க ப் ப டி' அங்கிருக்கும் ஒருவரை முதல்வராகத் திணிக்கக்கூடும் என்ற பேச்சு இருந்தது. துணை ஜனாதிபதி பதவிக்கு ஆசை காட்டப்பட்ட சங்கரானந்தையோ ஜாஃபர் ஷெரிபையோ நியமிக்கலாம் என்று ஒரு பேச்சு வந்ததும் அதைவிட வேகமாக வந்தது ஜாஃபர் ஷெரீப் மீதான ஊழல் புகார். ஆக இப்போது பட்டியலில் சங்க ரானந்த் மட்டுமே. சங்கரானந்த் 'முத லமைச்சராக ராஜீவ் ஸ்டைலில் திணிக்கப் பட்டால், இங்குள்ள கோஷ்டிகளெல்லாம் கைகட்டி வாய்பொத்தி ஏற்றுக் கொள்ளுமா என்பது தெரியவில்லை. பங்காரப்பாவை மத்திய அரசுக்கு அழைத்துக் கொள்வார்கள் என்றும் பேசப்படுகிறது!

– பெர்னாண்டஸ்







காசிக்கு இரண்டு டிக்கெட்

நமக்கு என்ன செலவா இல்லை? எதுக்கு இந்த அநாவசியமான செலவுன்னுதான் பார்க்கறேன்'' என்றாள் என் நெஞ்சில் கோலமிட்டபடி.

பெட்ரூம் நைட்லாம்ப் வெளிச்சத்தில் பானுவைப் பார்த்தேன்.

நீண்ட, கூர்மையான நாசி, மலர்ந்த கண்கள். மிக அழகாகத் தெரிந்தாள் அந்த அரை இருட்டில்.

கணவன் தன்னுடைய கொள்கைகளையும், கடமைகளையும் மறந்து தோற்பதே இரவில்தானே.

''செலவுக்காக மட்டுமில்லீங்க. வயசான காலத்துல உள்ளூர் கோவில், குளத்துக்குப் போனால் பத்தாதா? ஒன்னு கிடக்க ஒன்னு ஆயிடுச்கன்னா?'' என்றாள் குழையும் குரலில்.

விஷயம் இதுதான்.

அடுத்த மாதம் காசிக்கு டூர் ஒன்றைத் தெரிந்த குடும்ப நண்பர் ஒருவர் ஏற்பாடு செய்திருக்கிறார். என் பெற்றோர் போக ஆசைப்படுகின்றனர்.

இன்று மாலை அலுவலகம் விட்டு வந்ததும் தங்கள் ஆசையை வெளியிட்டனர். நானும் 'பார்க்கலாம்' என்பதுபோல் அப்போது தலையாட்டினேன்.

இப்போது பானுவின் எதிர் வாதத்துக்குத் தலையாட்டிக் கொண்டிருக்கிறேன்.

என் பிழைப்பே இப்படியாகிவிட்டதே என்று வருத்தமாய்க் கூட இருந்தது.

வீட்டில் இவர்களிடம் தலையாட்டி விட்டு, அலுவலகத்தில் மேலதிகாரிகளிடம் தலையாட்டி விட்டு.... கழுத்துக்கு நல்ல பயிற்சிதான்!

''என்னங்க யோசனை?'' என்றாள் என் கைவிரல்களை எடுத்துச் சொடக்கு போட்ட படி.

''இரண்டாயிரம் ரூபாய் இருந்தால் நாம் என்னென்ன செய்யலாம்? பாத்ரூம்ல கெய்சர் பொருத்தலாம். நீங்க ரொம்ப நாளா ஆசைப் படற சஃபாரி சூட் தைச்சுக்கலாம். இந்த வருஷ தீபாவளிக்கு எனக்குப் பட்டுப் புடை வைதான். இப்பவே சொல்லிட்டேன்....'' என்றாள்.

நான் மௌனமாக விட்டத்தை வெறித் தேன். குளிருக்கு அவள் அருகாமை பிடித் திருந்தது. மல்லிகைப் பூவின் மணம் கிறங்க வைத்தது.

''ஏங்க, எங்க அப்பா, அம்மாவுக்கு நான் தானே மூத்த பொண்ணு.''

''என்ன திடீர் சந்தேகம்?''

''இந்தக் கிண்டல்தானே வேணாங்கறது. ஆண்பிள்ளையே இல்லாததுனால என்னை அவங்க பையன் மாதிரியே வளர்த்து, படிக்க வைச்சாங்க தெரியுமா?

''அது சரி, உன் தங்கையையாவது பொண்ணா வளர்த்திருக்காங்களா. இல்லை...'' என்று நான் இழுக்கவும் கோபமே வந்துவிட்டது பானுவுக்கு.

எனக்கு முதுகைக் காண்பித்தபடி திரும் பிப் படுத்துக் கொண்டாள்.

எனக்கும் தூக்கம் கண்களைச் சுழற்றவே தூங்கிப் போனேன்.

காலையில் எழுந்ததுமே மீண்டும் பிரச்னை நினைவில் எழுந்தது.

பெற்றோருக்கு என்ன பதில் சொல் வது....?

எப்படி வேண்டாம் என மறுப்பது....?

குழுப்பத்துடன் பாத்ரூம் சென்றேன்.

பானு என்னைப் பார்வையாலேயே தொடர்ந்தாள்.

குளித்துவிட்டு பெட்ரூமினுள் உடை மாற்றிக் கொள்ள நுழைந்தேன். பானுவும் ஏதோ வேலையாய் அங்கிருந்தாள்.

''பானு....''

''ப்ச், எதுக்கு இப்படி குழப்பிக்கறீங்க. அதான் நேற்றே முடிவு செஞ்சாச்சே. ஒரு விஷயத்தை மறுபடியும், மறுபடியும் போட்டு உழப்பினா தலைவலிதான் மிஞ்சும்'' என்று தனக்காகப் பேசிவிட்டு நகர்ந்தாள்.

காலையில் எழுந்ததும் ஓரளவு மனம் சீர்பட சிந்தித்ததில் அப்பா, அம்மாவிடம் எங்கள் முடிவைச் சொல்லத் தயக்கமாய் இருந்தது.

அதைப் புரிந்து கொண்ட பானுவும், என்னிடம் மீண்டும் இதைப் பற்றிப் பேசுவதைத் தவிர்ப்பதும் புரிந்தது.

டிபன் சாப்பிடும் போது அப்பா எதிரில் அமர்ந்தார்.

''என்னடா, இன்னிக்குச் சாயந்திரம் டிக் கெடுக்குச் சொல்லிடலாமா?'' என்று ஆரம் பித்தார்.

அம்மா என் முகத்தை ஆவலுடன் கவனித்தாள். நான் மறுக்க மாட்டேன் என்ற நம்பிக்கை இருவர் கண்களிலும் தெரிந்தது.

நான் சங்கடத்துடன் நெளிந்தேன்.

''அப்பா, மறுபடியும் ஒரு தடவை நல்லா விசாரிச்சுட்டு அப்புறம் பணம் கொடுக்கலாமேன்னு பார்க்கிறேன்.''

''ஏண்டா, நாராயணன்தானேடா டூர் நடத்தறான். நல்லாத் தெரிஞ்சவனாச்சே.''

''உண்மைதான்.. ஆனால் பண விஷயத் துல நண்பராயிருந்தாலும் ஒரு தடவைக்கு இரண்டு தடவை விசாரிச்சுடறது நல்லது இல்லையா?''

அப்பா மௌனமாக அம்மாவை நோக் கினார்

இருவர் முகத்திலும் ஏமாற்றம் படர்ந் தது.

''சரி, உன் இஷ்டம்'' என்றார் அப்பா.

கைகழுவ பாத்ரூம் சென்ற போது பானு எதிர்ப்பட்டாள்.

''நீங்க எப்பவுமே இப்படித்தான். வழ வழா, கொழ, கொழா! பட்டுனு சொல்லிட வேண்டியதுதானே'' என்று படபடத்தாள்.

பானு சொல்லும் காரணங்களும் நியாய மாகப் பட்டன.

அலுவலகம் புறப்பட்டேன். பிரச் னையை மாலை வரை தள்ளிப் போட்டது ஓரளவு ஆறுதலாய் இருந்தது.

மாலை ஆபீஸ் முடிந்து சற்று சீக்கிர மாகவே திரும்பினேன்.

தெரு முனை திரும்பும் போது சற்று முன்னால் பானு, பக்கத்து வீட்டு மாமியுடன் பேசியபடி நடந்து சென்று கொண்டிருந்தாள்.

நடையைச் சற்று எட்டிப் போட்டேன்.

கிருஷ்ணா

''என்ன பானு, உங்க மாமனார், மாமியார் காசி போற திட்டம் என்னாச்சு?'' என்று மாமி கேட்பது காதில் விழ, நிதானித்தேன்.

''மாமி, தேவையில்லாத செலவு இதுன்னு அவரிடம் பளிச்சுனு சொல்லிட்டேன். ஆபிஸ்லே இருந்து வந்ததும் அவர் இதைச் சொல்லிடுவார்னு நினைக்கிறேன்.''

''ஏண்டீம்மா, பாவம் வயசானவா போயிட்டு வரட்டுமே.''

''கரெக்ட்தான் மாமி. ஆனால் என் தங்கை கல்யாணம் முடிவாகும் போலிருக்கு. கல்யாணம்னா சும்மாவா? ஆயிரம் செலவு இருக்கும் எங்கப்பாவுக்கு. எங்களால முடிஞ்ச இரண்டாயிரமோ, நாலாயிரமோ கொடுக்கலாம்னு முன்னாடியே பேசி வைச்சிருக்கேன் அவரிடம். இப்ப என் மாமனார், மாமியார் காசி டூர் கிளம்பினால் பணத்துக்குத் திண்டாட்டம் வந்திடுமே. அப்புறம் தங்கை கல்யாணத்துக்குக் கொடுத்து உதவ முடியாமல் போச்சுன்னா....''

அதற்கு மேல் பானுவின் வார்த்தைகள் என் மனத்தில் பதியவில்லை.

நிமிஷ நேரம் பானு மேல் கோபம் வந்தாலும், அவள் தன் பெற்றோர் மேல் வைத்திருக்கும் பாசமும், நன்றியும் புரிந்தது.

ஆனால் நான்.....?

இதுவரை தங்களுக்கென எந்த ஆசையையும் வைத்துக் கொள்ளாமல் ஒரே மகனான என் நலன் ஒன்றையே முக்கியமாய்க் கொண்டு வளர்த்த என் பெற்றோரின் ஒரே ஆசையை மறுக்க நினைத்தேனே!

பானுவின் செயல் நியாயமோ, அநியாயமோ, ...அதன் பின்னே அவள் தன் பெற்றோர் மேல் வைத்திருக்கும் அன்பு இருக்கிறது.

அந்த உறுதி என்னிடம் இல்லை என்பதை நினைக்கும் போது வெட்கமாய் இருந்தது.

காசி டூருக்கும் ஏற்பாடு செய்து, பானுவின் தங்கை கல்யாணத்துக்கும் பணம் புரட்ட முடியாதா என்னால்....?

கொஞ்சம் பி.எஃப் அது, இது என்று ஆபிசில் கடன் வாங்கினால் போகிறது. அடைத்து விட முடியாதா என்ன....?

''அம்மா, அப்பா, நீங்க காசி போயிட்டு வரதுக்கு டிக்கெட் வாங்கிடலாம். நாளைக்கு வங்கியிலேயிருந்து பணம் எடுத்துத் தரேன்'' என்றேன் வீட்டை அடைந்ததும்.

அவர்கள் முகம் மலர்ந்தது பூரிப்பில்.

புரியாமல் பார்த்த பானுவைக் கனிவுடன் பார்த்தேன். இரவு அவளைச் சமாதானம் செய்ய வேண்டும்.

காட்டிக் கொடுத்த புத்தகப் புழு!


திருச்செந்தூர் கோவில் நகை சரிபார்ப்பு அதிகாரி சுப்ரமண்ய பிள்ளை கொலை தொடர்பான வழக்கு, பத்தாண்டுகளுக்கு முன்னர் மிகப் பரபரப்பாக அடிபட்டது நினைவிருக்கும்.... அதனை விசாரிக்க அரசு கமிஷன் ஒன்றை நியமித்தது. அந்தக் கமிஷனின் முன்னர் காவல் துறையினர் 'ஜி.டி' எனப்படும் பொது நாட்குறிப்பேட்டைச் சமர்ப்பித்தனர். அந்த டைரியில், சம்பவம் நடந்த 26.11.80 தேதி தொடர்பான குறிப்புக்கள் அடங்கிய பக்கங்கள் நீக்கப்பட்டு, அதனிடத்தில் வேறு குறிப்புக்கள் எழுதிச் சேர்க்கப்பட்டதாகச் சந்தேகம். வெளிப் பார்வைக்கு எதுவும் தவறாகத் தெரியவில்லை. சந்தேகத்தை உறுதி செய்வது எப்படி....?

மொத்தம் 135 பக்கங்கள் கொண்ட நாட்குறிப்பேட்டில், 26.11.80 தேதி குறிப்புகள் இடம் பெற்ற, 55, 56, ஆம் பக்கங்கள் தவிர மற்ற எல்லாப் பக்கங்களிலும் புத்தகப் புழு அரித்த சிறு துளை இருந்தது!

புத்தகம், புழு பூச்சியினால் அரிக்கப் பட்டால், அதன் காரணமாக விழும் துளை ஒரு நீண்ட நேரான குகை போல் முதல் பக்கத்திலிருந்து கடைசி பக்கம் வரை நீளும். நூல் கோத்த ஓர் ஊசியைச் செலுத்தினால் நேராகத் துளைவழியே சென்று மறுபக்கம் வெளிப்படும்.

காவல்துறை ஜி.டி. விலோமத்தில் இரு பக்கங்களில் மட்டும் 'புழு துளைக்க' மறந்து போயிருந்தது! இதனைச் சுட்டிக் காட்டிய வழக்கறிஞர், அக்குறிப்பேடு 'மேலிட' ஆணைக்கு ஏற்ப மாற்றி எழுதப்பட்டிருந்தது என்ற தமது தரப்பு வாதத்துக்கு ஆதாரம் சமர்ப்பித்தார்!

– இரணியல் ரவி எழுதிய 'சுப்ரமண்ய சம்காரம்' என்ற நூலிலிருந்து எடுத்தெழுதி அனுப்பியவர் : இரணியல் இளையரவி





சென்னையில் வளரும் கண்ணன் கோயில்

சின்னச் சின்னப் பாதங்களை வரைந்து, சிற்றுண்டிகள் பல படைத்து, குழந்தைக் கண்ணனைக் கொண்டாடும் நாள் கோகுலாஷ்டமி. ஆனால் அன்று வழிபாடு ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து, பூஜையும் செய்வது என்னவோ வீட்டுப் பெரியவர்கள்தான்!

அவ்வாறின்றி குழந்தைகளே பூஜை செய்யக்கூடிய கண்ணன் கோயில் ஒன்று சென்னை மயிலாப்பூரில் சீக்கிரமே உருவாகவிருக்கிறது.

''நந்தலாலா சேவா ஸமிதி' என்ற அமைப்புதான் இக் கோயில் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. 'நந்தா லாலா சிறுவர் சங்கத்'தையும் நடத்திவரும் இவ்வமைப்பைச் சேர்ந்த மதிஒளி சரஸ்வதியைச் சந்தித்து விவரங்கள் கேட்டோம்.

''சாதாரணமாகக் குழந்தைகளிடம் கடவுள் பற்றிய பயத்தையோ ஒருவித பயம் கலந்த மரியாதையையோதான் பெரியவர்கள் தூண்டுகிறார்கள். வழிபாடு சமயத்தில் கூட, 'கற்பூரத்தில் கையைச் சுட்டுக் கொள்ளாதே, தூர இருந்து கண்ணில் ஒற்றிக் கொள்' போன்ற கட்டளைகளே இடப் படுகின்றன. இவ்வாறு இன்றி குழந்தைகள் மகிழ்ச்சிக் குதூகலத்துடன் கடவுளை வழிபட வேண்டும்; நமது பாரம்பரியமான பூஜை முறைகளைத் தாங்களே செய்து பழகிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் இக் கோயிலைக் கட்டத் திட்டமிட்டோம்'' என்று கூறினார் மதிஒளி சரஸ்வதி. கோயில் கட்டுவதற்கு முன்னோடியாக, கிருஷ்ணர் பாதங்களைப் பஞ்சலோகத்தில் செய்வித்து, கேரளாவிலுள்ள போற்றியின் (குருக்கள்) அருளாசியுடன் அதனைச் சென்னைக்கு எடுத்து வந்தார்கள். மூன்று வயதுக் குழந்தையின் பாதங்களை ஒத்த சிறிய கிருஷ்ணர் பாதங்கள் வெவ்வேறு பள்ளிக் கூடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டன. அவற்றுக்குக் குழந்தைகளே பாலபிஷேகம் செய்து, அந்தப் பாலைப் பிரசாதமாக அனைவருக்கும் விநியோகித்தனர். துளசியால் அர்ச்சனை செய்தனர்; மணியடித்தபடியே தீபாராதனை செய்தனர்; சில்லறைக் காசுகளைக் காணிக்கை அளித்தனர். ''குழந்தைகளின் உற்சாகம் எங்களையும் தொற்றிக் கொள்ள, ஸமிதியைச் சேர்ந்த நூறு பேர் ஆளுக்கு ஆயிரம் ரூபாய் வசூல் செய்தோம். ஒரு கிருஷ்ணர் விக்கிரஹத்தை வடிக்கச் சொல்லி 'ஆர்டர்' கொடுத்தோம்'' என்றார் மதிஒளி.

நந்தலாலா என்றே அழைக்கப்படவுள்ள அந்தக் கண்ணன் திருவுருவத்தைத்தான் எதிர்ப்பக்கத்தில் காண்கிறீர்கள். தங்கத்தை உரைத்துப் பார்க்கப் பயன் படுத்தும் உரைகல்லால் ஆனது. நம் குணங்களை நாமே உரைத்துப் பார்த்து, நந்தலாலா சந்நிதியில் நல்வழிப்பட வேண்டும் என்ற எண்ணத்தை உள்ளடக்கியது. அதே சமயத்தில் வண்ண மயமாக அலங்கரிக்கப்பட்டு, வாலிப வாத்ஸல்யத்துடன் குழந்தைகளை ஈர்க்கவும் வல்லது, ஜெய்பூரில் வடிக்கப்பட்ட இந்த விக்கிரகம்.

கோயிலின் வடிவமைப்பை தெட்டி பொம்மையாகச் செய்து வைத்திருக் கிறார்கள். அற்புதமாக இருக்கிறது. தேசிய ஒருமைப்பாட்டை உணர்த்த, பல மாநிலங்களின் கட்டடச் சிறப்பம்சங்களை உள்ளடக்கி வடிவமைத்துள்ளார்கள். கண்ணன் கோயில் என்றதும் கண்ணை மூடிக்கொண்டு, ரங்காச்சாரி சாலையிலுள்ள தமது வீட்டை உள்ளடக்கிய நிலத்தைக் காணிக்கையாக அளித்துள்ளவர் 97 வயதான ராமசாமி அய்யர். இளமைக்கும் முதுமைக்கும் பாலம் கட்டி, தமக்கொரு இருப்பிடத்தையும் தேடிக் கொண்ட மாயக் கண்ணனின் திருவிளையாடலை, இந்தக் கோகுலாஷ்டமி சமயத்தில் எண்ணி, வியந்து மகிழ்கிறோம்!

– பானுமதி ராமச்சந்திரன்

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்...

(1942, கல்கி ஆகஸ்டு 10, 20 இதழ்கள்)

தலைசிறந்த பத்திரிகையின் தலைவர்



இந்தியாவில் தேசியப் பத்திரிகைகள் என்று சொல்லப்படும் பத்திரிகைகள் இன்றைய தினம் உயிரை வைத்துக் கொண்டிருப்பதுடன், பிரிட்டிஷ் சர்க்காருக்குச் கடர்கட புத்தி சொல்லவும், இரண்டாவது போர் முனையின் அவசியத்தைப் பற்றி வரிந்து தள்ளவும் சௌகரியமான நிலைமையில் இருக்கின்றனவென்றால், இதற்குப் பிரதானமான காரண புருஷர் நமது ''ஹிந்து'' பத்திரிகாசிரியர் ஸ்ரீ கே. ஸ்ரீனிவாசன் அவர்கள்தான். இந்தியாவிலேயே தலைசிறந்த பத்திரிகை என்ற புகழை ''ஹிந்து'' பத்திரிகை இன்று இவருடைய தலைமையில் அடைந்திருக்கிறது. இதனால் தென்னாட்டின் கௌரவமே உயர்ந்து நிற்கிறது. யுத்த காலத்தில் பத்திரிகைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஒரு சங்கம் அவசியம் என்று ஏற்பட்டபோது, அச்சங்கத்தின் தலைமைப் பதவிக்கு உரியவர் ஸ்ரீ கே. ஸ்ரீனிவாசன்தான் என்பதைப் பற்றி யாருக்குமே சந்தேகம் இருக்கவில்லை. வருங்காலத்தில் இந்தியப் பத்திரிகைகள் என்ன நிலைமையை அடைந்தாலும், சென்ற இரண்டு வருஷ காலத்தில் ஸ்ரீ கே. ஸ்ரீனிவாசனின் சேவையினால் அடைந்துள்ள நன்மைகளைப் பத்திரிகை உலகம் ஒருநாளும் மறப்பதற்கில்லை.

- அட்டைப்பட விளக்கம்

அழைத்துப் பேசுங்கள்!

சென்ற ஒரு வருஷத்துக்குள் மகாத்மாஜி எத்தனையோ காரியங்களில் தமது அபிப்பிராயத்தை மற்ற சகாக்களுக்காக விட்டுக் கொடுத்திருக்கிறார்; மாற்றிக் கொண்டிருக்கிறார். ஜவாஹரும், ஆஸாதும், படேலும் ''முஸ்லிம் லீக்குடன் ஒரு சமரச, முயற்சி செய்ய வேண்டியதுதான்'' என்று சொன்னால், மகாத்மா காந்தி, அவசியம் செவி கொடுப்பார். இதனால் தேச மக்களுக்கு எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் இல்லாமற் போகலாம்; தேசம் மகத்தான நன்மையை அடையலாம்.

ருஷியா, சைனா, அமெரிக்கா முதலிய நாடுகளின் இராஜ தந்திரிகளுக்கு விண்ணப்பம் அனுப்புவதைக் காட்டிலும், ஜனாப் ஜின்னாவை அழைத்துப் பேசுவதுதான் இந்நிலைமையில் அத்தியாவசியமானது என்று நாம் பரிபூரணமாக நம்புகிறோம். இதை இப்போது ஒப்புக் கொள்ளாவிட்டால், ஆறு மாதமோ ஒரு வருஷமோ கழித்து நமது தலைவர்கள் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியிருக்கும். ஆனால் அதற்குள்ளாக என்னென்ன விபரீதங்கள் விளைந்து விடுமோ, யார் கண்டது?

- தலையங்கத்தின் இறுதி

நாடகக் கலையின் மறுமலர்ச்சி

● சில காலத்துக்கு முன்பு வரையில் தமிழ் நாட்டில் நாடகம் பார்க்கப் போனால், ராஜபார்ட்டுக்காரரும் ஹார்மோனிய வித்வானும் மேடைமேல் சங்கீத குஸ்தி போடுவதைப் பார்த்துவிட்டுத் திரும்ப வேண்டியதாயிருந்தது. இந்த நிலைமையில் ''நாடகக் கலையை நாங்கள் தூக்கி நிறுத்துகிறோம்'' என்று அமெச்சூர்கள் சிலர் முன் வந்தார்கள். இவர்கள் நாடகக் கலையைத் தூக்கி நிறுத்திவிட்டு அப்பால் போவதும் அது உடனே குழியில் விழுவதுமாயிருந்த சமயத்தில், சில தொழிலாளி நாடகக் கம்பெனிகளே முன்வந்து நாடகக் கலைக்கு உண்மையாகவே மறுமலர்ச்சி அளித்து வருகின்றன. இவர்களில் நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியை



யும், டி.கே.எஸ். சகோதரர்களையும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். டி.கே.எஸ். சகோதரர்களின் சிறந்த நாடகங்களில் ஒன்றான ''ராஜா பர்த்ருஹரி'' யில் ஒரு காட்சியை மேலே காணலாம். ராஜாவும் இளைய ராணியும் நாலு கண்களைக் கொண்டு ஒரே திசையை நோக்குவதைப் பார்க்கும் போது, ஏதோ சுவாரஸ்யமான கட்டமாய்த் தான் இருக்குமென்று ஊகிக்கலாமல்லவா?

- பட விளக்கம்

நல்லயோசனை!

''என்ன ஸார்! ஸலூனுக்குள்ளே போய் முகக்ஷவரம் பண்ணிண்டு திரும்பி வந்தாலை இளைக்காணோம்! இதோடு மூணாந் தடவை இது மாதிரி நடந்திருக்கிறது!''




''சரிதானய்யா! இனி மேல் தாடி வளர்த்து விடும்!''

புத்தகம் தயார்!

ஆசிரியர் முன்னுரையிலிருந்து :

''இந்தக் கடுங்காவல் கட்டுரைகள் 'கல்கி' சஞ்சிகையில் தொடர்ச்சியாக வெளிவந்த சமயத்தில், பல நண்பர்கள் 'கட்டுரைகளைப் படிக்கும் போது கடுங் காவலை நாங்களே அநுபவிப்பதாய்த் தோன்றுகிறது' என்று சொல்லி என்னைப் பாராட்டினார்கள். இன்னும் சில நேயர்கள் 'உமக்கு மூன்று மாதம் கொடுத்தது போதாது; ஆறு மாதமாவது போட்டிருக்க வேண்டும்' என்று ஆசீர்வதித்தார்கள்.....''



- மூன்று மாதம் கடுங்காவல் நூல் விளம்பரம்

கஸ்தூரிபா கைது!

''ஸ்ரீமதி கஸ்தூரி பா காந்தி கைதியானார்!'' என்ற செய்தியைக் கேட்டதும், நம் எல்லாருடைய உள்ளத்திலும் எழுந்த எண்ணம் ஒன்றுதான். ''இன்னும் எத்தனை காலம் நம் நாடு சுதந்திரமின்றி இருக்கும் இன்னும் எத்தனை தடவை நமது அன்னைமார்கள் சிறை புக வேண்டியிருக்கும்?'' என்பதுதான். சீதையும், சாவித்திரியும், தளாயினியும், தமயந்தியும் பிறந்த பாரத நாட்டில், அந்தக் கற்பரசிகளின் பரம்பரையில் வந்தவர் ஸ்ரீமதி கஸ்தூரி பா. பால வயதில் மணமுடித்த காலத்திலிருந்து தமது பதிக்கு உண்மையான வாழ்க்கைத் துணையாக இருந்து வந்திருக்கிறார். புத்தகப் படிப்பும், பள்ளிக் கல்வியும் இல்லாதவர்; ஆனாலும் கல்வியினால் அடையும் சிறந்த பலனை எய்தியவர். மகாத்மா காந்தி கைதியான 9உ யன்று மாலை அவர் பம்பாயில் பொதுக் கூட்டத்தில் பேசுவதாக ஏற்பாடு. ''பதிக்குப் பதிலாகச் சதி பேசுகிறேன்'' என்று கஸ்தூரி பா பேச முன் வந்தார். ''வாருங்கள் சிறைக்கு'' என்றார்கள் அதிகாரிகள்; சிறையிலும் பதிக்குத் தொண்டு செய்யும் பாக்கியத்தை அவருக்கு அளித்து விட்டார்கள்!



- அட்டைப்பட விளக்கம்

தேசபக்தர் மரணம்

● தேசபக்தர் ஒருவருடைய மரணம் சாதாரணமாகவே தேச மக்களைத் திடுக்கிடச் செய்யக் கூடியது. அத்தகைய மரணம் எதிர்பாராத விதத்தில் நேர்ந்து, அதுவும் சர்க்கார் அறிக்கையின் மூலமாகத் தெரிந்து கொள்ள வேண்டியதாயிருந்தால், அது ஜனங்களை எவ்வளவு திடுக்கிடச் செய்யும் என்று சொல்ல வேண்டியதில்லை. ''சென்ற 15உ காலை 8.30 க்கு ஸ்ரீ மகாதேவ தேஸாய் மாரடைப்பினால் காலமானார்'' என்ற செய்தியை சர்க்கார் அறிக்கை மூலம் அறிந்த போது தேசமே திடுக்கிட்டது; பின்னர் மகத்தான துக்கத்தில் ஆழ்ந்தது. ஸ்ரீ ராமபிரானுக்கு லக்ஷ்மணன் எப்படியோ, அப்படி மகாத்மா காந்திக்கு ஸ்ரீ மகாதேவ்



இருந்தார். நெடுநாள் பழக்கத்தினால் மகாத்மாவின் உள்ளமும் மகாதேவின் உள்ளமும் ஒன்றாகக் கலந்து விட்டன. இதனால், மகாத்மாவின் தத்துவங்களை ஜனங்களுக்கு விளங்குமாறு எடுத்துச் சொல்லுதல் ஸ்ரீ மகாதேவ தேஸாய்க்குச் சாத்தியமாயிற்று. காந்தி மகான் வாழ்க்கையில் எத்தனையோ அரிய சம்பவங்களையெல்லாம் ஸ்ரீ மகாதேவின் மூலமாகவே நாம் அறிந்து வந்தோம். ''தேஸாயின் மரணம் மகாத்மாவுக்கு ஒரு பெரிய இடிபோல் நேர்ந்திருக்கிறது'' என்று ராஜாஜி சொன்னார். அந்த இடியின் அதிர்ச்சியை மகாத்மாவுடன் நாற்பது கோடி மக்களும் பகிர்ந்து கொள்கிறார்கள்.

- பட விளக்கம்

சபாபதி

இந்தப் படத்தின் ஆரம்பத்தில், பள்ளிக் கூடத்தின் போர்டு பலகையில் தமிழ் வாத்தியாரின் படத்தைப் பார்த்தவுடனேயே நாம் வெளியுலகத்தை மறக்க

★ கே. சாரங்கபாணி

★ காளி என். ரத்தினம்

★ டி.ஆர். ராமச்சந்திரன்



ஆரம்பித்து விடுவோம். இவருடைய மாணாக்கன் சபாபதி ரயிலைப் பற்றி எழுதிய வியாசத்தில் ரயிலானது குப், குப், குப், குப், குப்...... என்று செங்கற்பட்டு வரையில் போய்க் கொண்டேயிருக்கிறது! இந்தக் கட்டத்தில் நமது கவலைகள் எல்லாம் குப், குப், என்று பறந்து போகும். ரயில் குப், குப் என்று போகும்போது வேலைக்காரன் சபாபதி ரயில் மாதிரி ஊதுகிறதையும், ரயில் போகிற மாதிரி நடிப்பதையும் பார்க்கும்போது நிச்சயம் குலுங்கச் சிரிக்க ஆரம்பித்து விடுவோம். அப்புறம், படம் முடியும் வரையில் சிரிப்பை நிறுத்தவே மாட்டோம். ''இதென்ன இப்படிச் சிரிக்கிறோமே?'' என்று நினைத்துப் பார்க்கக்கூட நேரமில்லாமல் சிரிப்போம். படம் முடிந்து வெளியில் வந்து, நகரின் இருட்டடிப்பைப் பார்க்கும்போதுதான், ''ஓஹோ! உலகம் என்பதாக ஒன்று இருக்கிறதா? இதில் யுத்தம் ஒன்று நடக்கிறதா? இந்தியாவின் மாபெருந் தலைவர்கள் சிறையில் இருக்கிறார்களா? ஜனங்கள் தந்திக் கம்பிகளை அறுத்து, ரயில் தண்டவாளங்களை அகற்றுகிறார்களா? இந்தக் குற்றங்களுக்குப் பம்பாயில் மரண தண்டனை விதிக்கப் போகிறார்களா?'' என்றெல்லாம் வெளி உலக ஞாபகங்கள் உண்டாகும்.

இந்தப் படத்தை டைரக்ட் செய்த ஸ்ரீ ஏ.வி. மெய்யப்ப செட்டியாருக்குத் தமிழ் மக்கள் சார்பாக வாழ்த்துக் கூறுகிறேன். இம்மாதிரி பல குற்றமற்ற ஹாஸ்யப் படங்களை அவர் கொண்டு வருவார் என்று நம்புகிறேன்.

- ஆடல்பாடல் 'கர்நாடகம்'

புத்திசாலி

எஜமானி (புதிதாக வேலைக்கு வந்த தோட்டக்காரனைப் பார்த்து) : என்னடா அப்பா! இப்படிக் காலை ஒரு தினுஸா வைத்து நடக்கிறயே? உனக்கு ஒரு கால்



இன்னொரு காலை விடக் கொஞ்சம் குட்டையா, என்ன?

தோட்டக்காரன் : எவக்கா? நல்லாச் சொன்னீங்க. எனக்கு ஒரு கால் இன்னொரு காலை விட நெட்டைங்க! குட்டையில்லை!

– தா. பாக்யமுத்து

50 ஆண்டுகளாக ஒலிக்கும் முரசு



“‘முரசொலி முதலில் துண்டறிக்கையாக வெளிவந்தது. அப்போது நான் மாணவனாக இருந்ததால் 'சேரன்' என்ற புனைபெயரில் ஒளிந்து கொண்டேன்'' என்று மலரும் நினைவுகளை முரசொலியின் பொன் விழா நிகழ்ச்சியின் போது வெளிப்படுத்தினார் கலைஞர்.

கலைஞர் கல்யாண மண்டபத்தில் நடந்த விழாவில் அரங்கம் கொள்ளாமல் வெளியிலேயும் எக்கச்சக்கக் கூட்டம். ஆனால் பெண்கள் எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணி விடலாம். விழாவில் பேசிய மாவட்டச் செயலாளர்கள் அனைவரும் ஒருமித்த குரலில், ''முரசொலி வளர்ச்சிக்குத் துணை நிற்போம்'' என்று முழங்கியது கலைஞரின் எடையைக் கூட்டியிருக்கும். ''எமர்ஜென்ஸி காலத்தில் ஒரு லட்சம் பிரதிகள் முரசொலி விற்றதை சாதனையாகக் குறிப்பிட்டார் மாறன். பத்திரிகைத் தணிக்கைக் காரணமாக சங்கேத மொழியில் கலைஞர் எழுதியதைக் கழகத் தோழர்கள் புரிந்து கொண்டு செயல்பட்டதையும் பெருமிதத்துடன் சொன்னார்.

நடிகர்கள் நாகேஷ், தங்கவேலு, முன்னாள் நிதித்துறை செயலர் குகன், பத்திரிகையாளர்கள் சாவி, ராம் தவிர பேசியவர்கள் கழக உடன்பிறப்புக்கள்தான். எல். கணேசன் பேசிய போது, ஒரு கால கட்டத்தில் திராவிட இயக்கப் போர் வாள்களாக 42 பத்திரிகைகள் இருந்ததாக நினைவு கூர்ந்தார்.

''நானும், மாறனும், முரசொலியை வாரப் பத்திரிகையாக மாற்றி விடலாமா என்று கொஞ்ச நாட்களாக யோசித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இப்போது முரசொலி அறக்கட்டளை நிறுவ உடன்பிறப்புக்கள் முடிவு செய்திருக்கிறார்கள்'' என்று குறிப்பிட்டார் கலைஞர். பலர் பழைய விஷயங்களைப் பேசியதால், கலைஞருக்கும் அந்த நாள் ஞாபகம் வந்ததில் வியப்பில்லை.

நாமும் நண்பர் தென்னனும் தலையில் 'முரசொலி' கட்டுக்களைச் சுமந்து, ஓடம் போக்கி ஆற்றைக் கடந்தது பற்றிக் குறிப்பிட்ட கலைஞர், ''கையில் வைத்துப் பார்த்து மகிழ்ந்தது மட்டுமல்ல; தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடியவன்'' என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டார். பல நேரங்களில் பொருளாதாரச் சூழ்நிலை காரணமாகப் பத்திரிகைக்கு நெருக்கடி வரும் போது குடும்பத்து நகைகள் அடகுக் கடைக்குப் போகுமாம். இதைக் கலைஞர் குறிப்பிட்ட போது பல தொண்டர்கள் 'உச்' கொட்டினார்கள்.

பெரியார் 'குடியரசு' பத்திரிகை நடத்திய போது, பிழைகள் எதுவும் வராமல் கவனமாகப் பார்த்துக் கொள்வாராம். அந்தப் பழக்கம் கலைஞருக்கும் தொற்றிக் கொண்டு விட்டது. ''முரசொலியில் மட்டுமல்ல, மற்ற பத்திரிகைகளில் பிழைகள் வந்தாலும் போன் செய்து சொல்லுவேன். ஒருமுறை ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று திருமூலர் கூறியதாக ஒரு பத்திரிகை எழுதியது. உடனே நான், ''அதை எழுதியவர் கணியன் பூங்குன்றனார்'' என்று போன் மூலம் அந்தப் பத்திரிகைக்குச் சொன்னேன். ஆனால் தமிழ்நாடே தற்போது பிழைகள் மலிந்த புத்தகமாகப் போய் விட்டதே!'' என்று கலைஞர் அரசியல் பொடி வைத்த போது அரங்கம் கைதட்டி ஆர்ப்பரித்தது.

– தில்லப்பா

அகலிகையைப் போல ஆனந்த அழுகை!

◆ ஆராய்ச்சி மனப்பான்மைக்கு அஸ்திவாரம் போட இன்னும் ஆயிரமாயிரம் நாராயணன்கள் நம் நாட்டில் தோன்ற வேண்டும்.
ஸ்ரீவைகுண்டம், சே. முத்துவிநாயகம்.

◆ மாத வருமானத்திற்கு மண்டியிடும் குடும்பத் தலைவனின் குழப்பத்தைக் கண் எதிரில் இருக்கும் காட்சிப் பொருள் போல் விளக்கியது தமயந்தியின் 'துரத்தும் ஏக்கங்கள்.'
கும்பகோணம், ஆர். ராகவன்.

◆ பங்காரப்பா தாக்குப் பிடிப்பாரா மாட்டாரா என்பதா நமக்கு முக்கியம். யார் வந்தாலும் காவிரி நீர் கிடைக்குமா கிடைக்காதா என்பதுதான் நமது தலைவலி!
திருச்சி - 2, கே.என். இராமகிருஷ்ணன்.

◆ விருத்தாசலம் பழமலைநாதர் ஆலயத்திற்கு நான் இதுவரை சென்றதே இல்லை. கட்டுரையைப் படித்து முடித்த போது, அழகுமிகு ஆலயத்தை வலம் வந்து, சுவாமி தரிசனம் செய்த மன நிறைவு ஏற்பட்டது!
கும்பகோணம், கே.என். பாலகிருஷ்ணன்.

◆ ஒவ்வொரு இதழிலும் "அருள்வாக்கு" மிகப் பொடி எழுத்துக்களில் அச்சிடுகிறீர்கள். மூக்குக் கண்ணாடி உபயோகித்தும் அதைப் படிக்க முடியவில்லை. மற்ற கதைகள் கூட பரவாயில்லை. இனியாவது சற்று பெரிய எழுத்துக்களில் அச்சிடுவீர்களென்று நினைக்கிறேன்.
தர்மபுரி, லைலாவதி.

◆ 'அலை ஓசை' டி.வி தொடர் பற்றிப் படித்த போது, இதையெல்லாம் பார்த்து, ரசிக்க முடியாதபடி பெங்களூரில் மாட்டிக் கொண்டதை நினைத்து வருத்தம் கொண்டாலும், பின்னாடி விடியோ கேசட்டாக வராமலா போய்விடும் என்ற சமாதானமும் கொண்டேன்.
பெங்களூர் - 79, கா.பா. கணேஷ் பாபு.

◆ 'தர்மம் என்பது எழுதப்படாத சட்டம். அதற்கு மனச்சாட்சிதான் காவலன்' என்று தலையங்கத்தில் கூறப்பட்ட வரிகள் மெய்சிலிர்க்க வைத்தன.
போடிநாயக்கனூர், ரா. நாச்சிமுத்து.

◆ இனி சினிமாக்களில் சண்டைக் காட்சியில் தெருவோரக் கடைகள் உடைபடுவதைக் கண்டால், என்.சி. மோகன்தாஸ் எழுதிய 'ஏழை வயிறு' கதைதான் ஞாபகம் வரும்.
காட்டூர், எஸ். அருள்மொழி.

◆ "கல்கியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை மதிப்பில் சற்று வித்தியாசமிருக்கலாம். ஆனால் ஆஸ்பத்திரி துவங்கியதையும், திருமண மண்டபம் கட்டப்பட்டு வருவதையும் சசிகலாவின் அண்ணன் ஒப்புக் கொண்டுவிட்டாரே! அதுபோதும்.' அதுசரி, சசிகலா கட்டும் திருமண மண்டபத்திற்கு இடையூறாக இருப்பதால் திருத்துறைப்பூண்டி பஸ் நிலையம் மாற்றப்பட்டதற்கு டாக்டர் விநோதகன் என்ன பதில் சொல்லப் போகிறார்?"
அரசடி, நெல்லை வி. சிவா.

◆ எழுத்துலக விம்பிள்டனாக விளங்கும் கல்கியின் பொன்விழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டு பரிசு பெற்ற தருணத்தில் அகலிகையைப் போல ஆனந்த அழுகை! பரிசு பெற்ற எழுத்தாளர்கள் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
நெய்வேலி - 3, நளினி சாஸ்திரி.

◆ 'உங்கள் வீட்டுத் திருவிழா' என்றெல்லாம் அமர்க்களப்படுத்தும் 'கல்கி' விழா கொண்டாடும் நாளில் குடியரசு தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா என்பதை மறந்து ஆர். வெங்கடராமன் என்றே குறிப்பிட்டிருப்பது ஏன்?
கோவில்பத்து, இரா. இரவீந்திரன்.

(அழைப்பிதழ் அச்சான நேரத்தில் ஆர். வி. தான் குடியரசுத் தலைவர் என்னும் போது, "முந்நாள் ஜனாதிபதி" என்று அக்கக்கோப்பது சரியாகப்படவில்லை. – ஆர்.)

◆ 2.8.92 அட்டையில் சிறப்பான முறையில் வெளியிடப்பட்டுள்ள என் வண்ணப் புகைப்படத்தை எடுத்தவர் என் நண்பர் 'திருச்சி மாடர்ன் ஜமீல்'.

பெரியதம்பி நாடகத்தைப் படிப்பவர்கள், அதனை முழுமையாகவோ பகுதியாகவோ மேடையேற்ற விரும்பினால் என்னிடம் முன் அனுமதி பெற்றே செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.
13 ஏ, ஐந்தாவது டிரஸ்ட் குறுக்குத் தெரு,
மந்தைவெளிப்பாக்கம்,
சென்னை - 600 028. எஸ்.வி. சேகர்

★ சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் பிறந்து வளர்ந்த ஊரின் திருப்பெயர் சிவகாலிபுரமாகும். இதுதான் காலப்போக்கில் மருவி சேங்காலிபுரமாகி விட்டது. சோழ அரசனால் பூஜிக்கப்பட்டதால் சோளேசலிங்கம் என்று பெயர் பெற்ற ஸ்வயம்பு லிங்கம் இங்கு மூலவர். ஸ்ரீ நித்யவாம்பிகையுடன் எழுந்தருளியிருக்கிறார் ஸ்ரீ சோளேஸ்வர சுவாமி. இந்த ஆலயத்தைச் செப்பனிட்டு 26.8.92 - ல் கும்பாபிஷேகம் நடக்கிறது. திருப்பணிக்கு உதவி, சிவன் அருள் பெற விரும்புவோருக்கு முகவரி :
சேங்காலிபுரம் (SO),
கும்பகோணம் - 612 604. திருப்பணிக் கமிட்டி,
ஸ்ரீ சோளேஸ்வர சுவாமி கோவில்,

●● ஐந்து வயதேயான என் மகளுக்கு ஒரு அபூர்வ நோய் உள்ளது. Connective tissue disorder காரணமாக ஏற்படும் நோய் இது. நோயின் பெயர் Fibrodysplasia Ossificans Progressiva/Myositis ossificans progressive என்பதாகும். இந்த நோய் தங்கள் குழந்தைக்கு வந்து குணப்படுத்திய பெற்றோர்கள், அல்லது, இந்த நோய் பற்றி நன்கு அறிந்து குணப்படுத்திய அனுபவமுள்ள டாக்டர்கள் தயவு செய்து என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

- ஜி. நடராஜன்,
A-80, Sector 12
NOIDA 201 301
Distt. Ghaziabad (UP)

●● நான் வசிக்கும் கிராமப் பகுதியில் ஒரு வெல்டிங், லேத் பட்டரை நிறுவியுள்ளேன். அதில் உழைக்கும் பங்குதாரராக (Working Partner) சேர நேர்மையும் முன்னேற்றத் துடிப்பும் மிக்க நபர் தேவை.

- டாக்டர். ஆர். கே. பழனிசாமி,
சாருமதி இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,
மேலகபிஸ்தலம் அஞ்சல் 614 203
பாபநாசம் வட்டம்,
தஞ்சை (மாவ)

●● AMIE - Section A எழுத உள்ள எனக்கு அந்தப் பாடங்கள் சம்பந்தமான புத்தகங்கள், கைடுகள் வைத்திருப்போர் உதவினால் படித்து முடித்ததும் திருப்பிக் கொடுத்து விடுகிறேன். அல்லது பணம் தேவை எனில் எவ்வளவு என்று எழுதவும்.

- ஆர். சண்முகானந்தம்,
25, மருதி தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

●● தஞ்சையில் Youth Employment Consultants என்ற பதிவு பெற்ற நிறுவனம் நடத்தி வருகிறோம். கோவையில் பிரபல தனியார் நிறுவனங்களில் பணியாற்ற சேல்ஸ் ரெப், அகவுண்டன்ட், செக்யூரிடி கார்டு, டெய்லர், கம்ப்யூட்டர் ஆபரேட்டர், கிளார்க், டைபிஸ்ட், டிரைவர், ஸ்டெனோ, மில் லேபரர் முதலியோர் தேவைப் படுவதாக அறிகிறோம். ரூ 1/- தபால் தலையுடன் விண்ணப்பித்தால் விவரங்கள் தெரிவிக்கிறோம்.

- ஆர். சாமிநாதன்,
நிர்வாகி, Youth Employment Consultants,
8, தமிழ்ச்சங்கம் சாலை,
கரந்தை,
தஞ்சை - 2.

●● திருமூலர் இயற்றிய திருமந்திரம் விளக்கக் கூட்டம் வாரந்தோறும் திங்கட் கிழமையன்று நடத்தி வருகிறேன். இக்கூட்டம் தங்கள் பகுதியில் ஆரம்பிக்க விரும்பினால் தொடர்புகொள்ள முகவரி:

- சிவனன்பு வேங்கடேசன்,
38, வேளாளர் தெரு,
அலங்கம் (வ.ஆ.), - 635 701.

பாலம்



●● இந்திய, மேல்நாட்டு இசை (திரை இசை உட்பட) குறித்த சந்தேகங்களுக்கு விளக்கம் தரத் தயாராக இருக்கிறேன்.

- லெட்சுமி நாராயணன்,
"ஸ்ரீ வித்யா மந்திர்",
14 A, மெய்யப்பன் முதல் தெரு
ஞானஒளிபுரம்,
மதுரை - 625 016.

●● மருந்து கலந்த பற்பசை தயாரித்து வருகிறேன். இதனைப் பிரபல நகரங்களில் சந்தைப்படுத்த பகுதி நேர ஊழியர்கள் தேவை. எஸ். எஸ். எல். ஸி. வரை படித்தவர்கள், படிப்பைத் தொடர்கிறவர்கள் ஓய்வு நேரத்தில் சம்பாதிக்கலாம் என்பதுடன் தன்னம்பிக்கையை ஊட்டும்.

- ஆர். கே. சித்தரபதி,
த. பெ. எண் : 64,
காரைக்கால் - 609 602.

●● மலர்களாய்ச் சிதறிக் கிடக்கும் இளம் கவிஞர்களை ஓரணியில் மாலையாய்த் தொடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளேன். "தமிழக இளம் கவிஞர் இலக்கியப் பேரவை" ஆரம்பிக்க எண்ணம். இணைந்து மணம் வீச விரும்பும் இளைஞர்கள் தொடர்பு கொள்க.

- செங்கை பாரதி,
57, செல்வ விநாயகர்
கோவில் தெரு,
செங்கோட்டை - 627 809.
நெல்லை (மாவ)

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி காரியாலயம் பொறுப்பு ஏற்க இயலாது - ஆர்.)

அல்லாடிய விமானமும் தள்ளாடிய பொருளாதாரமும்!

பம்பாயில் படம் திரையிடப்படும் தினத்தன்று நான் அங்கே இருக்க வேண்டும் என்று விநியோகஸ்தர் ராம் சாப்ரா விரும்பினார். குடும்பத்துடன் வருமாறு அழைத்தார். மனைவி குழந்தைகளுடன் புறப்பட்டேன்.

அப்போது பம்பாயில் மழை சீசன். பம்பாயில் மழைக்காலம் என்றால் எப்படி இருக்கும் என்பது அனுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் அவஸ்தை புரியும். சாலைகளெல்லாம் ஆறுகளாகும். ரயில் போக்குவரத்து ஸ்தம்பித்து விடும். இடுப்பு வரை ஆழ நீரில் இறங்கித்தான் ஆபீஸை அடைய முடியும். இப்படிப்பட்ட ஒரு சீசனில் என் படம் ரிலீஸ் ஆக நேர்ந்தது ஒரு துரதிர்ஷ்டந்தான்.

போதாக்குறைக்கு நாங்கள் ஏறியிருந்த விமானம் பம்பாயை நெருங்க நெருங்க, வானிலேயே தடுமாற ஆரம்பித்தது. கடுமையான புயல், மழை மேகங்களிடையே சிக்கித் தத்தளிக்க என் மகனும் மகளும் பயந்து அலற ஆரம்பித்தார்கள். பெரியவர்களாகிய நாங்கள் மட்டுமென்ன, பயணிகள் எல்லோருமே பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தோம்!

தில் ஏக் மந்திர் (நெஞ்சில் ஓர் ஆலயம்) படத்தை கல்கத்தாவில் ரிலீஸ் செய்த போதும் கிட்டத்தட்ட இதே மாதிரியான, இல்லை இல்லை, இதை விட மோசமான அனுபவம் எனக்கு ஏற்கெனவே ஏற்பட்டிருந்தது. அப்போது சித்ராலயா யூனிட்டில் பணியாற்றிய அனைவருக்கும் அழைப்பு. அதை ஏற்று என்னுடன், வின்சென்ட், கோபு, அருணாசலம், சி.வி. ராஜேந்திரன் இன்னும் பல டெக்னீஷியன்கள் அனைவரும் விமானத்தில் என்னுடன் இருந்தனர்.

கல்கத்தாவை அடைய இன்னும் அரைமணி நேரமே பாக்கியிருந்த போது விமானம் தள்ளாட ஆரம்பித்தது. அந்நாளைய விமானப் பயணத்தில் சூழ்நிலையில் காற்றின் அழுத்தம் வேறுபடும் போது சில சமயம் இப்படி ஏற்படுவதுண்டு. இதனை பம்ப்ஸ் (Bumps) என்பர். எனவே நாங்கள் கவலைப்படவில்லை. ஆனால் சற்று நேரத்தில் விமானம் கீழ் நோக்கிச் செங்குத்தாகவும் பக்கவாட்டிலும் சரிய ஆரம்பித்த போது மெய்யாகவே பயந்து போனோம். விமானம் தம் பிடித்து மேலே எழும்; மறுபடி தொப்பென்று பல நூறு அடிகள் கீழே சரியும். மீண்டும் மேலேறும். நாங்கள் உட்கார்ந்திருந்த இருக்கைகள் கூடக் கழன்று விட்டன! உணவு அடுக்கப்பட்டிருந்த ஷெல்புகள் சரிந்து விட்டன. முதலில் தெய்வத்தைப் பிரார்த்தனை செய்த பயணிகள், பின்னர் மரண ஓலம் எழுப்ப ஆரம்பித்து விட்டனர். நாங்களும்தான்!

இப்படி அரை மணி நேர ஜீவ மரணப் போராட்டத்துக்குப் பிறகு ஒருவழியாக விமானம் தரை இறங்கியது. அது கல்கத்தா விமான நிலையம் அல்ல. விமானப் படைக்குச் சொந்தமான சானிகுண்டா விமானத்தளம். விமானத்தின் கேப்டன் பத்மன், கேரளாவைச் சேர்ந்தவர். ''விமானத்தில் இன்னும் ஐந்து நிமிடம் பறப்பதற்குத்தான் எரிபொருள் இருந்தது; நல்ல வேளையாக எப்படியோ இந்த விமானத் தளத்தில் இறங்கி விட்டேன்'' என்றார். எல்லோரும் கைதட்டி காப்டனைப் பாராட்டினோம். விமானம் பழுது பார்க்கப்பட்டு, பெட்ரோல் நிரப்பப்பட்டு, பிறகு கல்கத்தா போய் இறங்கினோம்.

அங்கே வரவேற்க வந்திருந்த விநியோகஸ்தர்கள் எங்களை ஆனந்தக் கண்ணீர் மல்கக் கட்டிக் கொண்டு தட்டிக் கொடுத்தார்கள். ''விமான நிலையத்தில் விசாரித்த போது, 'சென்னை விமானத்துக்கு என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை; உங்கள் ஃபோன் நெம்பர் கொடுங்கள்; ஏதாவது தகவல் தெரிந்தால் ஃபோன் பண்ணுகிறோம்' என்றார்கள். எங்களுக்கு எப்படி இருந்திருக்கும், சொல்லுங்கள்!'' என்று அந்த விநியோகஸ்தர்கள் நாத் தழுதழுக்கப் பேசிய போதுதான், 'எவ்வளவு பெரிய விபத்திலிருந்து தப்பியிருக்கிறோம்' என்பதை முன்னிலும் தெளிவாக நாங்கள் உணர்ந்தோம்!

டைரக்டர் ஸ்ரீதர்

இந்தச் சம்பவத்தைத்தான் இப்போது பம்பாய் செல்லும் போது நான் நினைத்துக் கொண்டேன். அன்று எங்களைக் காப்பாற்றிய தெய்வ அருள் இன்றும் செயல்படப் பிரார்த்தித்தேன். சுமார் அரைமணி நேரம் எங்களைச் சோதனைக்கு உள்ளாக்கிய பிறகு, எங்கள் பிரார்த்தனைக்குத் தெய்வம் கட்டுப்பட்டதாகத் தோன்றியது. பம்பாயில் பத்திரமாக விமானம் தரை இறங்கியது.

சித்ராலயாவுக்குப் பம்பாய் புரொடக்ஷன் மானேஜர் மனோமோதி. நான் பம்பாய் செல்லும் போதெல்லாம் ஏர்போர்ட்டுக்குக் கார் கொண்டு வருவார். ஆனால் இன்று வரவில்லை. ஒரு செய்தி தான் காத்திருந்தது. ''கடுமையான மழை காரணமாக ஏர்போர்ட் வர முடியவில்லை. ஒரு டாக்ஸி பிடித்து ஹோட்டலுக்குச் சென்று விடவும். நாளை சந்திக்கிறேன்'' என்பதுதான் செய்தி!

மழைத் தண்ணீரில் படகு விடுவதுபோல் டாக்ஸி சவாரி செய்து தாஜ் ஹோட்டலை அடைந்த போது நள்ளிரவு ஆகி விட்டது.

இதையெல்லாம் நான் அபசகுனமாகக் கருதவில்லை. ஏனெனில் ஏற்கெனவே கல்கத்தா செல்கையில் அத்தனை பாடுபட்ட பிறகு, 'தில் ஏக் மந்திர்' அபார வெற்றி பெற்றிருந்ததே! அந்த மாதிரி ஒரு நிலை இந்த 'அவளுக்கென்று ஓர் மனம்' படத்துக்கும் ஏன் ஏற்படக் கூடாது!

பத்திரிகைக் காட்சிக்குத் தைரியமாகவே மனைவி குழந்தைகளுடன் போனேன். ஆனால் எனக்கு ஏமாற்றமே காத்திருந்தது. பத்திரிகையாளர்கள் யாருமே படத்தைப் பிரமாதமாகப் பாராட்டிப் பேசவில்லை. உபசாரமாக இரண்டொரு வார்த்தைகள் சொன்னார்கள், அவ்வளவுதான். எனக்குப் புரிந்து விட்டது. கதை அவர்களுக்குப் பிடிக்க வில்லை. கதை பிடிக்காத போது படம் எப்படி எடுபடும்? கதை என்ன தெரியுமா?

ஒரு பெண், தன் காதலை நிராகரித்தவனைப் பழி வாங்கும் நோக்கத்தில் வில்லனுடன் பழகி, பொறாமை உருவாக்க முயற்சி செய்கிறாள். வில்லனோ இந்தச் சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு, அவளுக்குக் குடிக்கக் கற்றுக் கொடுத்துப் பிறகு அவளை ''பிளாக் மெயில்'' செய்கிறான். ஒரு பெண் தான் விரும்பாமலேயே தன்னையுமறியாமல் எப்படி நாசமடையக்கூடும் என்பது மையக் கரு.

பத்திரிகையாளர்களைப் போலவே விநியோகஸ்தர்களுக்கும் படம் பிடிக்க வில்லை என்றாலும் பம்பாய் நகரில் துணிந்து வெளியிட்டார் என் ஆத்ம நண்பர் ராம் சாப்ரா. படமே சுமார் ; மழை சேர்ந்து கொள்ள, படம் படுதோல்வி!

பம்பாயில் படம் எப்படி ஓடுகிறது என்பதைப் பார்த்த பிறகுதான் இதர பகுதிகளுக்கு விநியோகஸ்தர்கள் பாக்கிப் பணம் தந்து படத்தின் பிரிண்டுகளைப் பெற்றுப் போவார்கள் என்று ஏற்கெனவே

* அவளுக்கென்று ஓர் மனம்



சொல்லியிருக்கிறேன். இப்போது படம் 'அவுட்' என்று தெரிந்ததும் அவர்கள் ''படம் வேண்டாம்'' என்றதுடன் அட்வான்ஸ் தொகையையும் திரும்பக் கேட்டார்கள்!

எனக்குப் பயங்கர அதிர்ச்சி! 'சித்ராலயாவுக்குப் பண நெருக்கடியான நிலையில் அதைச் சரிப்படுத்தும் நோக்கத்துடன் எடுக்கப்பட்ட இந்திப் படம் இப்படியாகி விட்டதே' என்று நினைத்த போது மனம் வாட்ட முற்றது. படத்தை வாங்காவிட்டாலும் போகட்டும்; அட்வான்ஸை அல்லவா திரும்பக் கேட்கிறார்கள். அந்தப் பெருந்தொகைக்கு எங்கே போக? எல்லாம் படத்தில் அல்லவா முதலீடு ஆகியிருக்கிறது? என்ன செய்வது இப்போது?

படம் உதவி : பிலிம் நியூஸ் ஆனந்தன்

திருப்புமுனை

“

என் நடன நிகழ்ச்சிகளுக்கு நிறைய மேடை வாய்ப்புக்கள் கிடைத்து வந்த சமயம். கூடவே வெளிநாடு சென்று மேல் படிப்பை மேற்கொள்ள வாய்ப்பு. இந்தச் சமயத்தில் எனது திருமணமும் நிச்சயமாகும் சூழ்நிலை! திருமணமா? அயல் நாட்டுப் பயணமா? நாட்டியமா? என்று தேர்ந்தெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன்.


✱ சுதாராணி ரகுபதி

திருமணம் செய்து கொண்ட பிறகும் குடும்ப வாழ்க்கைக்குப் பாதிப்பு இல்லாமல் முழு மூச்சுடன் நாட்டியத்தைத் தொடர வேண்டும் என்பது என் முடிவு. என்னுடைய நல்ல அதிர்ஷ்டம் இரண்டு தலைமுறைகளுக்கு முற்பட்டவரானாலும் பரந்த மனம் படைத்தவராக இருந்தார் என் கணவரின் பாட்டி. எனது ஈடுபாட்டைப் புரிந்து கொண்டு, எனது நாட்டியப் பயிற்சிக்கும் நிகழ்ச்சிகளுக்கும் ஆதரவு தந்து ஊக்குவித்தார். 'பரதாலயா' என்ற நடனப் பள்ளி நிறுவ குடும்பமே உதவியது. நான் மிகவும் விரும்பிய பாதையை எனக்குத் திறந்துவித்துத் திருப்புமுனையாக அமைந்தது எனது திருமணம்தான்.

”

– இப்படி சொல்பவர் சுதாராணி ரகுபதி

“

ஏழைக் குடும்பத்தில் பிறந்தேன். சிறு வயதிலேயே திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் விடப்பட்டேன். அங்கு வேதம் பயின்ற நாட்களில் நூலகத்திற்குச் செல்லும் வழக்கம் எனக்கு இருந்தது.

ஒரு புத்தகத்தில் 'கடலோரத்தில் ஆறு மாதம் குடியிருந்தால் பூசணிக்காய் அளவு தங்கம் பெறலாம்' என்ற வாசகத்தைப் படித்தேன். அதன் அர்த்தம் புரியாவிட்டாலும் அது மனத்தில் தங்கிவிட்டது.

பிற்பாடு, எனது இருபத்தோராம் வயதில் திருமலை தேவஸ்தானமே என்னை 110 பேரில் ஒருவனாக அமெரிக்கக் கோயி லில் பணிபுரிய அனுப்பி வைத்தது. அங்கே கோயில் சிலைகளை நிற்க வைத்துச் சமனப் படுத்திக் கொண்டிருந்தபோது நிகழ்ந்த விபத்தில் எனக்குக் கபாலத்தில் அடிபட்டு விட்டது. அறுவைச் சிகிச்சை செய்து, இனி வேலைக்கு லாயக்கில்லை என்று என்னைத் தாயகத்துக்குத் திருப்பியனுப்பிவிட்டார்கள். மீண்டும் வேதம் படிக்க ஆரம்பித்தேன்; பத்மபூஷண் பட்டம் பெற்றேன். ஆனால், வருவாய்க்கு வழியில்லை. பள்ளிப் பருவத்தில் இரண்டு குழந்தைகள், மனைவி, இவர்களுடன் கௌரவமாக வாழ்க்கை நடத்துவது பெரிய போராட்டமாக இருந்தது. இந்தச் சமயத்தில் 'கடலோரத்தில் குடியிருந்தால்....' என்ற வரி நினைவு வர, வந்தது வரட்டும் என்று கடற்கரை வீடு ஒன்றிற்குக் குடிபெயர்ந்தேன். அங்கே குடியேறிய சில நாட்களில், வெண்சங்கு, கிளிஞ்சல்கள் போன்றவற்றை மீனவர்களிடமிருந்து வாங்கி, விற்கும் தொழிலில் ஈடு பட்டேன். வியாபாரம் மிக வெற்றிகரமாக நடந்து இப்போது சௌகரியமாய் வாழ்கிறேன்.


✱ சர்மா

நூலகத்தில் படித்த பழமொழிக்கு முழு அர்த்தம் புரிந்தது. என் வாழ்க்கையில் திருப்புமுனையை ஏற்படுத்தியது; அந்தப் பழமொழிதான்.

”

- எனக் கூறுபவர் ஆர்.கே. சர்மா

“

வேலையில்லாப் பட்டதாரிக்குக் கிடைக்கும் 'மரியாதை'யை விவரிக்கத் தேவையில்லை! ஒரு நாள் தந்தையின் கடு சொற்கள் தாளாமல் நண்பனிடம் ஆறுதல் தேடிச் சென்றேன். அவன் நிலைமையைப் பார்த்த பிறகு என் பாடே தேவலாம் என்று தோன்றிவிட்டது. நண்பனுக்கும் வேலை



யில்லை. எனினும் வற்புறுத்தி அவனுக்குத் திருமணம் செய்து வைத்த அவன் தந்தை, சம்பாத்தியம் இல்லை என்ற ஒரே காரணத்துக்காக அவனை நாயைவிடக் கேவலமாக விரட்டிக் கொண்டிருந்தார்! அந்த எள்ளல் தான் என் வாழ்வில் திருப்புமுனையை ஏற்படுத் தியது. பணம் இல்லாவிட்டால் சொந்த பெற்றோர் கூட மதிப்பதில்லை என உணர்ந்தேன். துணிச்சலை வரவழைத்துக் கொண்டு சென்னைக்கு வந்தேன். பல தடைகளைத் தாண்டி சுயதொழில் ஆரம்பித்தேன். இன்று ஐம்பது லட்சம் ரூபாய் பெறுமான முள்ள அச்சகத்தின் அதிபராய் இருக்கிறேன்...

”

- எனக் கூறுபவர் சங்கரநாராயணன்

தொகுப்பு : ப்ரியா



"பத்திரிகைக் காரங்களையே புரிஞ்சிக்க முடியலைப்பா..."

"ஏன்?"

"முன்னூறு பக்க நாவலுடன் மூன்று பக்க 'சினாப்ஸிஸ்' அனுப்பி இருந்தேன். நாவலைத் திருப்பிட்டு, சினாப்ஸிசை சிறுகதையாய்ப் போட்டுட்டாங்க...!"

- ஆர். வசந்த குமார்.



"நம்ம கூட்டத்துக்கு மலிவு விலைல ஆட்களைக் கூட்டிட்டு வந்தியா?"

"எதை வச்சுச் சொல்றீங்க?"

"அப்பப்ப கை தட்டணும்கிறத மறந்துட்டு இப்படி பெருசு பெருசா கொட்டாவி விடறாங்களே!"

- அம்பை தேவா.

●● சூரியன் போகாத இடத்திற்கு வைத்தியர் போகிறார்.

- இத்தாலி

●● நல்ல காற்று ஆயிரம் மருந்துக்குச் சமம்.

- ஜப்பான்

●● உங்களுக்காகப் பொய் சொல்லுபவன், உங்களுக்கு எதிராகவும் பொய் சொல்லுவான்.

- அமெரிக்கா

●● இரண்டு மொழிகள் தெரிந்தவன் இரண்டு மனிதர்களுக்குச் சமம்.

- பிரான்ஸ்

க. இரமேஷ் குமார்



'ஏஜ்' நேற்று கவர்னரைக் காணச் சென்றது ஏன்?

● சே. சத்தியநாராயணன், வேலூர்.

? கல்கி பொன் விழா பற்றி அடுத்த வாரமே விகடனில் வருகிறது; குமுதத்தில் வருகிறது; கல்கியில் அதற்கடுத்த வாரம்தான் வருகிறது, ஏன்?

! ஓரிரு பக்கங்கள் ஒதுக்கினால் போதும் என்றால் கடைசி நிமிஷத்தில் சுருக்கமாக எழுதிச் சேர்த்து விடலாம். ஆனால் விரிவான கட்டுரை வண்ணப் படங்களை மேலட்டையிலும் தாங்கி வெளிவர வேண்டும் என்று விரும்பிய தால் தாமதம்.

● எஸ். பங்கஜம், மன்னார்குடி.

? பார்சிலோனாவில் கபடி போட்டி இருந்திருந்தால் தங்கம் வாரி இருப்பார்களா?

! அதற்கு அரசியல்வாதிகள்தான் போக வேண்டும், காலை வாரி விட்டு தங்கத்தை வாரி வர!

● தென்றல் கார்த்தி, நாட்டரசன்கோட்டை.

? "பார்சிலோனா ஒலிம்பிக்ஸில் ஒரு பதக்கம் கூட இந்திய அணி பெறாததற்கு அமைச்சர் அர்ஜுன் சிங் பொறுப்பேற்க வேண்டும்" என்று ஜே. கே. ஜெயின் கூறுகிறாரே?

! தார்மீகப் பொறுப்பு ஏற்பதென்றால் ராஜினாமா செய்ய வேண்டியதுதான். ஆனால் அப்படியெல்லாம் செய்து நரசிம்மராவுக்கு நிம்மதி அளித்து விட மாட்டார் அர்ஜுன் சிங். கூடவே இருந்து குடைந்து கொண்டிருப்பார். கேட்டால் "கருத்துச் சுதந்திரம்" என்பார். கட்சிக்குள் கருத்துச் சுதந்திரம் என்பது வீதிக்கு வந்து குற்றம் சாட்டுவது அல்ல என்பதை வசதியாக மறந்து விடுவார்.

● ப. வேங்கடேசன், கொளப்பாடு.

? வெறும் கையை வீசிக்கிட்டு விமானம் ஏறி வரும் ஒலிம்பிக் இந்திய வீரர்களுக்கு உங்கள் அறிவுரை என்ன?

! சோர்வடையாதீர்கள். என்ன தவறுகள் என்று சிந்தித்துப் பாருங்கள். அடுத்த ஒலிம்பிக்ஸுக்கு இப்போதே தயாராகுங்கள். பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள். தோல்வியை மன்னிக்கலாம்; ஆனால் தோல்வியை வெற்றியாக மாற்றக்கூடிய முயற்சி இன்மையை மன்னிப்பதற்கில்லை.

● பி. ஜெயப்பிரகாஷ், நவமலை.

? "எம். ஜி. ஆரிடமிருந்த பெருந்தன்மை ஜெயலலிதாவிடம் இல்லை" என்று வாழப்பாடியார் கூறியது பற்றி...?

! அதை எதிர்பார்த்தது வாழப்பாடியாரின் தவறு. காந்தி முதல் காமராஜர் வரை காங்கிரஸ் பெருந்தலைவர்களிடம் இருந்த பெருந்தன்மையை வாழப்பாடியாரிடம் நாம் எதிர்பார்க்கவா முடியும்!

● பா. ரவிச்சந்திரன், அசூர்.

? உலக அழகிப் போட்டியில் மூன்றாவது பரிசைத் தட்டி வந்திருக்கிறாரே, மது சாப்ரே?

! ஒலிம்பிக்ஸில் இந்தியா பதக்கம் ஏதும் பெறாததற்குக் காரணம் புரிந்து விட்டது. ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் அழகிகள் போட்டி இல்லாததுதான் காரணம்! ஒரு வெண்கலமாவது கிடைத்திருக்கும்! ஹூம்!

● பாலசுப்பிரமணியன், செங்குன்றம்.

? ஹர்ஷத் மேத்தா ஊழல் செய்து சம்பாதித்த பணத்தை சோனியா காந்தி பெறுவது எவ்வகையில் நியாயம்? (தராசு பதில் : 9.8.92 கல்கி)

! பெற்றுக் கொண்டது சோனியா அல்ல. நல்ல காரியங்கள் செய்ய அவர் தொடங்கியுள்ள அறக்கட்டளையே. திருப்பதி உண்டியலில் ஒரு லட்சம், ஐந்து லட்சம் என்று பணமுடிப்பு விழுகிறது. நல்லபடியாக சம்பாதித்த பணம் என்பதற்கு உத்தரவாதம் ஏது? செய்த பாவத்துக்குப் பிராயச்சித்தமாகக் கூடப் போடப்பட்டிருக்கலாம். அந்தப் பணம் நிராகரிக்கப்படுகிறதா? இல்லையே! திருப்பதி தேவஸ்தானம் நடத்தும் எத்தனையோ பல நற்பணிகளுக்குப் பயனாகிறது. அது போலத்தான் இதுவும்.

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? கூட்டுறவுத் தேர்தல்களை ஒத்திவைக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பது தமிழக அரசுக்கு விழுந்த அடிதானே?

! நிச்சயமாக. அதை விடவும் வேதனை, கூட்டுறவு தத்துவத்துக்கு அடுத்தடுத்து விழுந்து வரும் அடிகள். அண்ணா சொன்னார், நகராட்சித் தேர்தல்களில் கட்சி அரசியலை ஒதுக்கி நல்லவர்களை - சேவா மனப்பான்மை கொண்டவர்களை - நிறுத்தி மக்களை வாக்களிக்கச் செய்வோம் என்று.

இன்று கூட்டுறவுத் தேர்தல்களி
லும் அரசியலும் கூடவே ஊழ
லும்தான் புகுந்து கொண்டிருக்
கிறது. அண்ணா வழி வந்த
வர்கள் அப்படி அவர் சொல்
கேட்டு நடந்து கொள்கி
றார்கள்!

● வி. ரெங்கநாதன், திருச்சி.
? ஜெயலலிதா திடீரென
கவர்னரைக் காணச் சென்றது
குறித்து?
! முன் அறிவிப்பு இன்றி,
பாதுகாப்புப் பட்டாளமும்
இன்றிச் சென்றதுதான் பல
வகைப் பேச்சுக்களுக்கும்
காரணமாகி விட்டது. ஆனா
லும், ''ராஜினாமா சமர்ப்பித்
தார்; ஆளுனர் ஏற்கவில்லை''
என்ற கூப்பாடு நம்பும்படி
இல்லை. அ.தி.மு.க. ஆட்சி,
அவரின்றி ஒருநாள் கூட
நிலைக்காது.

● கு. நாகராஜன்,
தருசாமிபாளையம்.
? ''புதுக் கட்சி தொடங்கும்
உத்தேசம் இல்லை'' என்று
மூப்பனார் கூறியுள்ளாரே?
! பழுத்த காங்கிரஸ்வாதியான
அவர், அதை விட்டு விலக்கப்
பட்டால் கூட வேதனை அடை
வாரே தவிர, வேறு கட்சி
தொடங்குவார் என்று கருத
இடமில்லை. ஆனால் அவர்,
தேசபக்தி வளர்க்க, ஒருமைப்
பாடு உறுதி செய்ய, ''தேசிய
மன்றங்கள்'' தொடங்குமாறு
சொன்னதே ஆபத்தாகி விட்
டது! அதைக் கூட காங்கிர
ஸுக்குப் போட்டியாக ஒரு
கட்சி என்பது போல் திரித்து,
மேலிடத்தில் வத்தி வைத்து...
ம்ஹூம் சரியில்லை,
போங்க.

● எஸ். அருண், காரைக்கால்.
? ஒலிம்பிக்ஸ் முடிவுகள்
பற்றி...?
! பல்வேறு நாடுகளாக
உடைந்து பிரிந்தாலும் ஒலிம்
பிக்ஸைப் பொருத்தமட்டில்
ஒரே அணியாக நின்று, பதக்
கங்களைக் குவித்துக் கொண்ட
ரஷ்யாவின் ராஜதந்திரம்
அமெரிக்காவின் முதலிடம்
பெறும் ஆசையில் மண்ணைக்
காட்டி விட்டது.

● ஆர். திருநீலகண்டன்,
வப்பத்தூர்.
? தமிழக அரசு கொடுக்கும்
இலவச வேட்டி சேலை,
கொசு வலை மாதிரி உள்ளது
பற்றி?

! புரட்சித் தலைவியின் புது
மைத் திட்டம் அது! ஒரே கல்
லில் இரண்டு மாங்காய்!
சேலைக்குச் சேலை! கொசு
வலைக்குக் கொசு வலை! இல
வச கொசு வலை வழங்கும்
திட்டம் என்று தனியே ஒன்று
தேவையில்லை பாருங்கள்!
நோய் நொடிகள் குறையும்.
''சுகாதார வசதி செய்து
கொடுப்பதில் தமிழ்நாடு மற்ற
மாநிலங்களை விட வேகமாக
வளர்ச்சி அடைந்து வருகிறது''
என்று முதல்வர் கூறியதும்
உண்மையாகும்!











● ரா. ரமேஷ்பாபு, லால்குடி. ❑
? பங்கு மார்க்கெட் ஊழல்
பற்றி விசாரிக்க அமைக்கப்
பட்டிருக்கும் பார்லிமெண்ட்
கூட்டுக் குழு முறையான விசா
ரணை நடத்துமா?

! எங்கே, போஃபர்ஸ் விவ
காரத்திலேயே கோட்டை
விட்டவர்கள்; அதை விடச்
சிக்கலான இந்தப் பொரு
ளாதார விஷயத்தைப் புரிந்து
கொண்டு, சிடுக்கு எடுத்து,
பலானவர்களின் மழுப்பல்
முயற்சிகளை முறியடித்து...
ம்ஹூம், எனக்குத் தோணலை
வெற்றி பெறுவார்கள் என்று.

● தி. மா. தமிழழகன், திருச்சி.
? ஒலிம்பிக்ஸில் மறக்க
முடியாதது?
! தொடக்க தினத்தன்று
விடப்பட்ட தீநாக்குடன்
கூடிய அம்பு, தொலை தூரம்
மேல் நோக்கிச் சென்று, ஒலிம்
பிக் தீப்பந்தக் கலயத்தில் குறி
பிசகாமல் விழுந்து, அதனைப்
பற்றி எரியச் செய்த காட்சி -
அடுத்த ஒலிம்பிக்ஸ் வரை
நினைவிருக்கும். குறி பிசகி
னால் இயக்கத் தயாராக
இருந்த பட்டன் ஸ்விட்சுக்கு
அவசியமில்லாமலே போய்
விட்டதே!

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
ரா. ரமேஷ்பாபு,
34, புதுத் தெரு,
லால்குடி - 621 601.

எடை குறைய பூமத்திய ரேகைக்குச் செல்லுங்கள்!



!! செயில் ஃபிஷ் (sail fish) என்ற மீன் வகை, மிக வேகமாக நீந்த வல்லது. சிறுத்தைப் புலி ஓடும் மணிக்கு எழுபது மைல் வேகத்தில் இந்த மீனும் நீந்துகிறது.

◆ ◆ ◆


!! Alligator snapping turtle என்ற ஆமையின் நாக்கில் நீண்ட புழு போன்ற வடிவத்தில் கோடு காணப்படும். இந்த ஆமை நாக்கை நீட்டும் போது, 'புழு' வைப் பிடித்துத் தின்ன நெருங்கி வரும் மீன்கள், உணவு அருந்துவதற்குப் பதில் உணவாகவே மாறி விடும்.

◆ ◆ ◆

!! உலகின் பத்தாயிரம் வகைப் புழுக்கள், நீர், மண், தாவரங்கள், மிருகங்களின் உடல் என்று பல்வேறு இடங்களை உறைவிடமாகக் கொண்டு கொழிக்கின்றன. ஒரு பிடி தோட்ட மண்ணில் ஆயிரம் புழுக்கள் வரை இருக்கும்.

◆ ◆ ◆

!! நாம் அசையாமல் நிற்கும் போது கூட அதிவேகமாகப் பயணம் செய்து கொண்டிருக்கிறோம். மணிக்கு ஆயிரம் மைல் வேகத்தில் சுழலும் பூமி, மணிக்கு



66,700 மைல் வேகத்தில் சூரியனையும் வலம் வருகிறதே... அதனால், அசையாமல் நின்றாலும் நாம் பிரயாணம் செய்து கொண்டு தான் இருக்கிறோம்.

◆ ◆ ◆

!! ஒரு பெரிய பூகம்பத்தின் போது வெளிப்படும் எரிசக்தி இருநூறு மில்லியன் டன் அளவு டைனமைட் வெடிக்கும் போது வெளிப்படுவதற்கு ஒப்பானது; முதன் முதலில் பரிசோதிக்கப்பட்ட அணுகுண்டின் சக்தியைவிட, பத்தாயிரம் மடங்கு அதிகமானது.

◆ ◆ ◆

!! பூமியின் மையக் கருவிலிருந்து நாம் விலக விலக, புவியீர்ப்புச் சக்தி மட்டுப்படுவதோடு அதனால் நமது உடல் எடையும் குறைகிறது. பூமத்திய ரேகையின் அருகே பூமியின் மேல் பரப்பு உப்பி, மையக் கருவிலிருந்து விலகி இருப்பதால் அங்கே புவியீர்ப்புச் சக்தி குறைவு. வட துருவத்திலோ தென் துருவத்திலோ நிற்பவரைக் காட்டிலும் பூமத்திய ரேகையருகே நிற்பவர் ஐந்து சதவிகிதம் எடை குறைவாக இருப்பார்!

◆ ◆ ◆

!! பூமியைக் கால் நடையாக ஒருமுறை வலம் வர, சராசரி மனிதனுக்கு ஓர் ஆண்டுக் காலம் ஆகும். இதையே கடல் அலை அறுபது மணி நேரத்திலும் ஒரு துப்பாக்கித் தோட்டா 14 மணி நேரத்திலும், ஓர் ஒளிக் கற்றை வினாடியின் பத்தில் ஒரு பங்கு நேரத்திலும் சாதிக்கும்.

அட, அப்பாடியா!

தொகுப்பு : உதய் லால்

பம்பாய்க் கடிதம்

பவாரும் பவர் போராட்டமும்



ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் வீடு கட்ட, மஹாராஷ்டிர அரசாங்கம் மனை ஒதுக்கிய முறை தவறானது என்று பம்பாய் ஹைகோர்ட் சமீபத்தில் தீர்ப்பளித்ததை அடுத்து, அப்போதைய முதன் மந்திரியாக இருந்த பவார் சோதனைக்கு உள்ளாகி இருக்கிறார். எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 36 எம்.பிக்கள், பவார் ராஜினாமா செய்ய வேண்டுமென்று பிரதமருக்கு ஒரு கோரிக்கை விடுத்தனர். பம்பாயின் தற்போதைய முதல்வர் சுதாகர் ராவ் நாயக் இது விஷயமாக மௌனம் சாதிப்பது ஏன் எனப் பவார் ஆதரவு எம். எல். ஏக்கள் கேட்கின்றனர். தமது நாற்காலிக்கு ஆபத்து வருமோ எனப் பயந்த நாயக், உடனே சட்டமன்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் கூட்டத்தில், பவாரை எதிர்க்கும் தீய சக்திகளைக் கண்டனம் செய்தார். இதற்கிடையே மனை பதி போன ஐ. ஏ. எஸ். அதிகாரிகள், இதே மாதிரி நீதிபதிகளுக்கும் முன்பு மனை வழங்கப்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்!



அனுபம் கேர்

'நட்சத்திர' மோதல்!

பம்பாய் சினிமா நடிகர்களுக்கும், பம்பாய் சினிமா பத்திரிகையாளர்களுக்கும் கடந்த இரண்டு மாதமாக நிழல் யுத்தம் நடக்கிறது. 'ஸ்டார் டஸ்ட்' பத்திரிகையில், பிரபல நடிகர் 'அனுபம் கேர்' பற்றி எழுதியிருந்த செய்தியால் கோபமடைந்த அந் நடிகர், பத்திரிகையாளரை அறைந்ததில் ஆரம்பித்தது இந்த விவகாரம். கேரின் கோபம் நியாயமானது எனக் கருதிய பல நடிகர்கள் மறைந்த நடிகர் அம்ஜத்கானின் வீட்டில் கூடினார்கள். அது சினிமா பத்திரிகைகளுக்கு எந்த நடிகரும் பேட்டியோ, புகைப்படமோ கொடுக்கக் கூடாது எனத் தீர்மானித்தனர். பிலிம்பேர், மற்றும் வேறு சில பத்திரிகைகள் இதற்கு விதிவிலக்கு!

ஸ்டார் டஸ்ட் ஆசிரியர் ரீட்டா மேத்தா மற்றும் பிற பத்திரிகைகளின் ஆசிரியர்கள் இதைப் பற்றிக் குறிப்பிடுகையில், ''இந்த பகிஷ்காரம் சில நாட்களுக்கு மேல் செல்லாது. நட்சத்திரங்கள் தங்களைப் பற்றி எழுதப்பட வேண்டுமென்றே எதிர்பார்க்கிறார்கள். அதனால் அவர்களால் பத்திரிகை உலகை வெகு நாட்களுக்குப் பகைத்துக் கொண்டிருக்க முடியாது...'' என்று கூறியுள்ளனர்.

நீதிமன்றத்தின் மீதே வழக்கு!

ஆகஸ்ட் 4-ம் தேதி பம்பாய் உயர்நீதிமன்றத்தில் ஒரு விசித்திர வழக்கு விசாரணைக்கு வந்தது. குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டது நீதிமன்றமே! எழுத்தர் வேலைக்கு நீதிமன்றம் விளம்பரம் கொடுத்ததை எதிர்த்து இவ் வழக்கு தொடுக்கப்பட்டது. 1986-ல் இதே வேலைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 258 பேர்கள் இன்னமும் நியமன உத்தரவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் போது, இந்தப் புதிய விளம்பரம் எதற்கு என்று கோரி வழக்கைத் தாக்கல் செய்திருக்கின்றனர் பாதிக்கப்பட்டவர்கள்!

ஐக்கிய உலகக் கல்லூரி

ஐக்கிய உலகக் கல்லூரி மஹாராஷ்டிராவில் கூடிய சீக்கிரம் நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஏழு அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் இக் கல்லூரிகள் ஏற்கெனவே நிறம்படச் செயல்பட்டு வருகின்றன. எட்டாவதாக ஹாங்காங்கிலும், ஒன்பதாவதாக இந்தியாவிலும் நிறுவ ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

- அம்ருதா பார்த்தசாரதி



அன்புக்கு ஓர் அனந்தநாராயணன்

கல்கி நிறுவனத்தின் செயல் இயக்குனர் (Executive Director) பதவியை வகித்துப் பெருமையுற்ற ஆர். அனந்த நாராயணன் அண்மையில் காலமானார் என்பதை மிகுந்த மன வருத்தத்துடன் இங்கு பதிவு செய்கிறோம்.

மிகப் பெரிய, ஆனால் எளிய குடும்பத்தில் பிறந்த அனந்த நாராயணன், பதினாறாவது வயதிலேயே சதாசிவம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரை மேற் கொண்டு படிக்க வைத்தபோதே, அனுபவ அறிவும் ஊட்டினார் சதாசிவம். அந்த ஆரம்ப நாட்களில் மிகச் சாதாரண பணிகளையும் கூட பொறுப்புணர்வுடன் செய்து முடித்த அவரிடம் படிப்படியாகப் பல புதிய, பெரிய பொறுப்புக்கள் வந்து சேர்ந்ததில் வியப்பில்லை. ''அனந்த்'' என்று பலராலும் அன்புடன் அழைக்கப்பட்ட அவர், நாளடைவில் பங்குதாரர்களில் ஒருவராகவும், இயக்குனராகவும் உயர்ந்தார். சதாசிவத்தின் மருமகள் (சகோதரி மகள்) மங்களத்தின் கரம் பற்றினார்.

தமிழ்ப் பத்திரிகை உலகிலேயே முதன் முதலாகப் பல வண்ண வெப் ஆஃப்செட் அச்சு இயந்திரம் கல்கி காரியாலயத்தில்தான் நிறுவப்பட்டது. அதனை விலை பேசிப் பெற்று வர, பம்பாய் கண்ணனையும் அனந்த நாராயணனையும்தான் ஜெர்மனிக்கு அனுப்பி வைத்தார் சதாசிவம்.

ஸ்ரீமதி எம். எஸ். அவர்கள் மீராவாகத் தோன்றிய பக்த மீரா திரைப்படத்தை சதாசிவம் எடுத்த போது, படப்பிடிப்புக் குழுவுடன் வட இந்தியாவின் பல இடங்களுக்கும் சென்று வந்தார், அனந்த். அந்த நாட்களில் மேக்-அப் டச் அப் செய்வதிலிருந்து காப்பி ஆற்றிக் கொடுப்பது வரை பல பணிகளையும் முகம் சுளிக்காமல் செய்வார்.

'என்ன காரியம் செய்கிறோம் என்பது முக்கியமல்ல; எப்படி செய்கிறோம் என்பதே முக்கியம்' என்ற கருத்தில் எதையும் ஈடுபாட்டுடன் செய்த அனந்துக்கு ஒரு பாக்கியம் கிட்டியது. மகாத்மா காந்தி ''ஹரி தும ஹரோ'' என்ற மீரா பஜனை ஸ்ரீமதி எம். எஸ்.ஸின் குரலில் பதிவு செய்து கேட்க வேண்டும் என்று விரும்பினார். இரவோடு இரவாக மெட்டமைத்துப் பாடிப் பதிவு செய்தார் எம். எஸ். அந்த இசைத் தட்டை எடுத்துக் கொண்டு டில்லி சென்று அண்ணலிடம் சமர்ப்பித்து, அவர் கேட்டு மகிழ்வதை நேரில் கண்டு ஆசி பெறும் பாக்கியம் அனந்துக்குக் கிடைத்தது.

இளகிய மனமும் பரோபகார சிந்தையும் உடைய அனந்த், காஞ்சிப் பெரியவரிடம் அளவற்ற ஈடுபாடு கொண்டிருந்ததுடன் சென்னை ஆஸ்திக சமாஜத்திலும் தம்மை இணைத்துக் கொண்டு உதவி வந்தார்.

எளிய குடும்பத்தில் பிறந்தாலும் உழைப்புத் திறனாலும் சீரிய உள்ளத்தாலும் உன்னத நிலைக்கு உயர முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் ஆர். அனந்த நாராயணன்.

அவர் ஆன்மா சாந்தி அடைய கல்கி நிறுவனத்தில் பணியாற்றும் அனைவரும் பிரார்த்திப்பதோடு, அவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தினர் அனைவருக்கும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் : ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

டீப் ஸ்பிரிங்

பிரீமியம் மினரல் வாட்டர்

இதில் மறைந்துள்ள மர்மங்கள் எதுவும் கிடையாது!

டீப் ஸ்பிரிங் - சுத்தமானது: சுகாதாரமானது: உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்காது என்ற நம்பிக்கையோடு பயன்படுத்த வல்லது: தாது உப்புகள் நிறைந்தது.

மேலும் - இது ஒரு பிரபலமான கம்பெனியின் பிரத்தியேகத் தயாரிப்பு.

மீண்டும் பயன்படுத்தக் கூடிய 1 லிட்டர் 'பெட்' பாட்டில்களிலும் கிடைக்கிறது



இதை விடத் தூயநீர் இருப்பது அரிது.

தயாரித்து விநியோகிப்பவர்கள்:

ஸ்ரீராம் சேல்ஸ் இன்டர்நேஷனல்
1, கிளப் ஹவுஸ் ரோடு, மவுண்ட் ரோடு,
சென்னை-600 002.

SHRIRAM GROUP COMPANIES MADRAS

HEALTH FOR ALL BY 2000 A.D.

டீப் ஸ்பிரிங் – ஸ்ரீராம் குருப்பின் தரமான தயாரிப்பு

AAA SSI/9270 T

REGISTERED NO. M. 4393
Registered as Newspaper in Srilanka

இவர்கள் அனைவரும் உங்கள் இல்லத்திற்கு வந்தால்,
அவர்கள் பருக எதை வழங்குவீர்கள்...



ஒவ்வொரு சாகர் ஸ்கிம்ட் மில்க் பவுடர் பேக் உங்களுக்கு வளமான புரதச் சத்துள்ள $5^1/_4$ லிட்டர் பாலைத் தருகிறது ஆம்! இத்தனை எளிதாக இவ்வளவு பாலை நீங்கள் இதுவரை தயாரித்தது இல்லை. அபரிமிதமான பாலைப் பெற, இன்றே வாங்குங்கள் சாகர்.

குஜராத் கோ ஆபரேடிவ் மில்க் ஃபெடரேஷன் லிட்., ஆனந்த் 388 001

ASP-SSMP-107/92 TAM